உ

# ஞானத்தமிழ்



வ. [illegible]சர்மா அவர்கள்

உ

# ஞானத்தமிழ்

பௌராணிக வித்தகர்
வ. குகசர்மா அவர்கள்

1979


வெளியீடு :
இந்துசமய விருத்திச் சங்கம்
தெல்லிப்பழை

அச்சுப்பதிவு :
குகன் அச்சகம் - தெல்லிப்பழை

சித்தார்த்தி ஆடி 20
1979 - 08 - 05

உ

சிவமயம்



பௌராணிக வித்தகர்

வ. குகசர்மா அவர்கள்

# வாழ்த்து உரை

பேராசிரியர் கா. கைலாசநாதக்குருக்கள் அவர்கள்
இந்துநாகரிக பீடத் தலைவர்
பல்கலைக் கழகம், யாழ்ப்பாணம்.

"ஞானத் தமிழ்" என்னும் இந்நூல் நாற்பத்தி நாலு கட்டுரைகளைக்கொண்ட ஒருதொகுதி. பிரமஸ்ரீ வ. குகசர்மா அவர்களால் எழுதி உருவாக்கப்பட்ட இக்கட்டுரைகள் ஈழநாடு பத்திரிகையில் அவ்வப்போது வெளிவந்தவை.

பௌராணிகவித்தகர் குகசர்மா அவர்கள் முதன்முதலாக கட்டுரைகள் மூலமே எனக்கு அறிமுகமாயினர். அறிமுகமாகாத நிலையிலேயே அவரது கட்டுரைகளைப்படிக்கும் சூழ்நிலை எனக்கு ஏற்பட்டது. இலக்கிய இலக்கணங்களில் புலமை, சமய நூல்களில் தேர்ச்சி என்பன இவரது கட்டுரைகளின் அடிப்படைகளாக விளங்கியதைக் கவனித்து வரலானேன். மரபிலிருந்து வழுவாத பண்பை அவரது கட்டுரைகளில் எப்பொழுதும் காணலாம்.

நூலாசிரியருக்குப் புராணங்களில் பயிற்சி உண்டு என்பதை நேரடியாக அவருடன் பழக நேரிட்டபொழுது மிகவும் நன்றாக அறியநேர்ந்தது.

புராணங்களைப் படித்துப் பயன்சொல்லும் மரபு மறைந்து கொண்டே வரும் இற்றைய நிலையில், ஆறுமுகநாவலரவர்கள் வளர்த்த புராணபடனபாரம்பரியத்தை இன்று பேணிவருபவர்களுள் இவர் தலைசிறந்தவர்.

சமயக் கருத்துக்களைப் புராண அடிப்படையில் மட்டுமே எளிதாகப்பரப்பலாம். புராணங்களில் பெற்ற புலமையையும் இலக்கண இலக்கியப் பயிற்சியையும் துணைக்கொண்டு சர்மா அவர்கள் சிறந்த கட்டுரைகளை அவ்வப்போது யாத்து ஈழநாட்டில் வெளியிட்டு வந்தார்கள்.

கட்டுரை ஒவ்வொன்றும் ஒவ்வொரு கருத்தை நாடுவதாகக் கொண்டு அமைவது. கட்டுரைகளில் கருத்துக்கள்

தெளிவாக எடுத்துரைக்கப் பெறுகின்றன. சைவத் திருமுறைகளில் மட்டுமன்றி திவ்வியப்பிரபந்தகளிலும் புயிற்சி இருப்பதை கட்டுரைகள் ஆங்காங்கே உணர வைக்கின்றன. அவர்கள் ஆங்காங்கே தரும் உவமைகள் அவர் கட்டுரைகளை நயந்து படிக்கும் படி தூண்டுகின்றன.

சிறு அமைப்பைக் கொண்ட கட்டுரைகள் எளிய நடையில் அமைந்து தெளிவுடன் கருத்துக்களைச் சிந்திக்க குழப்பமெதுவும் விளைவிக்காத முறையில் எடுத்துக்கூறுவதினால் வாசிப்பவர்கள் மனதில் எவ்விதமான சலிப்பையும் உண்டாக்குவதில்லை. ஒரு கட்டுரையை வாசித்து முடித்ததும் வாசகர்கள் மறு கட்டுரையையும் வாசிக்கும்படி தூண்டப்படுகிறார்கள்

சமயத்தைப் பாடமாகக் கொண்டு கற்கும் மாணவருக்கும் சமய அறிவை வளர்க்கப் பயன்படுவது இக்கட்டுரைத் தொகுதி சமயம் கற்பிக்கப்படும் பாடசாலைகளில் இக்கட்டுரைத் தொகுதியைத் துணைநூலாக வாசிக்கச்செய்து ஆசிரியர்கள் மாணவர் மாட்டுச் சமய அறிவை விரிவாக வளர்ப்பதற்குத் தகுந்த நூல்.

இதுபோன்று பல நூல்களைச் சைவ உலகம் எதிர்பார்க்கின்றது. இத்தன்மையான சைவத்தொண்டினைச் செய்வதற்கு ஏற்ற ஆயுளையும், திடகாத்திரத்தையும் அருளும்படி இறைவனைப் பிரார்த்தித்து நூலாசிரியரை வாழ்த்துகின்றேன்.

உ

# சிறப்புரை

பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்கள்
துணைவேந்தர், யாழ்ப்பாணம் சர்வகலாசாலை.

பௌராணிக வித்தகர் பிரமஸ்ரீ வ. குகசர்மா அவர்கள் ஈழநாடு பத்திரிகையிலே தான் எழுதி வெளிவந்த 44 கட்டுரைகளைத் தொகுத்து, "ஞானத் தமிழ்" என்னும் பெயருடன் நூலாக வெளியிடுகின்றார். சைவ நாயன்மார்கள், வைணவ ஆழ்வார்கள், சமண முனிவர்கள் ஆகியோர் ஞான உயர்வுக்கு வழிகாட்டியாகப் பாடிய பாடல்களிலே தான், சுவைத்தவற்றை எடுத்துக்காட்டி இக் கட்டுரைகளிலே விளக்குகின்ற காரணத்தினாலே இந் நூலுக்கு "ஞானத்தமிழ்" என்னுந் தலைப்புப் பொருத்தமாக அமைந்துள்ளது.

ஒவ்வொரு கட்டுரைத் தலைப்பும் ஒவ்வொரு பக்திப் பாடலின் அடியாக அல்லது சொற்றொடராக அமைகின்றது. அப் பாடலடி அல்லது அச் சொற்றொடர் இடம்பெறும் பாடல் முழுமையாகக் கட்டுரையின் இறுதியிலே தரப்படுகின்றது. இது இந்நூலிலே காணப்படும் ஒரு முக்கியமான ஒழுங்கமைப்பாகும்.

தமிழ் மொழியிலே உள்ள பக்திப் பாடல்கள் யாவற்றையும் எல்லோரும் படித்தறிவதென்பது இயலாத விடயமாகும். எனினும், அப்பாடல்களிலே கருத்துச் செறிவும், இலக்கிய நயமும், ஆன்மீகப் பண்பும் செறிந்து விளங்குஞ் சில பாடல்களை யாவது கற்றறிவது பயனுடைத்தாகும். அத்தகைய பயனைப் பயக்கும் வண்ணமாக அமைகின்றது ஞானத்தமிழ் என்னும் இந் நூல். ஒவ்வொரு கட்டுரையிலும் ஒரு சிறந்த பாடலின் கருத்துச் செறிவும் இலக்கிய நயமும் எடுத்துக்காட்டப்படுகின்றன. "முண்டக மொன்றில் வைகும் முருகனை......." என்னுஞ் செய்யுளை அடிப்படையாகக் கொண்டு "உள்ளக் கமலம்" என்னுங்கட்டுரை அமைகின்றது. கட்டுரையைத் தொடங்கும் ஆசிரியர்,

"பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை" என்றார் நாவுக்கரசர். மனிதனுக்கு உயர்வைக் கொடுப்பது உள்ளம்.

"வெள்ளத்தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத்தனைய உயர்வு."

என்று திருவள்ளுவர் கூறினர். இதனைப்போலும் ஆன்றோர் உள்ளத்தைத் தாமரை மலருக்கு உவமித்தனர்.

என்று எழுதிச் செல்கிறார். ஒரு பாடலை அடிப்படையாக வைத்துக்கொண்டு பல தமிழ் இலக்கியங்களின் சுவைமிகுந்த பகுதிகளையெல்லாந் துணையாகக்கொண்டு கட்டுரையினை அமைக்கும் ஆசிரியருடைய திறனை நூல் முழுவதிலுமே காணலாம்.

தமிழ் மக்களுக்கு ஞானத்தமிழை இலகுவான முறையிலும் இலக்கியச் சுவையுடனும் எடுத்தோதும் இந்நூலை எழுதிய குகசர்மா அவர்கள் தமிழ் மக்களின் பாராட்டுக்குரியவர். அவர் இத்தகைய சிறந்த படைப்புக்களை மென்மேலுந் தமிழுலகுக்கு வழங்கவேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உ

# அணிந்துரை

திரு. ச. அம்பிகைபாகன் B. A.
முன்னைநாள் வைத்தீஸ்வர வித்தியாலய அதிபர்
மணிமனை, மல்லாகம்

உலகத்தில் தோன்றிய மொழிகளுள் பக்திக்குகந்தமொழி தமிழ் மொழியென்பது பன்மொழிப் புலவர் கருத்து. இப்படி அவர்கள் கருதுவதற்குக் காரணம் தமிழில் "கல்லைப் பிசைந்து கனியாக்க" வல்ல பல்லாயிரக் கணக்கான பாடல்கள் காணப்படுவதே. இவற்றுள், சிவஸ்ரீ குகசர்மா அவர்கள் கூறுவதுபோல், சைவத்திருமுறைகள் பன்னிரண்டிற்கும், திவ்வியப் பிரபந்தம் நாலாயிரத்திற்கும் தனியிடமுண்டு. இவற்றிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட பாக்களை விளக்கி 'ஞானத்தமிழ்' என்னுந்தலைப்பில் காலத்துக்குக் காலம் பலகட்டுரைகளை எழுதி ஈழநாட்டில் வெளியிட்டுள்ளார். இவற்றில் நாற்பத்தி நாலு கட்டுரைகளே இப்பொழுது நூல் வடிவில் வெளிவந்துள்ளன.

இந் நூலுக்கு ஆசிரியர் ஞானத்தமிழ் என்னும் பெயர் கொடுத்திருப்பது மிகவும் பொருத்தமானது. இந் நூலிற் காணப்படும் பாடல்கள் எல்லாம், இறையநுபூதி பெற்ற மகான்களாற் பாடப்பெற்றவை. தாம்பெற்ற இன்பத்தை மற்றையவர்களும் பெறவேண்டுமென்னும் பெருநோக்கோடு பாடப்பெற்றவை. இக்கருத்துக்களை ஆசிரியர் தமது முதற் கட்டுரையில் பின்வருமாறு கூறியுள்ளார். "தாம் வழிபடும் கடவுளிடத்தில் உண்டாகும் பேரன்பே அவரைப் பாடுதற்கு மூலகாரணமாகிறது. அடியார்கள் தாம் மாத்திரம் உய்ய வேண்டுமென்ற குறுகிய நோக்கோடு தோத்திரங்களைப் பாடவில்லை. தமக்குப் பின்வருவோரும் பாடி உய்ய வேண்டுமென்ற பெருநோக்கோடு பாடினார்கள்."

இந்நூலில் பலசிறப்புக்கள் காணப்படுகின்றன. அவற்றையெல்லாம் எடுத்துக்காட்ட இடம்போதாமையால் ஒரு சிலவற்றை மாத்திரம் காட்ட விரும்புகின்றேன். தாம் எடுத்துக்கொண்ட பொருளை விளக்குவதற்கு பல நூல்கலிருந்து பொருத்தமான மேற்கோள்களை எடுத்துக்காட்டுவது ஒரு சிறப்பாகும். இச்சிறப்பை இந்நூலிற் காணப்படும் முதற்கட்டுரையிலே காணலாம். மனத்தில் ஒளிவிளக்கு ஏற்றுவதைப் பற்றி பூதத்தாழ்வார் பாடியிருப்பதை விளக்கவந்த ஆசிரியர் இது சம்பந்தமாக பரஞ்சோதி முனிவர், திருமூலர், திருவள்ளுவர், சுந்தரர்,

சம்பந்தர் முதலியோர் கூறியவற்றை எடுத்தாண்டிருப்பது கவனிக்கத்தக்கது. ஒரு சிறந்த சங்கீதமேதைக்கு எப்படிக் கற்பனு ஸ்வரங்கள் வந்து அனுசயமாக அமைகின்றனவோ அப்படியே இவருக்கும் மேற்கோள்கள் வந்து அமைகின்றன, இப்படி மேற்கோள்களை எடுத்தாண்டு இருப்பதால் பல அநுபூதி மகான்களை அறியும் வாய்ப்பை வாசகர்களுக்குக் கொடுத்து உள்ளார்.

இன்னுமொரு சிறப்பு இந்நூல் மூலம் சைவத்திற்கும், வைஷ்ணவத்திற்கும் நல்லுறவை ஏற்படுத்தியிருப்பது. பண்டைக்காலத்தில் சைவத்திற்கும் வைஷ்ணவத்திற்கும் முரண்பாடு கிடையாது நம்மாழ்வார் சிவனையும், விஷ்ணுவையும், பிரமனையும் சமரச நோக்கோடு பின்வருமாறு பாடியுள்ளார்.

> "ஒளிமணி வண்ணனென்கோ ஒருவனென் றேத்தநின்ற
> நளிர்மதிச் சடையனென்கோ நான்முகக் கடவுளென்கோ
> அளிமகிழ்ந் துலகமெல்லாம் படைத்தவை யேத்தநின்ற
> களிமலர்த் துளவன் எம்மான் கண்ணனை மாயனையே"

மேலுஞ் சைவர்கள் சங்கரனும், நாராயணனும் சேர்ந்த (சங்கர நாராயணன் என்னும் மூர்த்தத்தை (அர்த்தநாரீஸ்வரர் போன்று) வழிபட்டு வந்துள்ளனர். இடைக்காலத்திற்றான் வைணவர்கள் சைவர்களைக் 'கண்டுமுட்டு கேட்டுமுட்டு' என்ற நிலையில் வைத்திருந்தனர், இந்நிலையைப்போக்கவே காஞ்சிப் பெரியவாள் திருப்பாவை, திருவெம்பாவை மகாநாடுகள் நடாத்திவருகிறார்கள். காஞ்சிப்பெரியவாள் இந்நூலைப்படித்தால் பெருமகிழ்ச்சி அடைவதோடு தமது பூரண ஆசியையும் ஆசிரியருக்கு வழங்குவார்கள்.

குகசர்மா அவர்கள் மேற்காட்டிய பரந்த அறிவை எவ்வாறு பெற்றார் என்ற கேள்வி எழக்கூடும். அதற்கு அவ்வறிவை பெரும்பாலும் புராணபடனம் மூலமே பெற்றார் எனக் கூற வேண்டும். தமிழ் ஆசிரியராக வரமுயற்சித்த சர்மா அவர்களை இறைவன் தடுத்தாட்கொண்டு புராணபடன வழியிற் திருப்பி விட்டார். ஆசிரியராகப் போயிருந்தால் ஆயிரக்கணக்கான ஆசிரியர்களுள் இவரும் ஒருவராக இருந்திருப்பார், புராண படனத்தில் ஈடுபட்டபடியால் சைவ உலகில் தமக்கென ஒரு சிறந்த இடத்தைத் தேடிக்கொண்டார். மாவிட்டபுரம் கந்த சுவாமிகோவில், கொல்லங்கலட்டிப் பிள்ளையார்கோவில், மல்லாகம் பழம்பிள்ளையார்கோவில் முதலிய கோவில்களில் இருபது வருடங்கட்கு மேலாகக் கந்த புராணத்திற்கு உரைசொல்லி

வருகிறார். தெல்லிப்பழை துர்க்கை அம்மன்கோவிலில் பெரிய புராணத்திற்கும், திருவிளையாடற் புராணத்திற்கும் உரைசொல்லி உள்ளார். மல்லாகம் பழம் பிள்ளையார்கோவிலிலும், துர்க்கை அம்மன் கோவிலிலும் நடைசெற்ற புராண படலங்களில் ஒழுங்காகப் பங்குபற்றியபடியால் சைவத்தின் மூன்று கண்கள் எனப் படும் கந்தபுராணம், பெரியபுராணம், திருவிளையாடற் புராணம் ஆகிய மூன்று புராணங்களிலும் உள்ள ஆட்சியை நான் நன்கு அறிவேன்.

மேலும்காலத்திற்குக் காலம் வெளிவரும் சமயம், இலக்கியம் சம்பந்தமான நூல்களைப் படிக்க இவர்கள் தவறுவதில்லை. இப்படிப் பல நூல்களைப் படித்துத் தமது அறிவை விசாலமாக்கிக் கொண்டார்கள்.

இப்படித் தமிழையும் சைவத்தையும் வளர்த்துவரும் சர்மா அவர்களுக்கு சைவ உலகம் மிகவும் கடமைப்பட்டுள்ளது. இதை உணர்ந்து இப்போது சில அன்பர்கள் நிதி சேர்த்து இந் நூலை வெளியிடுவதற்கும், பொற்கிழி வழங்கிப் பாராட்டுவதற்கும் முன் வந்துள்ளார்கள். இது ஒரு ஆரம்பமுயற்சி என்று கருதுகின்றேன், சைவத்திற்கும் தமிழிற்கும் மேலும் சிறப்பாக உழைக்க சர்மா அவர்களுக்கு சைவமக்கள் வேண்டிய வசதிகளை செய்துகொடுப் பார்களாக. இதற்கு இறைவன் அருள்புரிவாராக.

உ

சிவமயம்

# பிரார்த்தனை உரை

இலக்கிய கலாநிதி
பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள்
கலாசாலை வீதி, திருநெல்வேலி

பௌராணிக வித்தகர் பிரமஸ்ரீ வ. குகசர்மா அவர்கள் புராணங்களிலேயன்றித் திருமுறைகளிலும் திருவாய் மொழியிலும் திளைத்தவர். சமய சாத்திரங்களிலும் அறிவு நூல்களிலும் ஆராமை மிக்கவர்.

அறிவு தூய்தாய் வளர்ந்து, அன்பு பெருகி, தெய்வ பக்தி கிடைக்கப்பெறுவது சர்மா அவர்களின் குறிக்கோள்.

"அகத்துக் கண்கொண்டு காண்பதே ஆனந்தம்" என்பது திருமந்திரம். அகத் தூய்மைப்பட்டவழி உதிக்கும் அறிவாகிய ஞானத்தில் கிடைப்பது அந்த ஆனந்தம். அகம் - மனம்.

"மனத்துக் கண் மாசிலனாகுக, எப்பொருளெத்தன்மைத் தாயினும் யார்யார்வாய்க் கேட்பினும் மெய்ப்பொருள் தலைக் கூடும்" என்பது வள்ளுவத்தேவர் காட்டும் வழி.

இந்நூல் மனத்தூய்மையில் தொடங்கி இறைவனுடன் கூடும் பேரின்பத்தை விழையும் கூடல் இழைத்தலில் முற்றுப்பெறுகிறது.

கட்டுரைகள் சின்னஞ் சிறியவை; அளவானவை; தொன்மையை மென்மை செய்து நடப்பவை; சிறுவர் அறிவிற் பெரியர். யாவரையும் சிந்திக்க வைப்பவை. கட்டுரையில் மிளிரும் பாடல்கள் மனனத்திற்குரியவை.

ஈழநாட்டில் வெளிவந்த இக் கட்டுரைகள் புத்தக உருவில் வருவது வரவேற்கற்பாலது.

இந்நூல் நல்லதொரு ஞானவிளக்கு. 44 அகல்களைக் கொண்ட விளக்கு; அகல்கள் தோறும் எழுஞ் சுடர்கள் அறியாமை இருளைப் போக்கி, அறிவைப் பிரகாசிக்கச் செய்து, பெறக் கூடிய பயன்கள் யாவற்றையும் பயப்பதாக என்று, திருவருளைப் பிரார்த்திப்போமாக.

# பதிப்புரை

தெல்லிப்பழைக் கிராமம் பல சிறப்புக்களைத் தன்னகத்தே கொண்டது. இவற்றில் புராணபடனத்தைப் போற்றும் பல பெருமக்களை கொண்டிருப்பதுவும் ஒன்று. பௌராணிகர் ஸ்ரீ. வ. குகசர்மா அவர்கள் இக்கிராமம் ஈன்றெடுத்த தனிப் பெருஞ்சொத்து. அவர்களுடைய அறுபது வயதுப்பூர்த்தியை ஞான விளக்கேற்றிச் சிறப்பிக்க வேண்டுமென்று தெல்லிப்பழை இந்துசமய விருத்திச் சங்கம் விரும்பியது. மிகச்சிறந்த தெய்வீக கருமங்களில் ஈடுபட்டுவந்த இச் சங்கம் கடந்த பத்து ஆண்டுகளாக இயங்காமல் போய்விட்டது. அமரர் தெ. து. ஜெயரட்ணம் அவர்களின் மறைவும் இதற்கு ஒரு காரணமாகும். ஆனால் இவ்வாண்டு மீண்டும் புத்துயிர் பெற்று முதல் நிகழ்ச்சியாக "ஞானத்தமிழ்" என்னும் கட்டுரைத் தொகுப்பு நூலை அச்சிட்டு உதவ முன்வந்துள்ளது பாராட்டுக்குரிய நிகழ்ச்சியாகும். நாற்பத்திநாலு கட்டுரைகொண்டு இந்நூல் வெளிவருகிறது. இம் முயற்சிக்கு ஆதரவளித்த அன்பர்களுக்கும் நூல் செம்மையாக நிறைவுற தோன்றாத்துணையாக இருந்த அருள்மிகு துர்க்கை அம்பாளுக்கும் வணக்கம் செலுத்துவது இச்சங்கத்தினரின் கடனாகும். இதனை அச்சிட்டு உதவிய குகன் அச்சகத்தாருக்கும், பிரார்த்தனை உரை வழங்கிய பண்டிதமணி ஐயா அவர்களுக்கும், பேராசிரியர் கா. கைலாசநாதக்குருக்கள் அவர்களுக்கும் சிறப்புரை வழங்கிய பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்களுக்கும் அணிந்துரை வழங்கிய திரு. ச. அம்பிகைபாகன் அவர்களுக்கும் எமது நன்றி உரித்தாகுக.

இங்ஙனம்
உண்மையுள்ள
தங்கம்மா அப்பாக்குட்டி
(தலைவர்)

தெல்லிப்பழை
இந்துசமய விருத்திச் சங்கம்
தெல்லிப்பழை

# முன்னுரை

தமிழ் பக்திமொழி. பக்தி ஞானத்தைக்கொடுக்க வல்லது. தமிழ்மொழியிலே சைவம், வைஷ்ணவம், பௌத்தம், சமணம் முதலிய பல்வேறு சமய உண்மைகளை விளக்கும் நூல்களைக் காணலாம். பஞ்சகாவியங்களாகச் சொல்லப்படும் சிந்தாமணி, சிலப்பதிகாரம் முதலியனவும் சமயச்சார்புடைய நூல்களே.

தமிழையும் சமயத்தையும் வேருகப் பிரிக்கமுடியாது. அவற்றுளும் சைவமும் வைஷ்ணமும் தமிழோடு இரண்டறக் கலந்து தமிழை அற்புத ஞானத்தமிழாக மாற்றிவிட்டது.

இவ்வாருக என்னுள்ளே எழுந்தசிந்தனை "ஞானத்தமிழ்" என்னும் ஒரு கட்டுரைத்தொடரை எழுதத் தூண்டுகோலாகியது. எனது மன எண்ணத்தை வடிவத்தில் கொண்டுவர உதவியவர் ஈழநாடு வார இதழின் ஆசிரியராக விளங்கிய திரு. P. S. பெருமாள் அவர்கள்

அவர் எனது ஞானத்தமிழ் என்னும் இக் கட்டுரைத் தொடரை வெளியிட்டதோடமையாது காலத்துக்காலம் என்னுல் "பாவர்ன்ஸ் யேர்னல்" போன்ற ஆங்கில சஞ்சிகைகளிலிருந்தும் தமிழாக்கம் செய்து எழுதப்பட்ட கட்டுரை கதைகளையும் பிரசுரித்தார்கள். எனது கட்டுரைகளுக்கு வந்த பாராட்டுக் கடிதங்களைப் பிரசுரித்து எனக்கு உற்சாகமும் ஊக்கமும் அளித்தார்கள். அதேபோல நிர்வாகப் பொறுப்பாளராக விளங்கும் திரு. து. சினிவாசகம், B. A. அவர்களும் என்னை இந்த வழியில் செல்லத் தூண்டுதல் அளித்தார்கள்.

இக் கட்டுரைகளை ஒரு புத்தகமாக்கினுல் நல்லது என்ற எண்ணம் முதன் முதல் மகாஜனக் கல்லூரி ஆசிரியர் திரு. க. விநாயகரத்தினத்தின் மனதிலே தோன்றியது. செயல்வீரரான அவரின் என்னத்தைச் செயல்படுத்த மற்றும் இருவர் முன் வந்தனர். ஒருவர் செந்தமிழைப் போற்றும் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள், மற்றவர் எனக்கு ஒரு காலத்து ஆசிரியராகவும், இப்போ எனது குடும்ப நண்பராக வும் விளங்கும் இளைப்பாறிய ஆசிரியர் திரு. தி. சுந்தரமூர்த்தி ஆவர்கள்.

இவர்கள் மூவரும் சேர்ந்து பொதுமக்களுக்கு விடுத்தவேண்டுகோள் வீண்போகவில்லை. புராணபடனத்தைப் போற்றுபவர்களும், பக்திஇலக்கியம் வளர்ப்போரை ஊக்குவிப்பவர்களும்

ஆகிய நல்மனம் மிக்கவர்கள் அவசர வாழ்க்கை நிறைந்த இன்றைய உலகித்திலும் இருக்கிறார்கள் என்பதை நிரூபித்து விட்டார்கள்.

பொருள்கொடுத்தும் ஊக்கமளித்தும் உதவிய பெரியார்களை தனித்தனி இங்கு எடுத்துக்கூறுவது முடியாத காரியம்

இச்சிறு நூலுக்குப் பெருவிழா எடுக்க முன்வந்துள்ளார்கள் துர்க்கை அம்பாள் ஆலய இந்து இளைஞர் சங்கத்தினர். இயல்பாகவே சமய உணர்ச்சியும் தொண்டு மனப்பான்மையும் கொண்ட இந்து இளைஞர் இவ் விழாவை எடுக்க முன் வந்தமை பொருத்தமுடையதும் பாராட்டத்தக்கதுமாகிய செயலாகும். நம் நாட்டின் வருங்காலச் செல்வர்களாகிய இளைஞர்கள் தமிழ் இலக்கிய வளர்ச்சியிலும், சமய வளர்ச்சியிலும் காட்டும் ஆர்வம் எல்லையற்றது. போற்றுதற்குரியது, ஏனையோர்க்கும் வழி காட்டியாய் உள்ளது.

பொருளுதவியும், விழாவெடுத்தும், சிறப்புரைகள் எழுதியும் என்னை ஊக்குவிக்கும் உயர்ந்த உள்ளம் படைத்த அனைவருக்கும் நன்றி கூறுவது எனது கடமை. இது ஒரு உலகவழக்கு என்பதனால் அல்ல எம்மைத் தெய்வ சிந்தனை வழிச்செலுத்தும் நல்ல ஒரு பணியில் அவர்கள் முன்னிற்கிறார்கள். அவர்கள் அந்தச் செயலால் தாமும் புண்ணியத்தைத்தேடி, என்னையும் புண்ணியம் தேடத் தூண்டுகிறார்கள். இதனால் இறையருள் அப்பெரியார்களுக்கு நிச்சயம் கிட்டும் என நம்புவோமாக.

வை. குகசர்மா

உ

சிவமயம்

# வெளியீட்டுரை

"வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமரன் நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே".

"கற்றறி வாளர் கருத்திலோர் கண்ணுண்டு"

பிரமஸ்ரீ வ. குகசர்மா அவர்களின் ஞானத்தமிழ் என்ற நூல் இன்று நும் கையில் மிளிர்கின்றது. இந்நூல் பல்லாண்டுகளுக்கு முன்பே வெளிவந்திருத்தல் வேண்டும். அதனை நூல் வடிவாக்கும் முயற்சியில் யாரும் ஈடுபடாமையினுலே அஃது இந்நாள் வரை வெளிவரவில்லை. அறிஞர்களைத் தேடி அடைந்து அவர் ஆக்கங்களைப் பெற்று, அவற்ருல் உலகு பயனுறச் செய்தல் வேண்டும் என்ற ஊக்கமும் உணர்வும் நம்மவரிடையே இருத்தல் அவசியமாகும். அஃதில்லையேல் நாம் சிறந்த அறிஞர்களாற் பெறும் பயனை இழந்தவராவோம்.

பௌராணிக வித்தகர் வ. குகசர்மா அவர்கள் சிறந்த பேரறிஞர். சிவாநுபூதி பெற்ற செல்வர். சைவ நெறியைப் புராணங்கள் வாயிலாகப் பாமரர் உணர்ந்துய்யத் தொண்டு மனப்பான்மையுடன் பண்புரியும் தூய உள்ளம் படைத்தவர். தமிழ் இலக்கியங்கள், புராணங்கள் முதலியவற்றில் நிறைவு பெற்று அவற்றைச் சுவைத்துப் பயன் நுகரும் தனிவாழ்வுடையவர்.

இவரிடத்து விளங்கும் திறமைகள் இன்னும் பல. ஆங்கிலத்திற் சிறந்த சிறுகதைகளை, கட்டுரைகளைத் தமிழில் மொழிபெயர்த்துப் பத்திரிகைகள் வாயிலாக வெளியிட்டு வருகின்றவர். சிறந்த சமயச் சொற்பொழிவுகளை ஆலயங்களிலும், பாடசாலைகளிலும் நிகழ்த்துபவர். கவிதை அரங்கிலும் பரீட்சயமுடையவர். சைவநற்சிந்தனைகளையும், சிவநெறித் தொடர்பான உரைகளையும் வானெலியில் நிகழ்த்துபவர். ஆயுர்வேத சித்த வைத்தியம் தெரிந்து, வருமானம் நோக்காது நோயாளருக்குச் சிகிச்சையளிக்கும் உதாரணகுணம் படைத்தவர் இவர்.

இவ்வாறு சகலகலாவல்லுநராகத் திகழும் இவரது சிறந்த சிந்தனையிற் தோன்றிய உயர் சைவக் கருத்துக்கள் நிரம்பிய

கட்டுரைகளை இந்நூல் கொண்டுள்ளது. இக் கட்டுரைகள் 'ஞானத்தமிழ்' என்ற தலைப்பில் 'ஈழநாடு' வார இதழில் இடம்பெற்றவை. இவை நூல்வடிவு பெறவேண்டும் என்றும், பௌராணிகரது அறுபதாண்டு நிறைவு விழாவின்போது அந் நூல் வெளிவர வேண்டுமென்றும், அதன்மூலம் அவரது அறிவுத் தெளிவை உலகுகண்டு போற்றல் வேண்டுமென்றும் விழைவு கொண்டேன் யான்.

கீரிமலை நகுலேஸ்வரர் திருக்கோவிலில் 'சிவநெறிக் கழகம்' என்னும் கழகத்தை ஆரம்பித்து, அதன் இணைச் செயலருள் ஒருவராகக் கடன்புரியும் யான் இந்நூல் வெளியீட்டை அக்கழக மூலம் வெளியிடாமைக்குக் காரணம் உண்டு. சிவநெறிக் கழகம் நூல்களை அறிமுகம் செய்வதைத் தன் நோக்கங்களுள் ஒன்றாகக் கொண்டது. நூல் வெளியீடு அதன் செயல் திட்டங்களில் இல்லை. எனவே, பௌராணிகர் அவர்களது நூலை எவ்விதம் வெளியிடலாம் எனச் சிந்தித்தேன். எனது மதிப்பிற்குரிய முன்னைநாள் அதிபர் அமரர் தெ. து. ஜயரத்தினம் அவர்களைத் தலைவராகக் கொண்டு, பல செயற்றிட்டங்களை மேற்கொண்டு பல ஆண்டுகள் சைவப் பணிபுரிந்த தெல்லிப்பழை இந்துசமய விருத்திச் சங்கம் சில காலம் செயற்படாதிருந்தது. அந்தச் சங்கமே இந்த நூலை வெளியிடுவதற்குத் தகுதியும் உரிமையும் கொண்டதென உணர்ந்து அந்தச் சங்கத்தைப் புனருத்தாரணஞ் செய்து இந் நூலை அதன்மூலம் வெளியிடுகின்றேன்.

இந்நூல் வெளியீட்டுக்குப் பேருதவியாகவிருந்த சங்கத் தலைவர், பண்டிதர் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கும், சங்கத்தின் முன்னைநாள் செயலாளராகவும் இப்போது பொருளாளராகவும் பணிபுரியும் திரு. தி. சுந்தரமூர்த்தி அவர்களுக்கும் யான் நன்றியுடையேன். தமது கட்டுரைகளை நூல் வடிவு செய்ய இசைவு தந்த பௌராணிக வித்தகர் வ. குகசர்மா அவர்களுக்கும் இம் முயற்சியை ஆதரவு தந்து ஊக்கமளித்த 'ஈழநாடு' பத்திரிகை நிறுவனத்தினருக்கும் நாங்கள் கேட்ட போது மனமகிழ்வோடு நிதி உதவி புரிந்து இம்முயற்சி சிறப்பாக நடந்தேற உதவிய அன்பர்களுக்கும் சைவ உலகு நன்றி பாராட்டுகின்றது.

இவ்வாறு சைவச் சான்றோர்களாய், அறிஞர்களாய் விளங்கும் அனைவரையும் பாராட்டி அவர்களுக்கோர் அறிமுக விழா எடுத்தலும் அவர் ஆக்கங்களை வெளியிடுவதும் அவர்கள் முதுமை வாழ்வு முட்டின்றி நிகழ உதவிபுரிந்து ஆதரவளிப்பதும் சைவ உலகு மேற்கொள்ளவேண்டிய சிறந்த தர்மங்களாகும்.

இந்நூலை மேலும் அணிசெய்வும் வகையில் பிரார்த்தனை உரை, வாழ்த்துரை, சிறப்புரை, அணிந்துரை, முன்னுரை, பதிப்புரை ஆகியவை வழங்கிச் சிறப்பித்த பேரறிஞர்களுக்கும், சிறந்த முறையில் அச்சிட்டு உதவிய தெல்லிப்பழை குகன் அச்சகத்தினருக்கும், இந்நூல் வெளியீட்டு விழாவைப் பொறுப்பேற்ற தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்தினருக்கும் எனது அன்பு கனிந்த நன்றி.

"வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்".

"எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

இந்துசமய விருத்திச் சங்கம் — ச. விநாயகரத்தினம்
தெல்லிப்பழை — செயலாளர்
1979-08-05

# மனதைத் தூய்மையாக்கி ஒளிவிளக்கேற்ற......

மக்கள் தம் உடலையும், தாம் வசிக்கும் இல்லத்தையும், அதன் சுற்றுடலையும் புனிதமாக வைத்திருக்க விரும்பினார்கள். பல வழிகளைக் கையாண்டு அவ்வாறே வைத்திருந்தார்கள். அறிவுடையோர் அதற்கு மேலுஞ் சிந்தித்தார்கள். உள்ளத்தையும் சுத்தமாக வைத்திருக்கவேண்டிய வழிகளை அவர்கள் வகுத்தார்கள். ஏனென்றால் மனந்தான் ஒருவன் உலகிற் செயற்பட வேண்டிய வகையை வகுக்கிறது. இதனாலே மனது பிரதானமானது என வேதத்தின் ஞானகாண்டம் பகுதியாகிய உபநிடதங்கள் சொல்லுகின்றன.

''உள்ளமெனும் கூடம்'' என்றார் பரஞ்சோதி முனிவர்; ''உள்ளப் பெருங்கோயில்'' என்றார் திருமூலர். உள்ளத்தைச் சுத்தமாக வைத்திருப்பவர்களே உயர்ந்தோராகக் கருதப்பட்டனர். அவர்களுக்கு எல்லா நன்மைகளும் புகழும் தாமாகவே தேடி வந்தன. உள்ளத்தூய்மை அற்றவர்கள் தாழ்வடைந்தார்கள். ''நன்றும் தீதும் பிறர்தர வாரா'' என்ற புறநானூற்றுச் செய்யுளடிகள் இதனையே வலியுறுத்துகின்றன.

உள்ளத்தை உயர்வாக வைக்கத் தகுந்த வழிகளைத் தமிழ் இலக்கிய நூல்களும், சைவ நூல்களும் எடுத்துக் கூறின. உலகத்தோரால் போற்றப்படும் உத்தம நூலாகிய திருக்குறள் ''புற உடலின் தூய்மை நீரினால் அமைவதுபோன்று, உள்ளத் தூய்மை உண்மை பேசுவதால் அமையும்'' எனக் கூறுகின்றது. பொய் கூறாத தருமம் ஒன்றையே கடைப்பிடிப்பவனது உள்ளத்தில் ஒளியுண்டாகும் என்பது வள்ளுவர் கருத்து. நல்லாரைக் காண்டல்; அவர் சொற்களைக் கேட்டல்; அவரோடு கூடியிருத்தல் முதலியனவும் - இரக்கம், தயை, கொடை, இன்சொல் பேசல் போன்ற பல தர்மங்களும் மனதைப் பரிசுத்தமாக வைத்திருக்க உதவுவன. இந்த நல்ல கருமங்கள் எல்லாம் இறைவன் அருளால் உண்டாவன. அவன் அருளால் ஞானம் ஏற்படுமாயின், அது மனமெனும் இருட்டு வீட்டில் ஒளிவிளக்கு ஏற்றிய தன்மையை நிகர்க்கும். ஞானச்சுடர் விளக்கு ஏற்றப்படுமாயின் பொய், களவு தீய சிந்தனை என்னும் விஷப் பூச்சிகள் மனதில் வாழமுடியாது.

மனதைத் தூய்மையாக்கி ஒளிவிளக்கேற்றுவதற்காகவே சாத்திரங்களும் தோத்திரங்களும் அருளப்பட்டன. சாத்திரங்களைப்பற்றி ஆராயாமல் தோத்திரங்களைப்பற்றி மாத்திரமே ஆராய்தல் நமது நோக்கம். தோத்திரம் பாடியவர்கள் சிவனடியார்களும், ஆழ்வார்களுமாவர். சைவத் திருமுறைகள் பன்னி

ரண்டும், திவ்வியப் பிரபந்தம் நாலாயிரம் செய்யுட்களும் தமிழில் இருப்பதனுற்றுன் தமிழ் ஞானத்தமிழாயிற்று என்று துணிந்து கூறலாம்.

"அர்ச்சனே பாட்டேயாகும் நற்றமிழ் பாடு" என்று சுந்தரரை இறைவனே தம்மைப் பாடும்படி பணித்தார் என்பது வரலாறு. ஓதுபவர்களுக்கு நன்மையைக் கொடுப்பதுதான் உண்மையான தோத்திரமாகும். "காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதுவார் தம்மை நன்னெறிக்குய்ப்பது" இறைவன் நாமமாகிய தோத்திரங்கள். தோத்திரங்களேயும், புராணங்களேயும் படிப்பது என்று சொல்லுவது தமிழ் மரபல்ல. "ஓதுவது" என்று சொல்லுவதே மரபு. "அந்தமில் அவுணர் தங்கள் அடல்கெட முனிந்த செவ்வேற் கந்தவேள் புராணந்தன்னே காதலித்தோதுவோரோ" என்பது கச்சியப்பர் வாக்கு.

அடியார்கள் தாம் மாத்திரம் உய்யவேண்டுமென்ற குறுகிய நோக்கோடு தோத்திரங்களேப் பாடவில்லே. தமக்குப்பின் வருவோரும் பாடி உய்யவேண்டுமென்ற பெருநோக்கோடு பாடினுர்கள்.

தாம் வழிபடு கடவுளிடத்தில் உண்டாகும் பேரன்பே அவரைப் பாடுதற்கு மூலகாரணமாகின்றது. தோத்திரத்தை ஒரு விளக்காக உருவகிக்கும்போது இந்த அன்புதான் விளக்கின் தகழியாகின்றது. அந்த அன்பு இறைவனேப் பாடவேண்டுமென்று தூண்டுகிறது. தூண்டுதலால் ஆர்வம் அல்லது பாடவேண்டுமென்ற பெரு விருப்பமாக மாறுகிறது. அதுவே விளக்கின் நெய்யாகின்றது. நெய்யில்லாவிட்டால் திரி எரியாது. அளவற்ற ஆர்வம் இல்லாவிட்டால் இறைவனேப் பாடமுடியாது. இறைவனேப் பாடப்பாட உயிரின் தற்போதமெல்லாம் மறைந்து இறைவனுடனே ஒன்றுபடுகிறது. உயிரின் முன்னேய எண்ணங்களாகிய உருவம் மறைந்து புதிய ஞான ஒளி பிறக்கிறது. உள்ளம் கசிந்து உருகி மற்ருேர் உருவம் பெறுகிறது. திரி எரிந்து வேறு உருவம் பெறுவதுபோல என்று சொல்லலாம். இறையே 'கல்லேப் பிசைந்து கனியாக்கி' என்ருர் மாணிக்கவாசகர். உருகும் மனம்தான் திரியாகிறது. ஒரு நல்ல உருவகம். அவற்றைத் திரும்பவும் சுருக்கமாக ஒன்றுசேர்த்துப் பார்ப்போம்: அன்பு விளக்கின் அகல், ஆர்வம் நெய் உருகும் சிந்தை திரி.

அன்பே தகழியாய் ஆர்வமே நெய்யாய்
இன்புருகு சிந்தை இடுதிரியா — நன்புருகி
ஞானச் சுடர்விளக் கேற்றினேன் நாரணற்கு
ஞானத் தமிழ்புரிந்த நாள்." — பூதத்தாழ்வார்

# தாயும் சேயும்

## அன்பு :

"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்'' என்பது திருமந்திரம். இறைவனிடத்திலே செலுத்தும் மாசுமறுவிலாத அன்புதான் ''ஞானம்'' என்பது சேக்கிழார் வாக்கு. அன்பு என்பதற்கு தமது நூலில் ஓர் அதிகாரம் வகுத்துள்ளார் உலகியல் நன்குணர்ந்த வள்ளுவர்.

அன்புக்கு உலகியலில் உதாரணம் காட்டப்புகின் ஒரு தாய்க்கும் சேய்க்கும் உள்ள அன்புத் தொடர்பையே காட்டலாம். தாய் சேய் தொடர்பு உயர்ந்த மக்களிடத்தே அன்றி அஃறிணை உயிர்களாகிய விலங்கு முதலியவற்றிலும் காணக்கூடியதாக இருக்கிறது.

## அன்புங் கல்வியும் :

அன்பின் உயர்வை அறிவுறுத்தவே தமிழில் அகப்பொருள் இலக்கியம் ஏற்பட்டதெனலாம். தம் மனைவி - மக்கள், சுற்றம், அயலவர் முதலியவரிடத்திற் செலுத்தும் மாசிலா அன்பு, எல்லா உயிர்களிடத்தும் பரம்பி இறைவழியைச் சார்வதற்கே பயன்படுகின்றது. கல்வியின் பயனும் மண்ணில் நல்ல வண்ணம் வாழவும், பின் இறைவனிடத்திலே சிந்தையைப் பதிக்கவும் உதவுவது. வீண் விதண்டாவாதம் செய்யவும், தான் மாத்திரம் இன்பமாக வாழவும் உதவும் கல்வி உண்மையான கல்வியாகாது.

> "கற்கவிடர்ப் பட்டுமிக கற்றவெல்லாங் கற்றவர்பால்
> தற்கமிட்டு நாய்போலச் சள்ளெனவோ — நற்கருணை
> வெள்ளம் அடங்கும் விரிசடையற் காளாகி
> உள்ளம் அடங்க வல்லவோ."

என்று ஒரு பெரியார் பாடியதுங் கவனிக்கத்தக்கது.

## ஆவும் கன்றும் :

தென்றிசை வாழவந்த சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருமணஞ் செய்யும் நேரத்தில் இறைவன் கிழப்பிராமண வடிவத்தோடு வந்து வழக்கில் வென்று, அவரை அடிமையாக்கி அழைத்துச் சென்றார். திருவருட்டுறைக் கோயிலுட் சென்று மறைந்தருளினார். பின்பு சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குக் கேட்கும்படியாக இறைவராகிய தாமே வழக்கில் வென்று அடிமைகொண்டவர் எனக் கூறியருளினார். இறைவனுடைய ஓசையைக் கேட்ட சுந்தரமூர்த்தி சுவாமிகளது நிலையை ஓர் அழகிய உவமைமூலம் சேக்கிழார் எடுத்துக்காட்டுகிறார்.

"என்றெழும் ஓசைகேளா ஈன்ற ஆன்
கனைப்புக் கேட்ட கன்றுபோற் கதறிநம்பி"

என்பது சேக்கிழார் வாக்கு. இங்கே கன்றுக்கும் பசுவுக்கும் உள்ள தொடர்பை உவமையாக எடுத்துக்கூறுவது உணர்ந்து மகிழ்தற்குரியது.

**அழுங்குழவி :**

ஒரு சிறு குழந்தை, ஏதோ ஓர் காரணத்தால் தாய்க்கு அதன்மேற் கோபம். அக்குழந்தையைத் தாய் அடித்துவிடுகிருள். தன்கிட்ட வரவேண்டாமென்று நீக்கிவிடுகிருள். அந்தக் குழந்தை என்ன செய்யும். அந்தத் தாயை விட்டு ஓடிவிடுமா? இல்லை. ஒருகாலமும் ஓடாது. தனக்குத் தாயே தஞ்சமென்பது அப் பிள்ளைக்குத் தெரியும். உண்மையான அடியார்களின் தன்மை யும் இதுதான் இறைவன் தனக்கு வரந்தரவில்லையென்று இறை வனை வெறுக்கமாட்டார்கள். வணங்குவதிலோ உள்ளத்தில் உள்ள அன்பிலோ குறைவு ஏற்படாது. அந்தத் தாய் தன்னைக் கிட்டவந்து அணைக்கவேண்டும் என்று தாயின் முகத்தையே பார்த்து அழும் குழந்தைபோல இறைவனை நோக்கி மேலும் வேண்டுதல் செய்வார்கள். இந்த நிலையைக் குலசேகரப் பெருமான் பின்வரும் இரு அடிகளில் மிக அழகாகக் கூறிவிடுகிருர்.

"அரிசினத்தால் ஈன்றதா யகற்றிடினும் மற்றவன் தன்
அருள்நினைந்தே யழுங்குழவி அதுபோன் றிருந்தேனே".

**அன்பறுதென்நெஞ்சு :**

அன்பிலே பிரதிபலன் கருதா அன்பு சிறந்தது. பால் நினைந்தூட்டும் தாயினும் சிறந்த அன்பு அது. இறைவனை வணங்கவேண்டும். அவனிடம் அன்பு செலுத்தவேண்டும். ஆனால், அதற்குப் பிரதிபலனை எதிர்பார்க்கக்கூடாது. இறைவணக்கம் தமக்கு வரும் துன்பத்தை நீக்கவேண்டும் என்ற காரணத்திற் காக வணங்குவார்கள் சிலர். இறைவன் தன்மேல் இரக்கம் கொண்டால் நமக்கு நல்வழியைக் காட்டுவார். செல்வம் பெருகும் என வணங்குவார் சிலர். நோக்கத்தோடு வணங்குவது பிழை யல்ல ஆனல் அது ஞானிகளின் தன்மையல்ல. இறைவனைப் போற்றவேண்டியது நமது கடமை. அவர் அதற்கு நன்மை செய்யவேண்டாம் என்று கூறுவார்கள். இந்த ஞானிகளை வீரர்கள் என்று பெரியபுராணம் கூறும். அப்படிப்பட்ட வீரர்களுள் ஒருவராகிய காரைக்கால் அம்மையார் பாடல் ஒன்றைப் பார்ப்போம்.

"இடர்களை யாரேனும் எமக்கிரங்கா ரேனும்
படருநெறி யணியா ரேனும் — சுடருருவில்
என்பறாக் கோலத் தெரியாடும் எம்மானுர்க்கு
அன்பறா தென்நெஞ் சவர்க்கு".

— திருமுறை 11

# இறைநாமம் கூறுவதனால் ஏற்படும் இன்பம்!

**உலக வாழ்வில்:**

காதலன் தம்மைப் பிரிந்திருக்கும் சமயத்தில் அவனது பெயரைப் பிறர் கூறுவதை ஒரு பெண் மிக விரும்புவாள். காதலன் தூரதேசம் போன சமயத்தில் பெண்கள் அக்காதலன் புகழைப் பாடிக்கொண்டே நெல்குத்தல் முதலிய தொழில்களைச் செய்வார்கள். இதனைக் கலித்தொகை முதலிய சங்க இலக்கியங்களிற் காண்கின்றோம். அவ்வாறே தங்களது அரசன் பெயரைச் சொல்லியும் மதுரை மகளிர் உரலில் தானியம் இட்டுக் குத்துவதையும் சிலப்பதிகாரத்தில் காண்கிறோம்.

"மீனக் கொடி பாடும் பாடலே பாடல்
வேப்பந்தர் நெஞ்சுணக்கும் பாடலே பாடல்."

என்பது சிலப்பதிகாரக் காட்சி.

**பக்தியின் ஆரம்பம்:**

இதேபோல இறைவன்மேல் பேரின்பக் காதல்கொண்ட அடியார்கள் இறைவன் நாமம் கூறுவதையும் அவ்வாறு பிறர் கூறத் தம் செவி கேட்பதையுமே பெரும்பேறாகக் கொள்வர். இறைவன் நாமத்தைச் செவியில் கேட்பதே இறைவழி நிற்றலின் முதற்படியாகின்றது. இதனை நாவுக்கரசர் ஒரு தேவாரத்தின் மூலம் எடுத்துக்காட்டுகிறார்.

"முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சியானாள்".

என்பது நாவுக்கரசர் வாக்கு.

**கிளியும் ஞானசம்பந்தரும்:**

ஒரு பெண் ஒரு கிளியை வளர்த்துவந்தாள். அந்தக் கிளிக்குப் பேசக் கற்றுக்கொடுத்தாள். ஒருநாள் அந்தக் கிளியை அழைத்தாள். "சிறையாரும் மடக்கிளியே" என அழைத்துச் சொல்கிறாள், "உனக்கு மிகவும் பிடித்ததும் உருசியுள்ளதுமாகிய பாலையும் தேனையும் உணவாகத் தருகிறேன். ஆனால் நீ எனக்காக ஒன்று செய்யவேண்டும். பிறையணிந்த இறைவனது திருநாமத்தை என் காதுகேட்கக் கூறவேண்டும்" என்று கேட்கிறாள். அந்த இறைவன் பவளம், முத்து இவற்றை அலைகள் வீசும் கடற்றுறையாகிய தோணிபுரத்தில் இருக்கிறார் என்று சொல்லுகிறாள்.

"சிறையாரும் மடக்கிளியே இங்கேவா தேனொடுபால்
முறையாலே உணத்தருவன் மொய்பவளத் தொடுதரளந்
துறையாருங் கடற்தோணி புரத்தீசன் துளங்குமிளம்
பிறையாளன் திருநாமம் எனக்கொருகாற் பேசாயே"

உலகம் உய்ய அவதரித்த திருஞானசம்பந்தர் தன் மனக் கருத்தையே இந்தப் பாடல்மூலம் வெளிக்காட்டுகிறார்.

**பாடலின் உள்ளுறை:**

தேன், பால் இவையெல்லாம் உலக இன்பங்களுக்குச் சமனானது. இறைவன் திருநாமம் பேரின்பத்தைத் தரவல்லது. உலக இன்பங்களில் ஆழ்ந்த பற்றில்லாமல் அவற்றைத் தியாகம் செய்பவனுக்குத்தான் பேரின்பம் கிட்டும் என்றொரு கருத்தும் இப்பாட்டில் தொனிக்கிறது.

பலவிதத்திலும் மனதைக் கட்டுப்படுத்த வல்லவரும் தமக்குரிய இன்பங்களைத் தியாகஞ்செய்ய வல்லவருமே இறைநாமம் மட்டும் கூறுவதால் இன்பத்தை அடையமுடியும். அந்த உறுதிப் பாட்டாலே திருநாவுக்கரசருடன் கட்டப்பெற்ற கல்லு தெப்பமாக மாறி அவரைக் கரையேற்றியது. தியாகச் சுடராகிய மகாத்மாகாந்தி துப்பாக்கிக் குண்டுகள் உடலைத் துளைத்தபோதும் ராமநாமத்தையே உச்சரித்தார்.

**இந்திர செல்வமும் அடியாரும்:**

உலகத்திலே பலவித இன்பங்கள் உள. சிங்காசனத்திலமர்ந்து அரசாள்வது யாவற்றிலும் மேலான இன்பமென்று கருதப் பட்டது. அரசபோகம் என்று அலங்காரமாகக் கூறுவதுண்டு. மண்ணுலகத்திலே அரசுசெய்யும் இன்பம் போதாது என்று பண்டைய அரசர்கள் நூறு அசுவமேத யாகஞ்செய்து இந்திரப் பதவியை அடைந்தார்கள். பெரிய செல்வமுடையவர்களை இந்திர செல்வம் என்று சொல்வார்கள். இந்தஇன்பத்தையும் அடியார்கள் விரும்பமாட்டார்கள்.

தொண்டரடிப்பொடியாழ்வார் ஒரு வைஷ்ணவ அடியார். அவரின் சிந்தையிலும் வாயிலும் திருமாலின் உருவமும் நாமமுமே பதிந்திருக்கும். திருமாலின் திருமேனி பச்சை மலை போன்றது. பவளம் போன்ற சிவந்த வாய், ஆயர்குலத்திலே தோன்றி அக் குலம்வாழ அருள்செய்தவர். ஆயர்குலத்திலே கண்ணனாகத் தோன்றி அவர் செய்த திருவிளையாடல் அளவற்றவை. ஆயர் குலப் பெண்கள் தயிர் விற்கும்போது "தயிரோ மோர்" என்று கூறுவதற்குப் பதிலாக "கோவிந்தா, மாதவா" என்று கூறிவிடுவார்கள். எனவே ஆயர்தம்கொழுந்து எனத் திருமால் அழைக்கப் பட்டார், அச்சுதா, அமரர்களிற் சிறந்தவரே, ஆயர்தம் கொழுந்தே என்று அழைப்பதுதான் சிறந்த இன்பம். அவை, இதைவிடுந்து இந்திரசெல்வம் வந்தாலும் நான் விரும்பமாட் டேன் என்று தொண்டரடிப்பொடியாழ்வார் பாடுகிறார்.

"பச்சைமா மலைபோல் மேனி பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா அமரர் ஏறே ஆயர்தம் கொழுந்தே யென்னும்
இச்சுவை தவிர யான்போய் இந்திர லோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்க மாநகர் உளானே."

# பிறவித் துன்பம் நீக்கும் மருந்து

மாருத இனிமையும், அதனல் ஏற்படும் இன்பத்தையும் அளிக்க வல்லவன் இறைவன், இறைவனைக் கண்டாலும், அவனைப் பற்றிச் சிந்தித்தாலும் பேசினுலும் இன்பம் ஏற்படும் விலாசுகர் என்னும் மகான் கிருஷ்ண கானுமிர்தம் என்னும் நூலில் ஒரு சுலோகத்தில் பின்வருமாறு கூறுகிருர்.

"இந்தப் பிரபுவினுடைய திருமேனி இனியவை. யாவற்றிலும் இனியது அவனுடைய முகமே. தேன் மணப்பதாய் புன்முறுவலுடன் பிரகாசிப்பதாய் இனிதாய் உள்ளது. ஆச்சரியம் இந்தக் கிருஷ்ண தத்துவம் இனியது இனியது இனியது என்று சொல்வதைத்தவிர வேறென்றும் சொல்லத்தெரியவில்லை".

தித்திப்பை வடமொழியில் மதுரம் என்று சொல்வார்கள். நாவினல் அறியும் தன்மையுடையது. நாவின் இனிமையைப் பற்றிச் சிந்திக்க முதலில் வருவது தேன். பால் பழம் எனத் தொடர்ந்து பலசுவைகளை இறைவனுக்கு உவமித்தார் திருநாவுக் கரசர்.

> "திருமணியைத் தித்திக்கும் தேனைப்பாலை
> தீங்கரும்பின் இன்சுவையை"

என்பது நாவுக்கரசர் வாக்கு.

இறைவனைக் காணல், அவன் புகழ் கேட்டல், மூக்கால் முரலுதல், வாயால் வாழ்த்துதல் தேகத்தால் வலம்வருதல் இவ்வாருக ஐம்புலன்களுக்கும் இன்பத்தைக் கொடுப்பவன் இறைவன். ஆனல் இங்கே கூறப்படுவது நாவின் சுவைபற்றியது. பஞ்ச புலன்களையும் அடக்கப் பழகுவோர் நாவின் சுவையையே முதல் நீக்கப் பழகவேண்டும் என்பது ஆன்ருேர் கூற்று. ஆனல் சுவையுணர்ச்சியை முற்ருக நீக்கிவிடுதல் முடியாது. அதனிலும் பார்க்கக் கூடிய சுவையுள்ள பொருளைப் பற்றினல்தான் இச் சுவையில் பற்று விடும், இதனையே வள்ளுவரும் உலகப் பற்று நிற்க பற்றற்ருன் தாளைப் பற்றும்படி கூறினர்.

நாவுக்கரசர் உலக இயல்பினை நன்கு அறிந்தவர். மனிதர் களை நோக்கி கனிதந்தால் கனியுண்ணவும் வல்லிரே? என்று கேட்கிருர். எங்கே கனி என்று ஆவலுடன் வரும் மனிதர் களுக்கு இதுதான் கனியென்று இறைவனைச் சுட்டிக்காட்டுகிருர். இந்தக் கனி உண்பதற்கு ஒரு கட்டுப்பாட்டையும் இறுதியிற்

கூறிவிடுகிறார். மனக்குற்றமில்லாதவர்க்கு இக்கனி நன்கு சுவைக்கும் என்கிறார். இறைவனை அடைவதற்கு நல்ல மனம் வேண்டும்.

"வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம்" என்ற ஔவையார் வாக்கும் இங்கு நோக்கத்தக்கது.

"மனிதர் காளிங்கே வம்மொன்று சொல்லுகேன்
கனிதந் தாற்கனி உண்ணவும் வல்லீரே
புனிதன் பொற்கழல் ஈசனெ னுங்கனி
இனிது சாலவும் ஏசற் றவர்கட்கே".

ஈசன் எனும் கனியை மனதுட் கொண்டால் அது சுவையை மாத்திரம் தருவதல்ல உடல் நோயை நீக்கும் நல்மருந்து போன்று பிறவித் துன்பம் என்னும் நோயை நீக்கவல்லது. எனவே இறைவன் அடியாரால் நச்சப்படும் (விரும்பப்படும்) மாமருந்து. கடலில் தோற்றிய தேவாமிர்தம் உண்டாரை நெடுங்காலம் வாழவைப்பது. இறைவனாகிய அமிர்தமோ என்றும் அழியாப் பேரின்பத்தைத் தரவல்லது. இதனால் மணிவாசகர் "என்னுடை இன்பமே" என இறைவனை அழைத்தார்.

நம்மாழ்வார் தாம் வழிபடு கடவுளாகிய அச்சுதமூர்த்திக்கு பற்பல சுவையுள்ள பொருட்களை உவமையாக்கிப் பார்க்கிறார். எந்தச் சுவையைத் திடமாக உவமையாக்கலாம் என அவரால் நிச்சயிக்கமுடியவில்லை. நாம் காணும் இனிய பொருட்கள் எல்லாம் இறைவன் சொரூபமே என்றாலும் அவர் இவை யாவற்றையும் கடந்து அப்பாலுக்கு அப்பாலாய் விளங்குகின்றார் அல்லவா? இந்த உண்மை பின்வரும் நம்மாழ்வார் பாடலில் நன்றாகத் தொனிக்கிறது.

"அச்சுதன் அமலன் என்கோ அடியவர் வினைகெடுக்கும்
நச்சுமா மருந்தம் என்கோ நலங்கடல் அமுதம் என்கோ
அச்சுவைக் கட்டி என்கோ அறுசுவை அடிசில் என்கோ
நெய்சுவைத் தேறல் என்கோ கனியென்கோ பால் என்கேனோ"

# நினைப்பவர் மனம் கோயிலாகக் கொண்டவன்

உலகமெலாம் இறைவனின் கோவில். நாம் உலகிற் காணும் அழகிய தோற்றமெல்லாம் இறைவனின் அருட்சக்தியேயாகும். இது ஞானிகள் கண்ட உண்மை. ஆனால், யாவரும் இறைவனை எங்கும் காணமுடியாது மற்றையோர்க்கும் அருள்செய்யும் நோக்கோடு இறைவன் எழுந்தருளியிருக்கும் இடங்கள் இரண்டு. ஒன்று புறத்தேயுள்ள ஆலயம் மற்றது உள்ளக் கோவில். அடியார்கள் புற ஆலயங்களிலே வணங்கினாலும் உள்ளக் கோவிலில் இறைவனை வழிபடுவதை இடைவிடா வழக்கமாகக் கொண்டார்கள். ஆலயங்கள் ஒருவர் நினைத்த நேரமெல்லாம் போய் வணங்கமுடியாது. ஆலய வணக்கத்திற்கெனப் பெரியோர் களால் காலங்கள் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன. உள்ளத்திலோ இறைவனை எந்த நேரமும் வணங்கலாம். உள்ளத்தால் ஒரு காலமும் பிரியாமல் வாழ்ந்தார்கள் அடியார்கள். திருநாவுக் கரசர் உள்ளத்தைப்பற்றிக் கூறவந்த சேக்கிழார் "நாயகன் சேவடி தைவரு சிந்தையும்" என்று கூறினார்.

**புண்ணியச் செயல்கள் :**

எல்லார் உள்ளத்திலும் இறைவன் இருக்கிறார் என்பது உண்மை. ஆனால் வெளிப்படும்விதத்தில் வித்தியாசம் உண்டு. அது உள்ளத்தின் தன்மையைப் பொறுத்தது. இதற்காகவே தர்மங்கள் விதிக்கப்பட்டன. இவை புண்ணியச்செயல்கள் என்று கூறப்பெற்றன. "நன்றாகப் பூத்த ஒரு மரத்தின் மணம் எங்ஙனம் தூரத்திலிருந்து காற்றினால் கொண்டுசெல்லப்படுமோ, அது போலவே புண்ணியச் செயல்களின் மணம் காலத்தையும் தேசத் தையும் கடந்து சுவர்க்கலோகம்வரை கொண்டு செல்லப்படும்" என்பது உபநிடத வாக்கியம்.

புண்ணியச் செயல் சில உபநிடதத்தில் கூறப்பட்டுள்ளன. அமைதி, புலனடக்கம், மனவடக்கம், உண்மை பேசுதல், ஈகை, வேள்விசெய்தல் என்பன அவற்றுட் சில.

"பொய்வண்ணம் மனத்தகற்றிப் புலனைந்தும் செலவைத்து
மெய்வண்ணம் நினைத்தவர்க்கு மெய்நின்ற வித்தகர்க்கு"

என்பது பெரியாழ்வார் வாக்கு.

தமது செய்கைகளால் அதாவது புண்ணியச் செய்கைகள் மேலிடுவதால் இறைவன் தம்மை நினைக்கிறார். நினைத்து நமதுள்ளம் புகுந்து பிறகு தம்மைத் தியானிக்கும்படி செய்கின்றார்.

"என்னை நினைந்தடிமை கொண்டேன் இடர்கெடுத்துத்
தன்னை நினையத் தருகின்றான்"

என்பது நம்பியாண்டார் நம்பி வாக்கு.

இறைவனை நினையாமற் செய்யும் புற தருமங்கள் பயனற்றதாகின்றன. நாவுக்கரசர் ஓர் சிறந்த உவமைமூலம் இதனை விளக்குகிறார். கங்கை நதி புண்ணிய நதி. அதில் நீராடினால் பாவங்களெல்லாம் நீங்கும் என்று கூறுவார்கள். கங்கை நதியைப் போன்றதே காவிரி நதியும். இந்த நதிகளைப்போலப் புண்ணியத்தைக் கொடுக்கும் தென்குமரித்துறை முதலான சமுத்திர தீரங்களும் உள்ளன. ஒரு சிந்தனையுமில்லாமல் இந்த பரிசுத்த நீரில் மூழ்குபவர்க்கெல்லாம் புண்ணியம் கிடைக்குமா? ஒருகாலமும் கிடையாது. அவ்வாறு கிடைக்குமென்றால் அந்தச் சமுத்திர நீரில் வாழும் மீன்கள் முதலிய பிரயாணிகட்கெல்லாம் நற்கதி கிடைக்கவேண்டும்.

"கங்கை யாடிலென் காவிரி யாடிலென்
கொங்கு தண்கும ரித்துறை யாடிலென்
ஓங்கு மாகடல் ஓதநீ ராடிலென்
எங்கும் ஈசனெ னாதவர்க்கில்லையே".

"அவருடைய ரூபம் கண்ணெதிரே நிற்காது கண்ணால் எவரும் அவரைப் பார்ப்பதில்லை. ஒருமைப்பட்ட மனத்துடன் இருதயத்தில் உறைபவராக அவரைத் தியானிப்பவர் அவரை அறிவர். அவ்வாறு அறிந்தவர்கள் இறவாத தன்மையை அடைகின்றனர்" என உபநிடதம் கூறுகிறது.

---

"போற்றியென் பார்அம ரர்புனி தனடி
போற்றியென் பார்அசு ரர்புனி தனடி
போற்றியென் பார்மனி தர்புனி தனடி
போற்றியென் அன்புள் பொலியவைத் தேனே".

— திருமந்திரம்

# ஓட்டைக் குடமும் நெய்க் குடமும்

ஒரு புண்ணிய தீர்த்தம் எனப் பெரியோர்களாற் சுட்டப்பட்ட ஆறு ஒன்று. ஒருநாள் அதில் பலபேர் குளிக்கிறார்கள். அவர்களுட் சிலர் இறைவன் நாமத்தைக் கூறி மனதில் தியானித்து வணங்கி நீராடுகிறார்கள். வேறு பலர் வேடிக்கைப் பேச்சுக்கள் பேசிக்கொண்டும், விளையாடிக்கொண்டும் நீராடுகிறார்கள். அவர்கள் மனதில் இறைவன் சிந்தனையே இல்லை. அன்று தீர்த்தமாடுதற்குரிய புண்ணிய தினம். அங்கு நீராடியவர்களுள் ஒரு சிவனடியாரும் இருந்தார். அவர் மக்களின் மனநிலையைப் பார்த்து வருத்தங்கொண்டார். அப்போது அவர் மற்றொரு காட்சியையும் கண்டார்.

பலபேர் அந்தத் தீர்த்த நீரை வீட்டுக்குக் கொண்டுசெல்ல விரும்பினார்கள். குடங்களிலே நீரை அள்ளிக் கரையிலே கொண்டுபோய் மூடிவைத்தார்கள். அவர்களில் ஒரு புத்திகுறைந்தவனும இருந்தான். தன் கையில் அகப்பட்ட ஒரு குடத்தை எடுதது்ச் சென்று நீரை அள்ளிக் கரையில் கொண்டுசென்று மற்றவர்களைப் போல் ஒரு பக்கத்தில் வைத்து மூடினான். போகும்போது எல்லாரும் நீர்நிறைந்த குடத்தை எடுத்துச் சென்றார்கள். அந்த மந்தகதியுடையவனால் அவ்வாறு எடுத்துச்செல்ல முடியவில்லை. ஏனென்றால் அது ஒட்டைக்குடம். நீர் முழுவதும் ஒழுகிப்போய் விட்டது. நல்ல உவமையைக் கண்டுகொண்டார் அந்தச சிவனடியார். அவர்தான் நாவுக்கரசர். மனதில் இறைவன் சிந்தனை என்றால் என்ன? நல்லறிவு என்றால் என்ன? நில்லாத உள்ளம் ஒட்டைக் குடத்திற்குச் சமானம். பவணந்தி முனிவரும் கல்வி அறிவு நில்லாத உள்ளத்தை "இல்லிக்குடம்" என்று கூறினார். நாவுக்கரசரின் இந்தச் சிந்தனை உலகெலாம் உய்ய தேவாரப் பாடலாயிற்று.

"கோடி தீர்த்தம் கலந்து குளித்தவை
ஆடி னாலும் அரனுக் கன்பில்லையேல்
ஓடும் நீரினை ஒட்டைக் குடத்தட்டி
மூடி வைத்திட்ட மூர்க்கரோ டொக்குமே".

இந்தத் தேகம் எப்போதாயினும் உடைந்துபோகும் குடந்தான். ஆனால் அதனில் எத்தனையோ இன்ப துன்பங்கள், பொருள் முதலிய வசதிகள் எல்லாம் படைத்து இன்பமாய் வாழ்கிறார்கள். திடீரென நோய் வந்துவிடுகிறது. ஒரு நோயா பலவித நோய்கள்.

இந்த நிலையை ஒரு அடியார் பார்க்கிருர். அவர் ஒரு வைணவ அடியார். அவரின் சிந்தனை பின்வருமாறு ஓடுகிறது. "இந்த உடம்பு இன்பமாகிய நெய் நிறையப்பெற்ற ஒரு குடம் என உலகினர் கருதுகின்றனர். உடம்போடு தோன்றுவது நோய் என்பதை அவர்கள் உணர்வதில்லை. எங்கே நெய் தேன் போன்ற இனிப்புப் பண்டங்கள் இருக்கின்றனவோ அங்கே எறும்புகள் தேடிச்செல்லும். எறும்புகள் நெய்க்குடத்தைச் சென்று தாக்காமல் ஏதேனும் மருந்து முதலியவற்ருல் காவல்செய்யவேண்டும்''.

இந்தக்காலத்தில் பலவித எறும்புகளையும் கொல்ல எத்தனையோ கிருமிநாசினிகளைக் கண்டுபிடித்துள்ளார்கள். பல நூற்ருண்டுகட்கு முன்னர் பெரியாழ்வார் என்னும் அந்த வைணவ அடியார் உடம்பாகிய நெய்க்குடத்தில் மொய்க்கும் எறும்பாகிய நோய்களைத் துரத்தும் கிருமிநாசினியைக் கண்டுபிடித்துவிட்டார். இறைவனைச் சிந்தையுள் வைத்தலே அந்த மருந்து.

"விட்டுணுமூர்த்தி பாம்பாகிய பாயோடும் வந்து என் உள்ளத்தில் குடிபுகுந்துவிட்டார். எனக்குக் காவல் கிடைத்து விட்டது. நோய்களாகிய எறும்புகளே வந்தவழியே போய் விடுங்கள்'' என நோய்களைப் பார்த்துக் கூறுகிருர். நாவுக்கரசர் பெரியாழ்வார் ஆகிய இரு அடியார்களிடத்தும் இறைவனைச் சிந்தையுள் வைத்து வணங்கவேண்டும் என்னும் உயரிய இலட்சியத்தைப் பார்க்கிறேம். நாம் பின்பற்றவேண்டிய இலட்சியமும் அதுதானே.

"நெய்க் குடத்தைப் பற்றியேறும் எறும்புகள் போல் நிரத்தெங்கும்
கைக்கொண்டு நிற்கின்ற நோய்கள் காலம்பெற வுய்யப் போமின்
மெய்கொண்டு வந்து புகுந்து வேதப் பிரானுர் கிடந்தார்
பைக்கொண்ட பாம்பணை யோடும் பட்டன்றே பட்டினம் காப்பே''.

---

"பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாம் காதல்
சிறந்துநின் சேவடியே சேர்ந்தேன் — நிறந்திகழும்
மைஞ்ஞான்ற கண்டத்து வானேர் பெருமானே.
எஞ்ஞான்று தீர்ப்ப திடர்''.

— காரைக்காலம்மையார்

# அன்பினில் விளைந்த ஆரமுது

தேவர்கள் தாம் செய்த நல்வினைப் பயனுல் அப் பிறவியை அடைந்தவர்கள். செல்வச் செருக்குமிக்கவர்கள், இன்பத்தை அனுபவிக்கிறவர்கள். செல்வத்தையும் இன்பத்தையும் என்றும் நீங்காமல் அனுபவிக்க விரும்பினுர்கள். இறவாமல் இருக்க விரும்பினுர்கள். தங்கள் தலைவர்களுடன் ஆலோசனை நடத்தினுர்கள். பாற்கடலைக் கடைந்தால் அமிர்தம் கிடைக்கும். அதனை உண்டால் மரணம் வராதென்று தீர்மானித்தனர். மந்தர மலையை மத்தாக்கி, வாசுகியைக் கயிருக்கிப் பாற்கடலைக் கடைந்தார்கள். அவர்கள் எதிர்பார்த்ததற்கு எதிர்மாருக ஆலகால விடம் எழுந்தது. அதற்குப் பின்புதான் அவர்களுக்கு இறைவனைப்பற்றிய நினைப்பு எழுந்தது. இறைவனைப் போற்றினுர்கள். அவர் நஞ்சைத் தம் கண்டத்துள் அடக்கித் தேவர்களுக்குத் தீங்கு வராமல் பாதுகாத்தார்.

இது ஒரு புராணக் கதை. இதிலுள்ள தத்துவத்தை நாம் சிந்திக்கவேண்டும். ''செல்வத்தைக் கொண்டு சாகா நிலையை அடையமுடியாது என்பது உபநிடத வாக்கியம். பொருளால் மாத்திரம் மானிடருக்குத் திருப்தி ஏற்படாது'' இந்த உண்மைகளையே மேற்சுட்டிய கதை எடுத்துக்காட்டுகிறது.

''எங்கும் நீக்கமற நிறைந்த மெய்ப்பொருளைக் கண்டு காதலிக்கவே வேதமோதல், கலைகள் கற்றல், தருமம் முதலிய சாதனங்கள் உண்டாக்கப்பட்டன. பரம்பொருளை மறந்து வேறெந்தப் பொருளைத் தேடி வாழ்ந்தாலும் அவை ஏமாற்றத்தையே தரும்'' என்னும் உபநிடத வாக்கியத்தையும் நாம் சிந்திக்கவேண்டும்.

இங்கு மற்ருேர் உதாரணத்தையும் பார்ப்போம் ''அம்மையே அப்பா ஒப்பிலா மணியே'' என்று இறைவனை அழைத்த மணிவாசகர் ''அன்பினில் விளைந்த ஆரமுதே'' என்றும் அழைக்கிருர். தேவர்கள் தேடிச்சென்ற அமுதம் விளையுமிடம் பாற்கடல். இறைவனுகிய அமுதம் விளையுமிடம் அன்பு. ''அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்'' என்பது திருமந்திரம். அன்பும் இறைவன்தான். அதில் விளையும் அமுதமும் இறைவன் தான். இதனைத் திருமழிசை ஆழ்வார் தம் பாசுரத்தில் தெளிவாகக் கூறுகிருர்.

"அன்பாவாய் ஆரமுத மாவாய் அடியேனுக்
கின்பாவாய் எல்லாமும் நீயாவாய்"

என்பது அவர் வாக்கு.

அமுதமாகிய இறைவன் பாற்கடலில் அமுதம் மறைந்து நின்ற தன்மை போலவும், விறகில் நெருப்பு மறைந்துநின்ற தன்மை போலவும், பாலில் நெய் மறைந்துநின்ற தன்மை போலவும், மறைந்துதான் நிற்கின்றான். அவனை எவ்வாறு வெளிக் கொண்டு வருவது. அந்த வழியையும் அடியார்கள் காட்டிச் சென்றிருக்கிறார்கள். அதற்கு மந்தர மலையையோ வாசுகி என்னும் சர்ப்பத்தையோ தேடிப் போகவேண்டியதில்லை. உளத்தில் உள்ள பொருட்கள் போதியன. நமக்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பைப் பலப்படுத்தவேண்டும். உணர்வில் அன்பு ஊறவேண்டும். முறுகிய அன்பே மத்தை இழுத்து உருளச் செய்யும் கயிறாகத் தொடுக்கவேண்டும். உயிரைக் கடைய வெண்ணெய் முன்னிற்பதுபோல் இறைவன் முன்னிற்பார்.

"விறகிற் றீயினன் பாலிற்படு நெய்போல்
மறைய நின்றுளான் மாமணிச் சோதியான்
உறவுக் கோல்நட் டுணர்வுக் கயிற்றினால்
முறுக வாங்கிக் கடையமுன் நிற்குமே".

இறைவன் "சொற்பதம் கடந்த தொல்லோன், சித்தமும் செல்லாச் சேட்சிவன்" சித்தமும் சொல்லும் செல்லமுடியாத தூரத்தில் உள்ள இறைவனை அகப்படுத்த ஒரு வலையைக் கண்டு பிடித்திருக்கிறார் மணிவாசகர். பக்திதான் அந்த வலை முறுகிய அன்புதான் பக்தி. எனவே மணிவாசகர் கருத்தும் மேற்சுட்டிய தேவாரத்தின் கருத்தும் ஒன்றுதான். மூவர் தமிழும் கோவை திருவாசகமும் ஒருவாசகம் என முன்னோர் கூறிப் போந்தனர்.

"சொற்பதம் கடந்த தொல்லோன் காண்க
சித்தமும் செல்லாச் சேட்சியன் காண்க
பத்தி வலையிற் படுவோன் காண்க"

என்பது மணிவாசகர் வாக்கு.

# பிறவியை வேண்டிய பெரியார்கள்

பிறவா யாக்கைப் பெரியோனை வழிபட்டு தாம் இனிமேற் பிறவாத நெறியை அடைய முயன்றவர்கள் ஞானிகள். அவர்கள் அந்த நெறியிலே இறைவன் அடியினை அடைந்து இறவா இன்ப நெறியினை அடைந்தார்கள். தாம் இறைவனை வழிபடுதல் அவன் மேல் அன்பு செலுத்துதல் இயற்கையான கடமை அதற்குப் பதிலாக மோட்சவீடு கூடவேண்டாம் என்று கூறுவது தலையாய அன்பு. இது அடியார்களிற் காணப்படும் வீர உணர்ச்சியெனப் பெரியபுராணம் விதந்து கூறும்.

உலகத்து இன்பங்களையும் பிறவியையும் வெறுத்தவர் நாவுக்கரசர். ஓட்டையும், செம்பொன்னையும், ஒப்புநோக்கும் திறன் உடையவர். அவர் ஒருமுறை சிதம்பரத்துக்குச் சென்றார். தில்லைச் சிற்றம்பலத்தில் நடனஞ்செய்யும் நடராசப் பெருமானைத் தரிசித்தார். அவருடைய வளைந்த புருவத்தையும், செவ்வாயிற் சிரிப்பையும், பவளம்போல் சிவந்த மேனியையும், அதிற் பூசப் பெற்ற வெண்ணீற்றையும், ஆன்மாக்களுக்கு அருள்செய்யும் தூக்கிய பாதத்தையும் கண்டார். பேரன்பு பெருக்கெடுத்தது. மாசு மறுவற்ற அன்பே ஞானமல்லவா? அந்த அன்புச் சமுத்திரத்தில் மூழ்கி, இக் காட்சியைக் காண மனிதப் பிறவியும் அவசியந்தான் என்ற முடிவுக்கு வந்துவிடுகிறார். "மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மானிலத்தே" என்று கூறிவிடுகிறார். மற்றோரிடத்தில் "என்னம் பாலிக்குமாறு கண்டின்புற இன்னம் பாலிக்குமோ இப்பிறவியே" என்று கேட்கிறார்.

அடியார் வணக்கமும் பேரின்பத்திற்கு வழிகாட்டுவது. அடியார்களை வணங்கித் திருத்தொண்டத்தொகை பாடினார் சுந்தரமூர்த்தி சுவாமிகள். அவருடைய பாதங்களை வணங்கிப் பெரியபுராணம் பாடினார் சேக்கிழார். அடியார்க்கடியாராகிய சுந்தரமூர்த்தி நாயனாரை வாழ்த்த சந்தர்ப்பம் கிடைத்த தன்மையால் இப்பிறவி நல்லதென்று தம் பிறவிக்கே வாழ்த்துக்கூறுகிறார் சேக்கிழார்.

"தேசமுய்யத் திருத்தொண்டத் தொகைமுன் பணித்த திருவாளன்
வாசமலர் மென்கழல் வணங்க வந்தபிறப்பை வணங்குவாம்"

என்பது சேக்கிழார் வாக்கு.

நம்மாழ்வார் என்னும் நாமமுடைய விட்டுணு அடியார்க்கு ஒரு சந்தேகம் எழுகிறது. மாயனாகிய திருமாலை வழிபட்டு,

அவர் பாதங்களில் சோதி வெள்ளமாகிய பேரின்பத்தில் திளைத் திருக்கும் இன்பத்தை நினைத்துப் பார்க்கிறார்:

மறுபக்கமாகவும் சிந்திக்கிறார். இழிந்ததாகிய பிறவியில் பிறந்து சிறந்த தமிழைப் பயின்று உள்ளத்திலே இறைவனைப் பற்றி நன்றாக உணரும் அறிவினைப் பெறவேண்டும். ஆயபயனாய இறைவனின் கல்யாண குணங்களை உணரவேண்டும் உணர்ந்த அந்த உணர்ச்சி கவிவடிவமெடுத்து வெள்ளமாக ஓடவேண்டும். இதனாலும் மனதிற்கு இன்பம் ஏற்படும். இந்த இரண்டு இன்பங் களிலும் எந்த இன்பம் பெரிது? இழிந்த பிறவியில் போனாலும் பரன்புகழைப் பாடுவதால் அடையும் இன்பமே கூடிய இன்பம். மோட்ச இன்பம் கூட இந்த இன்பத்திற்கு நிகராகமாட்டாது என்ற முடிவிற்கு வருகிறா. இதுதான் உண்மையான அன்பு. உண்மையான ஞானம். அடியார் உள்ளத்திலே இறைவனே நிறைந்திருக்கும்போது அவரைத் தேடிப்போகவேண்டிய அவசியம் இல்லையல்லவா? இதனை நம்மாழ்வார்

"வழிபட்டு ஓட அருள்பெற்று மாயன் கோலமலர் அடிக்கீழ்ச்
சுழிபட்டு ஓடும் சுடர்ச்சோதி வெள்ளத்து இன்புற்று இருந்தாலும்
இழிபட்டு ஓடும் உடலினில் பிறந்து தன்சீர் யான்கற்று
மொழிபட்டு ஓடும் கவிஅமுதம் நுகர்ச்சி உறுமோ முழுதுமோ."

---

"வாழி திருமன்றம் கண்ட மலர்க்கண்கள்
வாழி பெருமான் புகழ்கேட்ட வார்செவிகள்
வாழி யவனை வணங்கு முடிச்சென்னி
வாழியவன் சீர்பாடும் வாய்".

— குமரகுருபரர்

# தருமம் என்று ஒருபொருள்

"அறஞ்செய விரும்பு" என்று ஔவையாரின் ஆத்திசூடி ஆரம்பத்திலே கூறினர் "தருமம் என்று ஒரு பொருள் உளது" எனக் கந்தபுராண நூலாசிரியர் கூறினர்.

அறம் அல்லது தருமம் என்றால் என்ன இதற்குச் சமய நூல்கள் தெளிவான விளக்கந் தருகின்றன. "உயிர்களுக்கு இப்பிறவியிலும், மறுபிறவியிலும் உயர்ந்த நன்மையை அளிப்பதற்கு எது காரணமோ அதுதான் தர்மம்" என்பது உபநிடத வாக்கியம். இக் கருத்தையே "இருமையின் இன்பமும் எளிதின் ஆக்குமால்" என்று கந்தபுராணம் கூறுகிறது.

தர்மத்தை இல்லறம், துறவறம் என இரண்டாகப் பிரித்தார்கள். இங்கே இல்லறத்தார்களுக்கு மூன்றுவித கடமைகள் கூறப்பட்டுள்ளன. முதலாவது தேவர்களுக்குச் செய்யப்படும் யாகம் முதலிய கடமைகள், இரண்டாவது மனிதருக்குச் செய்யப் படும் உதவி. இது தானம் எனப்படும். மூன்றாவது தமக்குரிய வேதநூல் முதலியவற்றை ஓதுவது. திருவள்ளுவர் தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல், தான் என இக் கடமையை ஐந்தாக வகுத்தார்.

துறவற ஒழுக்கம் பலவகைப்படும். தன்னடக்கம், சத்தியம், பொறுமை, தளராமை, லோபமின்மை ஆகிய ஐந்துடன் மேலே இல்லறத்தார்க்குக் கூறிய மூன்றையும் சேர்த்து எட்டெனக் கூறப்படும்.

தருமம் என்பது மேலே கூறப்பட்டவை மட்டுந்தான் எனக் கூறமுடியாது. பிற உயிர்களிடத்து அன்பு செய்தல், பகை, சினம், ஆசை, பொறாமை முதலிய தீய குணங்களை நீக்கி வாழ்தலும் தர்மந்தான். அறம் இல்லாவிட்டால் உலகத்தில் உயிர் வாழுதல் அரிதாகிவிடும். தருமத்தைப் பாதுகாத்தால் அன்பு பெருகும். இதனால் இறைவனது அருள் கிட்டும்.

"தருமமே போற்றிடின் அன்பு சார்ந்திடும்
அருளெனும் குழவியும் அனையும்"

என்பது கந்தபுராணம். இறைவனுடைய அருளை அடைவதற்கு உதவுவது அறம். அறத்திற்கு அன்பும் அருளும் துணையென்பது ஆன்றோர் கருத்து.

இறைவனையே தருமக்கடல் என அழைத்தார் வள்ளுவர்.

"அறவாழி அந்தணன்தாள் சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்தல் அரிது"

என்பது அவர் வாக்கு. தருமத்தின் பயனால் இப்பிறவியில் இலக்குமியின் அருள் கிட்டும் என்பது உறுதி. திருமாலைப்பற்றிக் கூறவந்த ஒரு ஆழ்வார் "தரும அரும் பயனாய திருமகளார் தனிக்கேள்வன்" எனக் குறிப்பிடுவது இதற்குச் சான்றாகும்.

தருமத்தால் கிடைப்பது புண்ணியம். தரும வழியில் நில்லாதவர்க்குக் கிடைப்பது பாவம். புண்ணிய வழியில் நிற்போர்க்கு இறைவன் அருளால் அவர்கள் வேண்டுதல் செய்யாமலே பொன்னும், பொருளும் போகமும் கிடைக்கும். அறவழி நிற்க இறைவன் அருள்வேண்டும். அதுமாத்திரமல்ல அறத்திற்கு அடிப்படையான அன்பும் வேண்டும். இந்த மூன்று பொருள்களையுந் தான் நாம் இறைவனிடம் வேண்டுதல் செய்யவேண்டும்.

"ஆதலின் யாம் இரப்பவை, பொருளும் பொன்னும போகமுமல்ல நின்பால், அருளும் அன்பும் அறனும் மூன்றும, உருள் இணர்க் கடம்பின் ஒலிதாரோயே"

"அறன் அறியார் அண்ணல் பாதத்திறனறியார்" என்பது திருமூலர் வாக்கு. எனவே இறைவனை வணங்கத் தருமம் வழி காட்டுகிறது. இறைவனைப் புண்ணியனே என அழைத்தார் நாவுக்கரசர். புண்ணியனாகிய இறைவனை வணங்கப் பல அறங்கள் நல்வினைகளைப் புரிந்திருக்கவேண்டும். காவிரி நதிக்கரையிலே உள்ள "திருவலஞ்சுழி" என்னுந் தலத்தில் உள்ள சிவபெருமானை வழிபட்ட ஞானசம்பந்தர் தன் மனதைநோக்கிக் கூறும் தேவாரம் நாம் சிந்திப்பதற்குரியது. "மனமே! இந்தப் பூமியில் நீ முன்பு செய்த நல்வினைப்பயனால் திருவலஞ் சுழியிலுள்ள இறைவனை வாயாரப் பாடியும், ஏத்தியும், வழிபாடு செய்யும் பேறினைப் பெற்றாய்" எனக் கூறினார்.

"என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே யிருங்கடல் வையத்து
முன்ன நீபுரி வல்வினைப் பயனிடை முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரி சூழ்திரு வலஞ்சுழி வாணனை வாயாரப்
பன்னி யாதரித் தேத்தியும் பாடியும் வழிபடும் அதனாலே".

# அவனருளாலே அவன்றாள் வணங்கி

இறைவனை அடைதற்கு இறைவன் அருளே துணைசெய்யும். எனவே அருளின் துணைவேண்டி நிற்றல் வேண்டும். இறைவன் அருள் இருட்டில் விளக்கைப்போன்றது. இருட்டில் விளக்கை முன்னால் பிடித்துக்கொண்டு செல்பவன் அதனால் பயனடைய முடியும். அதுபோல அருளின் துணைகொண்டு செல்பவன் இறைவனைக் காண்பான். இதனைத் திருவருட்பயன் பின்வரும் குறள் மூலம் நன்கு விளக்குகின்றது.

"உற்கைதரும் பொற்கை உடையவர்போல் உண்மைப்பின்
நிற்க அருளார் நிலை"

"நெருப்புக் கொள்ளியை வைத்திருக்கும் அழகிய கையை உடையவர், தமக்கு முன்னால் ஒளி பொருந்தப் பிடித்து நிற்பது போல உண்மையாகிய இறைவனைக் காண அருளுக்குப் பின் நிற்க" என்பது மேற்கூறிய குறளின் பொருளாகும்.

இதே கருத்னத மணிவாசகரும் பல இடங்களிற் கூறியுள்ளார். "நானார் என்னுள்ளமார், ஞானங்களார் என்னை யாரறிவார் வானோர் பிரானென்னை ஆண்டிலனேல்" எனத் திருக்கோத்தும்பியில் கூறியிருப்பதையும், "அவனருளாலே அவன்றாள் வணங்கிச் சிந்தை மகிழச் சிவபுராணம்" பாடியதாகக் கூறுவதையும் குறிப்பிடலாம்.

திருநாரையூர் பொல்லாப்பிள்ளையாரின் நல்லருள் பெற்றவர் நம்பியாண்டார் நம்பி. அவர் திருமுறைகளாகிய அரிய ஞானத் தமிழ் நமக்குக் கிடைக்கக் காரணமாயிருந்தவர். விநாயகப் பெருமான் அருள்தந்த வரலாற்றை உலகம் அறிந்து உய்ய வேண்டும் என்ற நல்லெண்ணத்தால் ஒரு வெண்பாவில் கூறுகிறார். சோலைகள் பொருந்திய திருநாரையில் உள்ள யானை முகத்தையுடையவரும், முக்கண் மூர்த்தியாம் சிவபெருமானின் திருப்புதல்வருமாகிய விநாயகப்பெருமான் என்னை முதலில் நினைந்து, பின் அந்த அருள்மூலம் விநாயகப்பெருமானாகிய தன்னை நினைக்கத் தருகின்றான் என்று கூறுகிறார்.

"என்னை நினைந்தடிமை கொண்டென் இடர்கெடுத்து
தன்னை நினையத் தருகிறான் — புன்னை
விரசு மகிழ்சோலை வியன்நாரை யூர்முக்கண்
அரசுமகிழ் அத்திமுகத் தான்".

சுந்தரமூர்த்திநாயனரை இறைவனே வலியவந்து ஆட்கொண்டு "சொற்றமிழ் பாடுஎன்று" கட்டளையிட்டார். இறைவனைப் புகழ்ந்து பாடுதற்கு இறைவனே அடியார்களுக்கு அருள் செய்தார். அதாவது, இறைவன் தானே தன்னைப் புகழ்ந்து பாடுவதற்கு காரணமானுர். இறைவனே பாடினுன் என்றுகூடக் கூறலாம். இதனுலே திருமுறைகளும், ஆழ்வார் பிரபந்தங்களும் இறைவன் வாக்காகக் கருதப்பட்டு "ஞானத்தமிழ்" என்னும் நாமத்தைப் பெற்றன.

நம்மாழ்வார் என்னும் திருமாலடியார் திருமால் தம்மைக் கொண்டே தம்மைப் பாடுவித்த விந்தையைப் பாடுகிருர். முதலில் தானே இறைவன் என்று அருள்செய்து தன்னை அறிவிக்கிருர். பிறகு என் நாவிலே புகுந்து தன் புகழைத் தானே பாடுகிருர் ஏன்? ஏனைய அடியார்களும் தன்புகழைத் தாமறிந்து உய்வதற்காக. எனவே இப்பாடல்களிற் புகழப்படும் முதல்வனும் திருமால் தான் பாடிய முதல்வனும் அவர்தான். அவரை நம்மால் மறக்கமுடியுமா என்று பாடுகிருர் நம்மாழ்வார்.

> "ஆம்முதல்வன் இவனென்று தற்றேற்றிஎன்
> நாமுதல் வந்து புகுந்து நல்லின்கவி
> தூமுதல் பக்தற்குத் தான்தன்னைச் சொன்ன
> வாய்முதல் அப்பனை என்றும் மறப்பேனே".

---

> "அருளால் வருநஞ்சம் உண்டுநின் றுளைய அமரர்குழாம்
> பொருளர் கவிசொல்ல யானும்புன் சொற்கள் புணர்க்கலுற்றேன்
> இருளா சறவெழில் மாமதி தோன்றவும் ஏற்றதென்ன
> வெருளா தெதிர்சென்று மின்மினி தானும் விரிகின்றதே"

— பொன்வண்ணத்திருவந்தாதி

# பக்தியின் பயன் பக்தியே

அன்பின் முதிர்ச்சியே பக்தி எனப்படும். வழிபாட்டு நெறியில் அன்பின் முதிர்ச்சி அவசியமாகும். வழிபாடாகிய வயலில் அன்பு எனும் விதைதனை இட்டு இறைவன் அருள் என்னும் நீரைப் பாய்ச்சினுல் வளர்ந்து வருவது முறுகிய பக்திதான். பக்தியால் வழிபடுதலையே தொண்டர் விரும்புவர். இதனை

"அருச்சனை வயலுள் அன்பு வித்திட்டுத்
தொண்ட உழவர் ஆரத்தந்த
அண்டத்து அரும்பெறல் மேகன் காண்க"

என மணிவாசகர் எடுத்துக்கூறுகிருர்.

பக்தி நிறைந்த வழிபாட்டைவிட வேறு வழிபாடும் இருக்கிறதா என்றுதான் பெரியோர்கள் கூறிச் சென்ருர்கள். தொண்டர்கள் பக்தி வழிபாடு களங்கமற்றது என்ருலும் பிரதியுபகாரம் கருதும் வழிபாடும் உண்டு. பிரதியுபகாரம் கருதும் வழிபாடு காமியம் எனவும், ஒன்றும் வேண்டாம் வழிபாடு ஓமியம் எனவும் கூறப்படும். தேவர்கள் காமிய வழிபாடு புரிந்தார் என்பதை

"வாழ்த்துவதும் வானவர்கள் தாம்வாழ் வான்மனம் நின்பால்
தாழ்த்துவதும் தாமுயர்ந்து தம்மை எல்லாந் தொழவேண்டி"

என்னும் திருவாசக அடிகள் நமக்கு உணர்த்துகின்றன.

தொண்டர்கள் ஐம்புல ஆசையையும் அடக்கியவர்கள். உள்ளம் கள்ளமற்று இருந்தால்தான் ஞானம் பிரகாசிக்கும். இதற்கு அறிவின் பயனுகிய நல்லொழுக்கம் அவசியம்.

"அறிவென்னுந் தாள்கொழுவி ஐம்புலந் தம்முள்
செறிவென்னும் திண்கதவம் செம்மி"

என்னும் உயரிய கொள்கையே தொண்டர் கொள்கையாக இருந்தது. இதனை மற்ருெரு விதமாகச் சொன்னுல் ஐம்புலன்களையும் இறைவனுகிய ஒருவன் வழிச்செலுத்தினுர்கள். தேவர்கள் அப்படியல்ல. தாங்கள் மேலும் மேலும் இன்பத்தை நுகர வேண்டுமென்பதற்காக இறைவனை விழிப்புனலுக வணங்கினுர்கள். இறைவனைத் தொழுவதில் அண்டர்களுக்கும் தொண்டர்களுக்கும் மனநிலையில் வித்தியாசம் உண்டென்பது தெளிவு. தேவர்கள் காமியஞ்செய்து காலங்கழிப்பவர்கள், தொண்டர் ஓமியஞ்செய்து உறுதியைத் தேடுபவர்கள் பின்வரும் ஒரே

பாடலில் இருவித வழிபாட்டையும் கந்தபுராண நூலாசிரியர் தெளிவாகக் காட்டுந்திறம் உணர்ந்து போற்றுதற்குரியது.

''கண்டு கேட்டவை யுண்டுயிர்த் துற்றறி கருபவி
கொண்ட ஐம்புலன் ஒருங்குற நடாத்திய கொள்கைத்
தொண்டர் கூட்டமும் விழிவழிப் புனலுகத் தொழுங்கை
அண்டர் கூட்டமும் ஆலயந் தொறுந்தொறும் அருவால்''

வேண்டுதல் வேண்டாமை இல்லாதவன் இறைவன். இறைவன் மாட்டுப் பக்தி செய்பவர்களும் அந்த நற்பண்பை உடையவர்கள். இறைவன் மிகப் பெரியவன். அவன் மோட்சம் என்னும் அழியாத பேரின்ப வீட்டைக் கொடுப்பவன். தொண்டர்களோ அந்தப் பேரின்ப வீட்டையும் வேண்டாமென்று சொல்லி விடுகிறுர்கள். எனவே தொண்டர்கள் இறைவனிலும் உயர்ந்தவர்களாய் விடுகிறுர்கள்.

''பக்தி என்பது தானே பயனுய் இருப்பது'' உபநிடத வாக்கியம். பரிபாடல் என்னும் இலக்கிய நூலில் திருமாலை வணங்கும் ''நல்லெழுதியார்'' என்னும் புலவர் கருத்தும் இங்கு நோக்கற்பாலது.

''.........இறைஞ்சினெம் வாழ்த்தினெம்
முன்னும் முனைும் யாம்செய்தவப் பயத்தால்
இன்னும் இன்னும் எம்காமம் அதுவே''

இவ்வாறுன பிரதிபலன் கருதா வணக்கமுடையவர்களையே உலகம் தொண்டர்கள் எனப் போற்றியது. அவர் வழிபாட்டையே சான்றேர் பின்பற்றினர். அவர்களை வீரர் எனச் சேக்கிழார் வியந்து போற்றினுர்.

''கேடும் ஆக்கமும் கெட்ட திருவினுர்
ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்கினுர்
கூடும் அன்பினிற் கும்பிடலே அன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினுர்''.

## உள்ளக்கமலம்

"பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை" என்றார் நாவுக்கரசர். மனிதனுக்கு உயர்வைக்கொடுப்பது உள்ளம். "வெள்ளத்தனைய மலர்நீட்டம் மாந்தர் உள்ளத்தனைய உயர்வு" என்று திருவள்ளுவர் கூறினார். இதனாற்போலும் ஆன்றோர் உள்ளத்தைத் தாமரை மலருக்கு உவமித்தனர்.

உள்ளக் கமலத்தை மலரச்செய்வது கல்வி. இதனை "மனமுகிழ்ந்த சுருள்நீக்கி மலர்விக்கும் கலைபயிலத் தொடங்கு வித்தார்" என்னும் சேக்கிழார் வாக்கு எடுத்துக்காட்டுகிறது. சிந்தை மலர்ந்தெழும் உணர்வு ஞானம். கற்றதின் பயன் கடவுளைத் தொழுதல். அதனால் ஞான உணர்வு ஏற்படுகிறது. அந்த ஞானமாகிய தேன் உள்ளம் நிறைந்து உடலெங்கும் பரவி எழுந்து ஞானத்தமிழாக வெளிவந்தது. ஞானசம்பந்தர் தம் முதற் தேவாரமாகிய "தோடுடைய செவியன்" என்னும் தேவாரத்தை இந்த நிலையிற்தான் பாடினார். இதனைச் சேக்கிழார் பின்வரும் அடிகளில் எடுத்துக்காட்டுகிறார்.

"எண்ணிறந்த கருணையினால் நின்றாரை எதிர்காட்டி
உண்ணிறைந்து பொழிந்தெழுந்த உயர்ஞானத் திருமொழியால்"

உள்ளம் தூய்மையாக, வெள்ளையாக இருக்கவேண்டும் என்பது ஆன்றோர் கொள்கை. "பூசும் நீறுபோல் உள்ளும் புனிதர்கள்" என்னும் சேக்கிழார் வாக்கு இதற்குச் சான்றாகும். வெள்ளிமலையாகிய திருக்கைலாசமலையை உலகமென்னும் கொடியில் மலர்ந்த வெண்டாமரை மலருக்கு ஒப்பிடுகிறார் சேக்கிழார். இந்த வெண்டாமரை மலரைச் சிவபெருமானைத் தேறுமன்பர் சிந்தைக்கு ஒப்பிடுகிறார் கந்தபுராண நூலாசிரியர். குமரகுருபரர் உள்ளத்தை வெண்டாமரை மலருக்கு ஒப்பிடுகிறார்.

"வெண்டா மரைக்கன்றி நின்பதந் தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாது கொல்லோ"

என அவர் வாணியை நோக்கிக் கூறுகிறார்.

தாமரை மலருக்கு மற்றோர் சிறப்பு சூரியனை நோக்கல். இதனால் தாமரைநாயகன் என்றொரு சிறப்புப் பெயர் சூரியனுக்குண்டு. இதனால் உள்ளக்கமலமும் இறைவனையே நோக்கவேண்டுமென்பது தெளிவு. இறைவன் ஆன்மநாயகர் அல்லவா?

"ஒண்பூ உயரும் கதிரவனே நோக்கும்......
தாமரையாள் கேள்வன் ஒருவனேயே நோக்கும் உணர்வு"
எனப் பொய்கையாழ்வார் கூறினர்.

இறைவனைப் போற்றிய வள்ளுவர் "மலர்மிசை ஏகினன் மாணடி" என்று கூறுகிறார். அடியார் உள்ளக்கமலத்தில் வீற்றிருப்பவனாகிய இறைவனது பாதங்கள் இதன் பொருளாகும். முருகப்பெருமான் அடியார் உள்ளக்கமலத்தில் வீற்றிருப்பவர். அதனால் "குகன்" என்னும் பெயர்பெறுகிறார். அவர் தோற்றிய வுடனே சரவண தடாகத்திலுள்ள தாமரை மலரில் வீற்றிருந்தார் எனக் கந்தபுராணம் கூறுகிறது.

முருகப்பெருமான் ஒரு தாமரை மலரில் வீற்றிருக்கிறார். அந்தத் தடாகத்தில் பல தாமரை மலர்கள் அவரைச் சுற்றி இருக்கின்றன. புலவர் உள்ளத்தில் ஒரு சிறந்த உண்மை புலனாகின்றது. முருகப்பெருமான் வீற்றிருக்கும் தாமரை மலர் ஒரு அடியாரின் உள்ளக் கமலமாகத் தெரிகிறது. அவரைச் சுற்றி நிற்பன எல்லாம் ஏனைய அடியாரின் உள்ளக் கமலங்கள். அந்தத் தாமரை மலர்கள் முருகப்பெருமானே ஒரே மலரில் வீற்றிருத்தல் முறையல்ல எல்லா மலர்களிலும் தாங்கள் வீற்றிருத்தல் வேண்டும் என்று வேண்டுதல் செய்கின்றன. இவ்வாறான காட்சியைப் புலவர் காண்கிறார். இக் காட்சியை ஒரு செய்யுள் மூலம் எமக்குத் தருகிறார். நாம் முருகப்பெருமானே நம் உள்ளத்திலிருந்து அருள்புரியும்படி தியானித்தல் வேண்டும் என்ற உண்மையை இதன்மூலம் தெளியவைக்கிறார்.

"முண்டக மொன்றில் வைகும் முருகனைச் சுற்றிச் செங்கேழ்
வண்டுளர் கமலக்காடு வான்புனற் றடத்தில் நிற்றல்
அண்டர்கள் முதல்வ ஓர்பால் அன்றியெம் மெல்லாம் பீடம்
கொண்டருள் முறையி னென்று நோற்றிடும் கொள்கைத் தன்றே"

# உளம் நிறைந்த இறைவன் சிந்தனை

"என்னுடைய அங்கங்களும் வாக்கும் பிராணனும் பலமும், கண் காது முதலிய எல்லா இந்திரியங்களும், தத்தம் தொழிலை நன்கு செய்யும் திறமுடையன ஆகட்டும்" எனக் கேன உபநிடதம் கூறும் இந்த வாக்கியத்தின் பொருள் என்ன? நமது உடல் உலகத்திலே தனது தொழிலைப் பிழையின்றிச் செய்வதற்கு இறையருள் அவசியம். மற்றோர் வகையாக நோக்கினால் "மானிடப் பிறவிதானும் வகுத்தது மனம் வாக்குக் காயத் தானிடத்தைந்து மாடும் அரன் பணிக்காக" என்பது சைவ சித்தாந்தக் கொள்கை.

தமிழ்நாட்டிலே தோன்றிய இலக்கியங்கள்கூட இந்தக் கொள்கையை ஓரளவு வற்புறுத்தின. கேள்வியினால் வரும் அறிவே சிறந்த அறிவு. அதனைக் கேள்விச் செல்வம் என்றனர் ஆன்றோர். ஒருவனுக்கு எவ்வளவு கேள்விச் செல்வம் இருந்தென்ன? இறைவனுடைய புகழைக் கேளாத செவி பிரயோசனமற்றது. இதனை மக்கள் காவியம் என இக்காலத்தவராற் புகழப்படுவதும், பஞ்சகாவியங்களில் ஒன்றுமாகிய சிலப்பதிகாரம் எடுத்துக்காட்டுகிறது. "திருமால் சீர் கேளாத செவியென்ன செவியே" என்பது சிலப்பதிகாரம் காட்டும் உண்மை.

இவ்வாறு கண்களுக்கினிய காட்சி எவ்வளவோ உண்டு. கடல், பூஞ்சோலை மாலைக்காலத்தின் மனங்கவர் தோற்றம். இவ்வாறு பலபல காட்சிகள். இவற்றிலே இறைவன் தன்மையைக் கண்டனர் பலர். மகிழ்ச்சிக்குரிய காட்சியாகவே கண்டு ஒதுக்கிவிடுவர் சிலர். அது அவரவர் மனதைப்பொறுத்தது.

மாரிகாலம் முகில்கள் கருக்கொண்டு கருநிறம் படைத்து மின்னி இடித்து மழை பெய்யவருகிறது. இக் கார்காலத்தைக் கண்டவுடன் ஓர் இளமங்கைக்குத் தன்னைப் பிரிந்துசென்ற நாயகன் நினைவு வருகிறது. ஒரு அடியவர்க்கோ இறைவனின் சிந்தனை உள்ளத்தில் நிறைகின்றது. சிவபெருமானது இயல்பான அருளால் தேவர்களைக் காக்க நஞ்சுண்டு கறுத்த கண்டமும், அவர் கையிலுள்ள வில்லும், மின்னலைப்போல் ஒளிவீசும் சடையும், இடிபோல முழங்கும் அவர் பாதங்களில் உள்ள வீரக்கழல்களும், மழைமுகிலைக் கண்ட ஒரு அடியார் ஞாபகத்திற்கு வருகின்றன. அது ஞானத்தமிழாக வெளிவருகிறது.

"மையார் மணிமிடறு போற்கருகி மற்றவன்றன்
கையார் சிலைவிலகிக் காட்டிற்றே — ஐவாய
அழலரவம் பூண்டான் அவிர்சடைபோல் மின்னிக்
கழலரவம் காண்புற்ற கார்".

இந்தப் பாடலைப் பாடியவர் நக்கீரதேவனார். இவர் இதைப் போல் முகில்மேல் எட்டுப் பாடல்கள் பாடியுள்ளார். அவை காரெட்டு என்னும் பெயருடன் பதினொராம் திருமுறையில் உள்ளன.

நம்முடைய தலை முதலாய அங்கங்கள் எல்லாம் இறை வணக்கத்திற்கே ஆளாக்கப்படவேண்டுமென்பது நாவுக்கரசர் கருத்து. அதனாலே அவர் திருவங்கமாலை என்கின்ற தேவாரப் பதிகம் பாடினார். அந்தப் பதிகத்திலே அவர் மூக்கை நோக்கிக் கூறும் பதிகம் நம் சிந்தனைக்குரியது. கண்கள் இறைவனைச் காணலாம், வாய் வாழ்த்தலாம், நெஞ்சு நினைக்கலாம், கைகள் கூப்பலாம், கால்கள் வலம்வரலாம், ஆனால் மூக்கு என்ன செய்யலாம் என்று கூறுவதில் ஒரு சிறப்பைக் காணலாம். மூக்கை "முரலும்படி" கேட்கிறார். முரலுதல் மெல்லிய சத்த மிடல். இறைவனை மெல்லிய ஒலியால் வண்டு சத்தமிடல் போன்று தொழுதல். இதனை வேறுவிதமாகச் சொன்னால் மூச்சிற் கூட இறைவன் சிந்தனை இழையோடவேண்டும். அதனால் நமது உள்ளமும் செயல்களும் உயர்வடையும். நம் சமுதாயம் உயர்ச்சி அடையும்.

"மூக்கே நீமுரலாய் முதுகாடுறை முக்கண்ணனை
வாக்கே நோக்கிய மங்கை மணாளனை மூக்கேநீமுரலாய்".

# மனமெனும் வண்டு

பண்டைய இலக்கியங்களில் "வண்டுவிடுதூது" பல இடங்களிற் காணப்படுகிறது. பக்தி இலக்கியங்களிலும் இந்த முறை கையாளப்பட்டுள்ளது. சமய இலக்கியங்களில் மனதை வண்டிற்கு உவமையாக்கினர். உவமை என்று கூறுவதைவிட மனதையே வண்டாக உருவகித்தனர் என்று கூறுவதே சரி. மனம் உலக இன்பங்களிற் சென்று மயங்கும் இயல்புடையது. வண்டுகளும் உலக மலர்களிலே உள்ள தேனை உண்ண விரும்பி உழன்று திரியும் தன்மையுடையன.

வண்டுகளுக்கு ஆறு குணங்கள் உண்டு. எனவே அவை அறுபதம் என அழைக்கப்படுகின்றன. மனதிற்கும் ஆறு குணங்கள் உண்டு. அவை நடுநிலை, பொறுமை, தன்னையடக்கல், வேதனை, நம்பிக்கை, அமைதி என்பன.

வண்டுகள் தம் சிறகின் வன்மையால் தாம் நினைத்தவிடம் போகும் தன்மையுடையன. மனமும் தான் நினைத்தவிடத்திற்குப் பிரயாணம் செய்யும் தன்மையுடையது. மனந்தான் ஈசனுக்கும் எமக்குந் தொடர்பையுண்டாக்கி எம்மை ஈசன்பாதம் அடையச் செய்கிறது. பொய்கையாழ்வார் மனமெனும்வண்டைப் பார்த்துக் கூறும் பாசுரத்தில் இந்தச் சிறப்பு நன்கு புலனாகின்றது. அவர் ஈசனுடைய "மலரடிக்கீழ் எம்மைச் சேர்ப்பிக்கும் வண்டுகளே" என வண்டுகளை விழிப்பதன் கருத்தை நாம் உற்று உணர வேண்டும். வண்டுகளே உங்கட்கு விண்ணுடு போவது எளிது. பேசத்தக்கவற்றையும் சிந்தித்துப் பேசுவது எளிது. பிறர் ஏசும்படி நெய்யுண்ட தேவர்பிரான் திருவடிக்கீழ் சேர்விப்பது உமக்கு மிக லேசான தொழில் எனறு பாடுகிறார்.

"வீசும் சிறகால் பறந்தீர் விண்ணாடும் நுங்கட் கெளிது
பேசும் படியன்ன பேசியும் போவது நெய்தொட வுண்டு
ஏசும் படியன்ன செய்யு மெம்மீசர் விண்ணோர் பிரானார்
மாசில் மலரடிக் கீழெமைச் சேர்விக்கும் வண்டுகளே"

பொய்கை ஆழ்வார் வண்டைப் பார்த்துப் பின்வருமாறு கேட்கிறார். நீங்கள் நிலப்பூ, மரப்பூ, நீர்ப்பூ ஆகிய மலர்களுள் உள்ள தேனையுண்டு உழன்று திரிகிறீர்கள் ஆனால் கண்ணனது 'குழல்வாய் இசைபோல வண்டுகள் வாரும் மலருளதோ நும் இயவிடத்தே"

வண்டுகள் நால்வகைப்படும். அவை சுரும்பு, வண்டு, தேன், ஞிமிறு என்பன. இவற்றுள் வண்டும் தேனும் தாமரை போன்ற சிறந்த மலரை மாத்திரம் தேடிச்செல்லும். இவை இரண்டிலும் சிறந்தது "தேன்" எனக் கூறப்படும் கோத்தும்பியாகும். மக்களிற் பலவித மனநிலையுடையவர்களைக் காணலாம். நன்னெறியில் நாட்டமுடையார்க்கே நல்லுபதேசம் கூறப்படும். எனவே மாணிக்கவாசகர் திருக்கோத்தும்பி சொன்னார். திருமங்கையாழ்வாரும் கோத்தும்பி என முடியும் பாசுரம் பாடினர்.

திருக்கோத்தும்பியில் மணிவாசகர் "அரச வண்டே!" ஒரு தினை அளவு சிறிய தேனையுள்ள மலரில் அதனை விரும்பி உண்டு உழலாது தன்னை நினைக்குந்தோறும், பேசுந்தோறும், காணுந்தோறும், எக்காலத்தும், உடம்பின்கண்ணுள்ள எல்லா எலும்புகளும் நெக ஆனந்தத்தேன் சொரிய நடனம்செய்யும் மலரடிக்கே சென்று ஊதுவாயாக" என்று கூறுகிறர். இந்தச் செய்யுளின் கருத்தைக் கூர்ந்து கவனித்தால் "மனமே நீ உலக இன்பங்களில் ஆழாமல் அழிவில்லா இறைவன் திருவடியை அடைந்து, அந்த மிலா இன்பம் அடைவாயாக என்னும் உபதேசம் அமைந்திருத்தலைக் காணலாம்.

"தினைத்தனை உள்ளதோர் பூவினில் தேனுண்ணுதே
நினைத்தொறும் காண்தொறும் பேசுந்தொறும் எப்போதும்
அனைத்தெலும் புள்நெக ஆனந்தத் தேன்சொரியும்
குனிப்புடை யானுக்கே சென்றூதாய் கோத்தும்பி"

# கல்வியும் ஞானமும்

கல்வி, ஞானம், தானம், தவம் இவையெல்லாம் ஒன்றற்கொன்று தொடர்புடையன. "அறம் பொருள் இன்பம் வீடடைதல் நூற்பயன்" என்ருர் பவணந்திமுனிவர். ஆனுல் கல்வியோ கடலாக விரிந்துகிடப்பது. ஞானத்தைப்பெற முயற்சியில்லாமற் கற்கும் கல்வி ஒருவனைப் பலதுறைகளிலும் கொண்டு போய்த் தள்ளிவிடும். அத்தகைய கல்வியால் நன்மைக்குப் பதில் தீமையே ஏற்படும். இதைக் கருதியே "கல்வி என்னும் பல்கடற் பிழைத்தும்" என மணிவாசகர் கூறியுள்ளார்.

ஸ்ரீராமகிருஷ்ணர் ஓரிடத்தில் "வைஷ்ணவ மதப்படி பகவானை வெறும் அறிவாலோ தருக்கத்தாலோ அறியமுடியாது. பக்தியின்றி எந்த நோன்புகளும், தவங்களும், கிரியைகளும் பயனைத்தரா" என்று கூறுகிருர். இதே கருத்தைச் சைவ அடியாராகிய நாவுக்கரசர் ஒரு தேவாரத்தில் தெளிவாகக் கூறியுள்ளார்.

"சாத்தி ரம்பல பேசும் சழக்கர்காள்
கோத்தி ரமுங்கு லமுங்கொண் டென்செய்வீர்
பாத்தி ரஞ்சிவ மென்று பணிதிரேல்
மாத்தி ரைக்குள் அருளு மாற்பேறே"

வேதங்களை இறைவனிடமே உபதேசமாகப் பெற்ற பெருமை உடையவர்கள் சனகன் முதலாய நான்கு முனிவர்களும். ஆனுல் அவர்களுடைய மனம் அடங்கவில்லை. அவர்கள் மீண்டும் சிவபெருமானிடம் போனுர்கள். அவர்கள் இறைவனை நோக்கி

"இருட்பெருங் கடலுள் யாமத் தெறிமருந் திடைப்பட் டாங்கு
பொருட்பெரும் கடலாம் வேதம் புடைதொறும் அலைப்ப இந்நாள்
அருட்பெரும் கடலே எய்த்தோம் அமைந்தில உணர்வு ——..."

என்று கூறுகிறுர்கள். இதனுல் வெறும் கல்வியறிவு மாத்திரம் ஞானத்தைக் கொடுக்கமாட்டாதென்பதை அறிகிறேம்.

ஆனுல் கல்வி ஞானத்தின் வழிகாட்டியாய் அமைந்துள்ளது என்பதை மறுக்கமுடியாது. "மாதவம் செய்த தென்றிசை" எனச் சேக்கிழாராலும் "சித்திக் கொரு விதையாகிய தென்னுடு" என ஆழ்வாராலும் புகழ்ந்துரைக்கப்பட்டது தென்னுடு. இங்கே "பக்திக்குரிய மொழி" என மேல்நாட்டாராற் புகழ்ந்து போற்றப்படும் தமிழில் உள்ள கலைகளெல்லாம் ஞானத்தைச் சுட்டும் கலைகளாகவே உள்ளன. சங்கீதம் சிற்பம் போன்ற கவின்

கலைகளும், அரசியல் நீதி போர் போன்ற புறக் கலைகளும் பக்தியோடு தொடர்புபடுத்தியே உள்ளன. இறைபக்தி இல்லாவிட்டால் வாழ்க்கையே பாழ் என்பது தமிழர் மரபு. எல்லாக் கலைகட்கும் இறைவன் உடலும் உயிருமாயிருக்கிறான் எனத் திருவாய்மொழி கூறுகிறது.

"நாவினுள் நின்று மலரும் ஞானக் கலைகளுக்கெல்லாம்
ஆவியும் ஆக்கையுந் தானே"

என்பது திருவாய்மொழி.

கல்வியின் பயன் "இறைவன் நற்றாள் தொழல்" என்பர் வள்ளுவர். தொழுதலினாலே இறைவன்பால் பக்தி வளரும் இறைவன் அருள்வழி ஞானமுண்டாகும். இறைவனிடத்தில் இடையறு அன்பு ஞான நிலையின் ஒரு இலக்கணம். தன்னை மறந்தின்பமுறுதல்தான் உயரிய இன்பம்.

இந்த இடத்திலே உளந்தான் ஒருவருக்குச் சிறந்த துணையாகிறது. திருமாலடியார் ஒருவர் தம் மனதைத் திருமாலிடம் தூதுவிட்டார். அந்த மனமோ திருமாலைக் கண்டவுடன் அவரின் இலக்குமியுறையும் மார்பிலே, பெரிய புயங்களிலே, அங்கே அணியப்பெற்ற துளவ மாலையிலே மதிமயங்கித் தன்னை மறந்துவிட்டது. தூதுவிட்டவரையும் மறந்துவிட்டது. இதனை அந்த அடியார் கூறுந்திறன் படித்து மகிழ்தற்குரியது.

"திருத்துழாய் தனில் விரும்பியேகொடு திரும்பியே வருதலின்றியே
வாரிருக் குழலை மலர்மடந்தை யுறைமார்பிலே பெரியதோளிலே
மயங்கி இன்புற முயங்கி என்னையும் மறந்து தன்னையும் மறந்தே"

# எண்ணத்தில் முகிழ்ந்த இறைவண்ணம்

இறைவனைச் சிந்திக்கவும் வாழ்த்தவும் வந்திக்கவும் உள்ளம் விரும்புவது முன் பல பிறவிகளிலும் ஏற்பட்ட நல்வினைகளின் பயனென்பர். அந்த நல்வினைப்பயனுடையவர்கள் கருவிலே திருவுடையவர்களாகத் தோற்றினர்கள்.

''உருத்தெரியாக் காலத்தே உட்புகுந்தென் உளம்மன்னி
கருத்திருத்தி ஊண்புக்கு கருணையினால் ஆட்கொண்ட''

என மாணிக்கவாசகர் பாடியருளினர்.

''மாணிக்கவாசகர் முதலாம் அடியார்கள் இறையின் இன்னருள் உருவினை இடையறுது எண்ணியெண்ணி அவ்வெண்ணத்தில் மூழ்கி யதன் உணர்வின் முகிழ்ந்தவையே அவர்தம் பாடல்களாகும்'' என்பது ஒரு மேல்நாட்டறிஞரின் கருத்தாகும்.

அடியார்கள் தம் கருத்துக்களைப் பிறன்மேலேற்றிப் பாடும் போது அவை மேலும் சுவையளிக்கின்றன. ஒரு பெண்குழந்தை திருத்தமாகப் பேசமுடியாத பருவம். வாய்திறந்து பேசினால் யாழோசையோ குழலோசையோ என ஐயுற்று மகிழ்வர் கேட்டோர். ஆனால் அக்குழந்தை என்ன கூறுகிறது. திருக் கழிப்பாலை என்னும் தலத்தில் எழுந்தருளியுள்ள இறைவனே! என்னைக் கைவிடலாமோ? என்னை எப்போது ஆட்கொள்வது என்று கேட்கிறது. தாய்தந்தையர்க்கு ஆச்சரியமாயிருக்கிறது.

''மழலை தான்வரச் சொல்தெரி கின்றிலன்
குழலின் நேர்மொழி கூறிய கேண்மினோ
அழகனே கழிப் பாலையெம் மண்ணலே
இகழ்வ தோவெனை ஏற்றுக்கொள் ளென்னுமே''

இப்பாடல் திருநாவுக்கரசர் தேவாரத்துள் உள்ளன.

மற்றோர் பெண்குழந்தை புழுதியளைந்த உடம்பு. சிற்றாடை யைத் திருத்தமாகக் கட்டமாட்டாது. ஆனால் ஒருநாள் அவள் கழுத்திலே சங்கிலியை அணிந்துகொண்டாள். கையில் வளையல் களை அணிந்தாள். கண்ணாடிக்கெதிரே போய்நின்று வளையல் சத்தமிடும்படி கைகளைக் குலுக்கினாள். இயல்பாகச் சிவந்த உதடுகளுக்கு மேலும் சாயமூட்டினாள். மாயவன் ஆயிரம் நாமங் களை அவள் வாய் கூறியது. தாய் இவற்றையெல்லாம் கண்டு அவள் நிலையை ஊகித்துக்கொண்டாள். தாயின் கூற்றாகப் பாடுகிறார்.

''கறைபூணும் கண்ணடி காணும் தன்கையில் வளைகுலுங்கும்
கூறை யுடுக்கும் அயர்க்கு தன்கொவ்வைச் செவ்வாய் திருத்தும்
தேறித்தேறி நின்று ஆயிரம் பேர்த்தேவன் திறம் பிதற்றும்
மாறில் மாமணி வண்ணன் மேலிவன் மாலுறு கின்றளே''

கன்னிப்பெண்கள் பலர் கூடி அம்மனை ஆடுகிறார்கள். இவர்கள் முன்பு கூறியவர் போன்ற பேதைப்பருவத்தினர் அல்லர். ஆகவே ஒரு கன்னிப்பெண்தான் இறைவனைக் கூடி அடையப்போகும் இன்பத்தைக் கற்பனைசெய்து பாடுகிறாள். ''பெருமானுக்குரிய கொன்றைமலர் மாலையை நான்சூடுவேன். அவர் தோள்களைச் சேருவேன். பிறகு ஊடுவேன். அவர் கொவ்வைச்செவ்வாய்க்கு உருகுவேன். அவரைப் பிரிந்திருக்கும்போது வாடுவேன். சேரும் போது மகிழ்வேன். அவருடைய பாதங்களைச் சிந்திப்பேன். அவற்றையே பாடுவோமென்று கூறுகிறாள். இறைவனிடத்திலே கொண்ட காதல் உருகிப் பாடலாக வெளிவருகிறது.

''சூடுவேன் பூங்கொன்றை சூடிச்சிவன் திரள்தோள்
கூடுவேன் கூடிமுயங்கி மயங்கி நின்று
ஊடுவேன் செவ்வாய்க் குருகுவேன் உள்ளுருகி
தேடுவேன் தேடிச் சிவன்கழலே சிந்திப்பேன்
வாடுவேன் பேர்த்தும் மலர்வேன் அனலேந்தி
ஆடுவான் சேவடியே பாடுதும் காணம்மானாய்''

---

பெறுதற் கரிய பிறவியைப் பெற்றும்
பெறுதற் கரிய பிரானடி பேணர்
பெறுதற் கரிய பிராணிக ளெல்லாம்
பெறுதற் கரியதோர் பேறிழந் தாரே. — திருமூலர்

# பண்முத்தமிழ்க்கோர் பயன்

தமிழோடிசை பாடுபவர்க்கருள்பவன் பரமன். இனிய தமிழின் சுவையாய் விளங்கும் இறைவன், அத் தமிழாற் பாடுவோர் பெறும் பயனுகவும் இருக்கிறுர். எனவே ''முத்தமிழ்க்கோர் பயனே சவுந்தர பாண்டியனே'' எனப் பாடினுர் குமரகுருபரர். அருட்சக்தியாகும் உமையம்மையாரை ''நறை பழுத்த துறைத் தீந்தமிழின் ஒழுகுநறுஞ் சுவையே'' என்றும் பாடினுர்.

இசையுந் தமிழும் ஒன்ருேடொன்று இசைந்தவை. இறைவனின் அன்பை வளர்ப்பன. ஞானத்தைத் தருவன. ''எழுநரம்பின் ஓசையானை'' என்பது நாவுக்கரசர் வாக்கு. இசைபாடும் இரண்டு கந்தர்வர்களைச் சிவபெருமான் இரண்டு காதுகளிலும் குண்டலங்களாக அணிந்துள்ளார். ''தோடுவார் காதன்றே தோன்றுத் துணை ஐயர் பாடுவார் ஒரிருவர்க்கிட்ட படைவீடு'' என்பது திருப்பாதிரிப் புலியூர்க் கலம்பகம்.

இறைவனை அடையும் விருப்புடையார்கள் இசையையும் தமிழையும் விரும்பிக் கற்ருர்கள்.

திருக்கோவையாரில் ஒரு காட்சியைப் பார்ப்போம். தலைவன் ஒருவன் பாங்கனை நாடிச் சென்ருன். பாங்கன் தலைவனை உற்றுப் பார்த்தான். அவனுடைய தேகம் மெலிவடைந்திருந்தது. பிரதானமாகப் புகழைத் தேடுதற்குரிய அவனது புயங்கள் வாடிக் கிடந்தன. பாங்கன் யோசித்தான் தலைவன் வாட்டத்திற்குக் காரணமென்ன?

''ஒண்டீந் தமிழின் துறைவரீய் நுழைந்தாரோ'' என்பது பாங்கனின் முதற் சிந்தனை. ''ஒண்டீந்தமிழ்'' என்பதற்கு ''வீட்டிற்கு வழிகாட்டும் ஒள்ளிய அன்பு நெறியால் இனிமை பெற்ற தமிழ்'' என்பது உரையாசிரியர் கருத்து. அந்தத் தமிழ் இறைவனுல் கூடல் எனப் பெயர்கொண்ட மதுரையில் ஆராயப் பட்டது. இறைவரோ அவர் அடியாராகிய சிந்தையுள்ளும் நீர் வளப்பம்மிக்க செல்வத்தினைக்கொண்ட தில்லைச் சிற்றம்பலத்தில் உறைபவன்.

இறைவன் ஆராய்ந்த இன்தமிழோ அகம் புறம் என்னும் இருதுறைகளையுடையது. அவற்றுள் மனதுள் தாமே அநுபவித்து அறியும் இன்பம் அகப்பொருள் எனப்படும். இது சிற்றின்பப் பாற்படினும் இதுவே பேரின்ப உணர்ச்சியைத் தந்து பேரின்ப

வீட்டைத் தரவல்லது. இத்துறை தமிழிலன்றி வேறொரு மொழி யிலும் இல்லை. இதனாற் தமிழ் உயர்ந்தது. இசைக்கு அடிப்படை யானது ஏழு ஸ்வரங்கள். இவை ஆதித்தமிழில் குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்பனவாகக் கூறப் பட்டுள்ளன. இந்த இசையின் வடிவினன் இறைவன்.

பாங்கன் தலைவனை நோக்கிக் கூறுகிறான். நீர் வளப்பம்மிக்க தில்லைச் சிற்றம்பலத்தும் என் சிந்தையுள்ளும் உறைகின்ற இறைவன், கூடலில் ஆய்ந்த ஒளிபொருந்திய தமிழின் துறைகளை ஆராய்ந்தோ அல்லது ஏழிசைச் சூழலாகிய பாடலை ஆராய்ந்தோ உன்னுடைய தோள் வாடியது. உனது தோள்களுக்கு வந்த தென்ன? என்று தலைவனைக் கேட்டான்.

மணிவாசகர் கூறும் இக் கருத்தமைந்த பாடலைப் பார்ப் போம்.

"இறைவான் புனற்றில்லைச் சிற்றம் பலத்தும் என்சிந்தையுள்ளும்
உறைவான் உயர்மதிக் கூடலின் ஆய்ந்தவொண் டீந்தமிழின்
துறைவாய் நுழைந்தனை யோவன்றி ஏழிசைச் சூழல்புக்கோ
இறைவா தடவரைத் தோட்கென் கொலாம்புகுந் தெய்தியதே".

---

செங்கலச முலையார்பால் சிந்தைபல தடுமாறி
ஆங்கமிக மெலியாதே அன்புருக அருள்வாயே
செங்கைபிட கொடியோனே செஞ்சொல்தெரி புலவோனே
மங்கையுமை தருசேயே மன்றுள்வளர் பொருமானே.

— அருணகிரிநாதர்

# நல்லக விளக்கு

நமது வாழ்வில் இரவு பகல் என்னும் காலங்கள் கொண்டது ஒருநாள். இரவில் வாழ்வதற்கு ஒளி அல்லது விளக்குத் தேவையாகின்றது. இருளை மக்களோ பறவைகளோ விரும்புவதில்லை. சிங்கம், புலி போன்ற கொடிய பிராணிகளே விரும்புகின்றன. இருளிற் கிடந்த பிராணிகள் சூரியனைக் கண்டவுடன் மகிழ்ச்சி அடைகின்றன. எனவே "உலகம் உவப்ப வலனேர் புதிரிதரு பலர்புகழ் ஞாயிறு" எனக் கூறப்பட்டது.

பண்டைய தமிழ் நூல்களிலே நல்ல செயல்கள் சிந்தனைகளை விளக்கு என்றும் அல்லாத தீய செயல்கள் சிந்தனைகள் இருளாகவும் குறிக்கப்பட்டுள்ளது. நாலடியாரில் தவம் ஒளியாகவும், பாவமாகவும் உவமிக்கப்பட்டுள்ளது.

"விளக்குப் புகவிருள் மாயந்தாங்கு ஒருவன்
தவத்தின்முன் நில்லாவாம் பாவம்"

என்பது நாலடியார்.

பெரியபுராணத்திலே சேக்கிழார் நமக்கொரு சிறந்த விளக்கைக் காட்டுகிறார். திருநாவுக்கரசர் பரசமய நெறியில் நின்றபொழுது, அவரைச் சைவசமயத்தவராக்க இறைவனிடத்தில் வேண்டுதல் செய்தார் திலகவதியார். இறைவன் அருளால் சைவசமயம் புகுந்த நாவுக்கரசருக்கு வீபூதியணிந்து, அவர் தேவாரம் பாடவும், தொண்டு செய்யவும் ஊக்கியவர் திலகவதியாராவர்.

தானும் தவஒழுக்கத்தில் நின்றது மாத்திரமல்ல, திருநாவுக்கரசரையும் தவ ஒழுக்கத்தில் தூண்டியவர் திலகவதியார், எனவே சேக்கிழார் திலகவதியாரைக் குறிப்பிடும்போது "தூண்டுதவ விளக்கனையார்" என்று கூறும் செய்யுள் படித்து மகிழ்வதற்குரியது.

"தூண்டுதவ விளக்கனையார் சுடரொளியைத் தொழுதென்னை
ஆண்டருளி னீராகில் அடியேன்பின் வந்தவனை
ஈண்டுவினைப் பரசமயக் குழிநின்று மெடுத்தாள
வேண்டுமெனப் பலமுறையும் விண்ணப்பம் செய்தனரால்"

இறைவனே எங்களுக்கு நல்வழிக்குதவும் விளக்கு என்பது விளக்கு வழிபாட்டின் தெளிவான கருத்து.

"திகழுஞ் சோதி மெய்க்கிளருஞ் ஞானவிளக்குக் கண்டாய்
மெய்யடியார் உள்ளத்து விளக்குக் கண்டாய்"

என்பது நாவுக்கரசர் வாக்கு.

விண்ணுற அருட் கதிர் பரப்பி விரிகின்ற இளங் கதிர் போன்ற முருகப்பெருமான், மெஞ்ஞானம் விளங்கும் அடியார் உள்ளத்து விளக்கொளியாகவும் விளங்குகின்றார்.

"விண்ணோடு மண்ணை விழுங்கி அருட்கதிர்
விரிக்கும் இளஞ்சுடரே
மெய்ப்புலன் வேய்ந்து சமைத்ததோர் வீட்டை
விளக்கும் விளக்கொளியே"

என்பது முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ். மீனாட்சி பிள்ளைத் தமிழில் அகந்தையை நீக்கிய அடியாருள்ளத்தே அம்பிகை விளக்கொளியாக விளங்குகிறாள் என்று கூறியதும் இங்கு நினைவு கூரத்தக்கது.

வீட்டில் ஒளியைக் கொடுக்கும் விளக்குப்போல, சூரிய சந்திரராகிய பலரும் காணும் விளக்கைப்போல, ஞான விளக்கைப்போல, நமசிவாய என்னும் மந்திரமும், உள்ளத்தின் இருளை நீக்கி ஒளியைக் கொடுக்கும் நல்ல விளக்காகும் என்பது நாவுக்கரசர் கருத்து. நாமும் இறைநாமமாகிய பஞ்சாக்கர மந்திரத்தைச் சிந்தித்து உள்ளத்தில் நல்விளக்கை ஏற்றுவோமாக.

"இல்லக விளக்கது இருள் கெடுப்பது
சொல்லக விளக்கது சோதியா யுள்ளது
பல்லக விளக்கது பலரும் காண்பது
நல்லக விளக்கது நமசி வாயவே".

---

"எளிய வாதுசெய் வாரெங்கள் ஈசனை
ஒளியை யுன்னி யுருகு மனத்தராய்த்
தெளிய வோதிச் சிவாய நமவெனும்
குளிகை இட்டுப்பொன் னாக்குவன் கூட்டையே".

— திருமந்திரம்

## படியாய்க் கிடந்துன் பவளவாய் காண்பேனே

வாயால் வாழ்ந்தவர்களும் உளர் கெட்டவர்களும் உளர். வாயால் இறைவனை வாழ்த்தித் தாம் வாழ்ந்தது மாத்திரமல்ல, உலகையே வாழ்வித்தவர்களும் உளர்.

''கண்மலர்கள் நீர்ததும்ப கைமலர்களாற் பிசைந்து
வண்ணமலர்ச் செங்கனிவாய் மணியதரம் புடைதுடிப்ப''

ஞானசம்பந்தர் அழுதார். அதனால் மறையொழி பெருகியது. எவ்வுயிரும் குதூகலித்தன. வேதநெறி தழைத்தோங்கியது. மிகுசைவத் துறை விளங்கியது. எனவே அவருடைய வாயைப் புனிதவாய் என அழைத்தார் சேக்கிழார்.

சிவபெருமானைப் பாடிய அடியார்கள் அவரது பவளம் போன்ற செம்மேனியைப் பாடினார்கள். ''பவளமே மகுடம், பவளமே திருவாய், பவளமே திருவுடம்பு'' என்று பாடினார் ஒரு அடியார். ''குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண்சிரிப்பும்'' காண்பதற்காக மனிதப்பிறவி வேண்டினார் திருநாவுக்கரசர். இறைவனுடைய வாய் மற்றவர்களைத் தூய நெறிப்படுத்தும் வாய். அதுமாத்திரமல்ல தூமறை பாடும் வாய். ''சொற்றமிழ் பாடுகென்றார் தூமறை பாடும் வாயார்'' என்பது பெரியபுராணம்.

மணிவாசகருக்கு ஞான உபதேசம் செய்த திருவாய். வேதங்களை நால்வருக்கு உபதேசித்த திருவாய். இதனாலே மணிவாசகர்

''வேதமொழியர் வெண்ணீற்றர் செம்மேனியர்
நாதப் பாறையினர் அன்னே யென்னும்''

என்று பாடியருளினார்.

உலக வழக்கிலே ஒரு பெண்ணிடம் ஆராக் காதல்கொண்டவர்கள் அவளைவிட்டுப் பிரியாமலிருக்கவே விரும்புவார்கள். அவளோடு கூடவிட்டுப் பிரியாது, அவளால் உபயோகிக்கப்படும் பல பொருட்கள் செய்த புண்ணியம், தாங்கள் செய்யவில்லையே என வருந்துவார்கள். அவ்வாறான உலகியற்றுறையிலே நின்று முருகப்பெருமான் வள்ளிநாயகி அம்மையாரை நோக்கிக் கூறும் பாடல் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

''கோடிவர் நெடுவரைக் குறவர் மாதுநீ
ஆடிய சுனையதாய் அணியும் சாந்தமாய்
சூடிய மலர்களாய்த் தோயப் பெற்றிலன்
வாடினேன் இனிச்செய்யும் வண்ணம் யாவதே''

திருமாலிடம் ஆராக் காதல் கொண்டார் குலசேகரப் பெருமாள் என்னும் ஆழ்வார். அவர் காயாம்பூ வண்ணத்த ராகிய திருமாலின் செவ்வாயை எந்தநேரமும் பார்க்கவேண்டும் பார்த்துக்கொண்டே இருக்கவேண்டும் என நினைத்தார். அரம்பை யர்கள் சூழ்ந்து அணிசெய்யும் ஆளுத செல்வத்து வானரசையோ அல்லது மண்ணரசையோ அவர் விரும்பவில்லை. செடியாய் வளரும் வல்வினைகளை நீக்கும் கண்ணனின் பவளவாயைப் பார்த்துக்கொண்டே இருக்கவேண்டும் அதற்கு என்ன வழி?

இதோ அவர் அந்த வழியைக் கண்டுகொண்டார். அதை உலகறியும்படி கூறுகிறார். திருவேங்கடம் என்னும் தலத்திலே திருமால் எழுந்தருளியுள்ளார். வானவரும், அரம்பையரும், அடியார்களும் அவரை வணங்க வருகிறார்கள். வணங்கிவிட்டு அவர்கள் திரும்பிப்போய் விடுவார்கள். ஆனால் அந்தப் படிக் கல்லு அங்கேயே இருக்கிறது. படிக்கல்லு எந்தநேரமும் திருமாலின் பவளவாயைப் பார்க்கும் பாக்கியம் பெற்றிருக்கிறது. எனவே தானும் படிக்கல்லாகிவிட்டால்...... குலசேகரப் பெருமாளின் இந்த எண்ணம் திருமொழியாக வெளிவருகிறது.

"செடியாய் வல்வினைகள் தீர்க்கும் பெருமாளே
நெடியானே வேங்கடவா நின்கோ யில்வாசல்
அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்தியங்கும்
படியாய் கிடந்துன் பவளவாய் காண்பேனே".

# கற்பு நெறியும் வழிபாட்டு நெறியும்

"ஒரு தாய் தன் குழந்தையிடம் அன்பு செலுத்துவது போலவும், கற்புள்ள ஒரு குலப்பெண் தன் நாயகனிடம் அன்பு செலுத்துவது போலவும் நாம் இறைவனிடம் அன்பு செலுத்த வேண்டும்'' என்பது இராமகிருஷ்ணபரமஹம்சரின் போதனை.

தமது கணவரையே தெய்வமாகக் கருதுவது கற்புடைய மங்கையரின் பண்பு. தமது கணவரைத் தெய்வமாக வழிபட்டே பண்டைய மகளிர் பல அரிய செய்கைகளைச் செய்துள்ளனர். மங்கையர் தமது நாயகரைத் தெய்வமாகக் கருதும் இயல்பைப் பல புராணங்களும் இலக்கியங்களும் விதந்து பேசுகின்றன. ஒரு தடாகத்திலே பல ஆண்களும் பெண்களும் நீராடுகிறார்கள். சில பெண்கள் கரங்களால் நீரை அள்ளிக் கணவர்மேல் வீசுகிறார்கள். அக்காட்சி புலவருக்கு அவர்கள் தம் கணவருக்குப் பூசை செய்வதுபோலத் தோற்றுகிறது.

"தாம்பெறு கொழுநர் தம்மைத் தத்தமக் குரிய புத்தேள்
ஆம்பரி சுண்ணும் தன்மை ஐயம தில்லை யென்ன
காம்புறழ் தடந்தோள் நல்லார் கணவர்மேல் கரத்தாலள்ளி
பூம்புனல் வீசுகின்றார் பூசனை புரிகு வார்போல்.''

தான் வணங்குந் தெய்வத்தை உறுதியாக உள்ளன்போடு யாவற்றிலும், யாவரிலும் மேலாக நேசிப்பவர்களே அடியார்கள் எனப்படுவர். உதாரணமாக அருணகிரிநாதரைக் குறிப்பிடலாம். அவருடைய திருப்புகழிலே அம்பிகையைப்பற்றி, சிவபெருமானைப் பற்றி, திருமாலைப்பற்றியெல்லாம் பாடப்பெற்றுள்ளன. ஆனால் அவருடைய அன்பு முருகப்பெருமானிலேதான் நிலைபெற்றிருக்கக் காணலாம். இவ்வாறான உறுதியான வழிபாடே கற்பு வழிபாடாக விளங்குகின்றது.

---

தாயுமானவர் இதனை ஒரு பாடல்மூலமாக விளக்குகிறார். கற்பொழுக்கமுள்ள பெண்கள் தமது நாயகரையே யாவரிலும் மேலாக மதிப்பார்கள். அதுபோல எங்களுக்கு இன்பத்தையும் சிறப்பான வாழ்க்கையையும் நல்கும் தலைவரே உம்மைப்போன்று சிறந்த தெய்வமாக நாம் வேறொருவரையும் மதிக்கமாட்டோம் என்று பாடுகிறார்.

"கற்புறு சிந்தை மாதர் கணவனை யன்றி வேறோர்
இற்புறத் தவரை நாடார் யாங்களும் இன்ப வாழ்வும்
நற்பொறி யாக நல்கும் தலைவநின் நலத்தோர் தெய்வம்
பொற்புறக் கருதோம் கண்டாய் பூரண னந்த வாழ்வே''

"உள்ளேன் பிறதெய்வம் உன்னையல்லால் எங்கள் உத்தமனே" என்று மணிவாசகர் கூறுவதும் இங்கு குறிப்பிடத் தக்கது.

குலசேகர ஆழ்வார் இந்த நெறியை இன்னும் மிகத் தெளிவாகக் காட்டுகிறார். "கல்லென்றாலும் கணவன் புல்லென்றாலும் புருஷன்" என்பது நம் நாட்டினரிடையே வழங்கிவரும் ஒரு முதுமொழி. அந்த முதுமொழியின் கருத்தையே ஒரு செய்யுளிற் தெளிவாகக் கூறுகிறார். ஒரு குடும்பம். அக் குடும்பத்தின் கணவன் நற்செய்கைகளும் நற்குணங்களும் உடையவனல்ல. அவனை அறிந்தவர்களெல்லாம் அவனை இகழ்ந்து பேசுகிறார்கள். அவன் மனைவி சிறந்த கற்பொழுக்கம் உடையவள். மற்றவர் இகழ்ந்து பேசுவதாலோ அல்லது அவனுடைய கெட்ட குணங்களாலோ அவள் மனதில் ஒரு மாற்றமும் ஏற்படவில்லை. ஏனென்றால் அவன்தான் அப் பெண்ணின் தெய்வம். இக் கொள்கையை அவள் உறுதியாகப் பின்பற்றுகிறாள். அதுபோலத் திருமால் ஆட்கொள்ளாவிட்டாலும், திருமாலை வணங்கும் கொள்கையையே உறுதியாகப் பின்பற்றுவேன் என்கிறார்.

"கண்டா ரிகழ்வனவே காதலன்தான் செய்திடினும்
கொண்டானை யல்லா தறியாக் குலமகள்போல்
விண்டோய் மதில்புடைசூழ் வித்துவக் கோட்டம்மாநீ
கொண்டா ளாயாகிலுமுன் குரைகழலே கூறுவனே".

---

"அவர்க்கே எழுபிறப்பும் ஆளாவோ மென்றும்
அவர்க்கேநாம் அன்பாவ தல்லாற் — பவர்சடைமேல்
பாகாப்போழ் சூடும் அவர்க்கல்லாண் மற்றொருவர்க்
காகப்போம் எஞ்ஞான்றும் ஆள்".

— காரைக்காலம்மையார்

## கலத்தலைக் காகம்

ஒரு மரக்கலம் நடுக்கடலிற் போய்க்கொண்டிருக்கிறது. அதன் உச்சியிலே ஒரு காகம். அந்த மரக்கலம் கரையில் நிற்கும் போதே அந்தக் காகம் அதன்மேல் வந்து தங்கியிருந்தது. மரக்கலம் அசைந்து மெல்ல மெல்லக் கடலிற் பிரயாணஞ் செய்த பொழுது காகத்திற்கு அது வேடிக்கையாயிருந்தது. சற்று நேரம் அப்படியே இருந்து பார்க்கலாமே என அது நினைத்திருக்கலாம். மரக்கலம் கரையை விட்டுக் கடலில் வெகுதூரம் சென்று விட்டது. அந்த நேரத்திற்றான் காகத்திற்கு மரக்கலத்தை விட்டு வேறிடத்திற்குப் பறந்துபோவோமே என்ற எண்ணம் உண்டாயது. மரக்கலத்தை விட்டு ஒருபக்கம் பறந்தது. எங்கும் ஒரே நீர்ப்பரப்பு. மறுபக்கம் பறந்தது. அங்கேயும் எங்கும் நீர்ப்பரப்பு. இவ்வாறு நாலு பக்கங்களிலும் நீர்ப்பரப்பைக் கண்ட காகம் மரக்கலத்தின் உச்சிக்குத் திரும்பி வந்தது. எங்கு பார்த்தாலும் நீர். தனக்கு இப்போ துணையாயுள்ளது மரக்கலந்தான் என்ற உண்மையைக் காகம் இப்பொழுது உணர்ந்துவிட்டது. எனவே அங்கு தங்கிவிட்டது. இந்தக் கலத்தலைக் காகம் உதாரணமாகக் காட்டப்பட்ட ஒரு நிகழ்ச்சியைப் பார்ப்போம்.

தேவர்கள் சூரபன்மன் தமக்குச் செய்யும் துன்பத்தைத் தாங்கமுடியாமற் சிவபெருமானிடம் முறையிட்டார்கள். ஒரு முறையல்ல பலமுறை சென்று, சென்று முறையிட்டார்கள். ஒருநாள் அவ்வாறு தேவர்கள் சென்று முறையிட்டபொழுது ஒரு முகத்தோடு இருந்த சிவபெருமான் ஆறு முகங்களுள்ள வடிவத்தை எடுத்தார். அந்த ஆறு முகங்களிலுமுள்ள ஆறு நெற்றிக்கண்களிலிருந்தும், ஆறு அக்கினிப் பொறிகள் தோன்றின. அந்த அக்கினிப் பொறிகள் எங்கும் பரந்தன. சிவபெருமானின் முன்னே நின்ற தேவர்கள் அச்சங்கொண்டவர்களாகி ஓடினார்கள். அக்கினிப் பொறிகள் விரைவாக எங்கும் பரந்த தன்மையால் ஓரிடத்திலும் அவர்கள் தங்கமுடியவில்லை. திரும்பியம் இறைவனிடத்திலே வந்தார்கள். அப்போதுதான் இறைவன் நம்மைக் காப்பார் என்ற புத்தி வந்தது. அல்லது முன்பே ஓடாமல் நின்றிருக்கலாமல்லவா? வலையிலே அகப்பட்ட மானைப் போல அக்கினி சூழ்ந்தபடியாற்றான் இந்தப் புத்தி வந்தது.

"வலைத்தலை மானென வன்னி சூழ்ந்துழித்
தலைத்தலை இரிந்துளார் தம்மின் மீள்குறு
நலத்தகு கண்ணுதல் நாதற் சேர்ந்தனர்
கலத்தலை அகன்றிடாக் காகம் போன்றுளார்"

உலகத்திலே எங்கு பிறந்தாலும் எப்படி வாழ்ந்தாலும் இறைவனுடைய சிந்தனை நம் மனதில் இருக்கவேண்டும். அதனால் தீமை நீங்கும். நன்மை ஏற்படும். இறைவன் நன்மையையே தருபவர். சிவன் என்னும் சொல் மங்கலம் தருபவர் என்னும் பொருள்படும். இறைவனை உள்ளத்தே கொண்டவர்கள் பிற உயிர்களுக்குத் தீமை நினைக்கமாட்டார்கள். அவர்களுக்குந் தீமை ஏற்படமாட்டாது இக் கருத்துக்களை அறிவுறுத்தவே "நலத்தகு கண்ணுதல் நாதன்" என இச் செய்யுளிற் கூறப்பட்டது.

பிறவி என்பது கரைகாணமுடியாத கடல். அதிலே பல இன்பங்கள் இருப்பதுபோற் தோன்றினாலும் உண்மையிலே துன்பமே அதிகம். அந்தக் கடலைத் தாண்டிக் கரையேறவைக்கும் வள்ளம் போன்றது இறைவன் நாமம். எங்கே சென்றாலும் இறுதியிற் சேரவேண்டிய இடம் இறைவன் திருவடி. இன்பம் அடையும் இடமும் அதுதான்.

"கைதொழுதுற்றவர் தாமொளிபெற்றனர் தாமே"

என்பது திருநாவுக்கரசர் பாடல்.

குலசேகர ஆழ்வார் இக் கருத்தைத் தெளிவாகத் தமது பாடலிற் கூறுகிறார். தேவரீரது திருவடியல்லாது நான் எங்கு போய் உய்வேன் என்று தாம் வழிபடு கடவுளும், வலிய யானையை அழித்தவருமாகிய திருமாலை நோக்கிக் கேட்கிறார்.

"வெண்கண் திண்களி றடர்த்தாய் வித்துவக் கோட்டம்மானே
எங்குபோய் உய்வேன் உன்னிணை யடியே யடைவல்லால்
எங்கும் போய்க்கரை காணா எறிகடல்வாய் மீண்டேகும்
வங்கத் தின்கூம் பேறும் மாப்பறவை போன்றேனே."

---

"தருதுயரந் தடாயேல் உன்சரணல்லால் சரணில்லை
விரைகுழவு மலர்ப்பொழில்சூழ் வித்துவக் கோட்டம்மானே
அரிசினத் தாலீன்றதா யகற்றிடினும் மற்றவள்தன்
அருள்நினைந் தேயழுங்குழவி அதுவே போன்றிருந்தேனே".

— குலசேகர ஆழ்வார்

# நினைப்பற நினைந்தேன்

இறைவன் உலகெலாமாகி வேறாய் உடனுமாய் நிற்பவன் எனச் சைவ சித்தாந்த நூல்கள் கூறும். இறைவன் அருளைப் பெற்ற அடியார்கள் இந்த உண்மையை நன்கு அறிவர்.

இறைவன் தன்மையை உலகிலுள்ள எல்லாப் பொருட்களிலும் கண்டனர். இறைவன் திருமேனியோ விண்ணும் மண்ணும் நிறைந்தும், அப்பாலும் நிறைந்தும் எல்லையற்ற பேரொளியாய் எங்கும் தோற்றப்பெறும். அந்த ஒளியே நம்முள்ளத்தும் ஊடுருவி நிற்கும் என்பர். அந்த நிலையை இறைவன் அருள் இல்லாவழி பிரித்தறிய முடியாது. இதனையே

"பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்
பரத்தில் மறைந்தது பார்முதற் பூதம்"

எனத் திருமந்திரம் கூறும். இதனையே சற்று விளக்கமாகப் பரிபாடல் கூறுகிறது.

"நின் வெண்மையும் விளக்கமும் ஞாயிற்றுள
நின் தண்மையும் சாயலும் திங்களுள
நின் சுரத்தலும் வண்மையு மாரியுள
நின் புரத்தலு நோன்மையு ஞாலத்துள
நின் நாற்றமு மொண்மையு பூவையுள"

என்பது பரிபாடல், இதனாலே எல்லாவுலகையும் உயிரையும் தன் மேனியாகக் கொண்டவன் என்னும் சிந்தனையும், அச் சிந்தனையால் தன்மாட்டுள்ள பற்று நீங்கி எல்லா உயிரும் தன்னுயிர் போல் எண்ணியொழுகும் கருணையும் உண்டாகும். இதனால் இறைவனை நினைப்பற நினைக்கும் நிலைதோன்றும்.

"இன்றெனக் கருளி இருள்கடிந் துள்ளத்
தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்
நீஅலாற் பிறிது மாற்றின்மை"

என்பது மணிவாசகர் வாக்கு. "நினைப்பற" என்பதற்கு வேறொன்றையும் நினையாமல் நினைந்து என்று பொருள்கூறுவர். பேரொளியில் நிற்கும் ஒருவனுக்கு அந்த ஒளிக்கு அப்பால் ஒன்றும் பார்க்கமுடியாமல் இருப்பதுபோல, இறைவன் அருளில் மூழ்கியவர்களுக்கு வேறு நினைப்பு அற்றுப்போவது இயல்பு. சிந்திக்கும் முறையில் சிந்தித்தல் என்பது மற்றொரு பொருளாகும். அதாவது தற்போத வழியால் சிந்தியாது திருவருள் வழியாற்

சிந்தித்தலாம். இதனையே "அவனருளாலே அவன்றாள் வணங்கி" என மணிவாசகர் கூறுவர்.

இறைவன் இன்பத்தை விரும்புபவர்கள், விருப்பு, வெறுப்பு, வேண்டுதல் வேண்டாமை ஆகிய தன்மைகள் அற்றவர்கள். அவைபோலவே மறப்பும் நினைப்பும் அற்றவர்கள். "நாயகன் சேவடி தைவரு" சிந்தையுடையவர்கள். அவர்கள் நினைக்கவோ அல்லது மறக்கவோ முடியுமா? அடியார் ஒருவர் தம்மை மறந்து விடுவாரோ என நினைத்து, இறைவன் அவர் உள்ளத்தைக் கவர்ந்து அதையே தம் இருப்பிடமாக்கிக்கொள்கிறான் வெளியில், ஆலயத்தில் - மழையில் - வெப்பத்தில் - சூரிய சந்திரர்களிற் கண்ட இறைவன் உள்ளத்திலே நின்றால் மறக்கமுடியுமா? மணிவாசகர் "நினைப்பற நினைத்தல்" பற்றிக் குறிப்பிடுகிறார். நம்மாழ்வார் "மறப்பற நினைத்தல்" பற்றிக் குறிப்பிடுகிறார். மறப்பும் ஞானமும் தாமறியவில்லை என்றே அவர் பாடுகிறார். மறப்பதும் நினைப்பதும் தன்செயலில்லை என்று அவர் பாடுவதும் ஊன்றி நோக்கி ஆராயத்தக்கது.

"மறப்பும் ஞானமும் நானொன்று உணர்ந்திலன்
மறக்கும் என்று செந்தாமரைக் கண்ணொடு
மறப்பு அற என்னுளே மன்னினான் தன்னை
மறப்பனோ இனியான் என மணியையே".

---

"செல்வன் நாரண னென்றசொல் கேட்டலும்
மல்கும் கண்பனி நாடுவன் மாயமே
அல்லும் நன்பகலு மிடையீ டின்றி
நல்கி யென்னை விடான்நம்பி நம்பியே"

— நம்மாழ்வார்

# இயற்கையின் எழிலில் இறையடித்தாமரை

திருச்செந்தூர் முருகப்பெருமானுடைய ஆறுபடை வீடுகளில் ஒன்று. "முத்தம் தெள்ளிக் கொழிக்கும்" கடற்கரையில் முருகப் பெருமான் கோயில் இருக்கிறது. இதற்கு ஒரு காரணத்தை ஆதி சங்கரர் தாம் அருளிய சுப்பிரமணிய புஜங்கம் என்னும் வடமொழித் தோத்திர நூலிற் கூறியுள்ளார்.

"உயர்ந்தும் பெரிதாகவும் வருகின்ற சமுத்திர அலைகள் திருச் செந்தூர்க் கரையை வந்தடைந்தவுடன், சிதறி எப்படி நாசத்தை அடைகின்றனவோ அதுபோல முருகப்பெருமானுடைய பாதார விந்தங் களைத் தரிசனம் செய்யும் மக்களுடைய சகல பாவங்களும், ஆபத்துக் களும் நாசமடையும் என்று உதாரணமூலம் விளக்கவே முருகப் பெருமான் எழுந்தருளியுள்ளார்" என்பது ஆதிசங்கரின் எடுத்துக் காட்டு. இதை மனதுள் கொண்டு அருணகிரிநாதன் தம் திருப் புகழிற் காட்டும் ஒரு இயற்கைக் காட்சியைப் பார்ப்போம்.

கருக்கொண்ட ஒரு சங்கு கடல் அலைகளினுல் அலைக்கப் பெறுகிறது. துன்பம் ஆற்ருமல் அலறித் தவழ்ந்து வந்து, திருச் செந்தூர் கடற்கரையை அடைந்து ஒரு தாமரை மலரிடத்திற் சென்று தங்குகிறது. அதற்கு இப்போது ஆறுதல் கிடைத்து விட்டது. வண்டுகள் இசைபாடச் சுகமாகத் தூங்கிவிடுகிறது.

"அலைமுகந்த வழ்ந்து சினைமுதிந்த சங்கம்
அலறி வந்து கஞ்ச மலர்மீதே
அளிகலந் திரங்க இசையுடன்து யின்ற
அரிய செந்தில் வந்த பெருமாளே"

இந்த இயற்கைக் காட்சியிலே திருச்செந்தூர்ப் பெருமான் திருவடிகளை அடைந்தால், நாம் ஆறுதல் பெறுவோம் என்பது குறிப்பால் சுட்டிக்காட்டப்படுவது நன்கு தெரிகிறதல்லவா?

அன்னங்கள் தாமரை மலரில் வீற்றிருக்கும் தன்மையுடை யன. அன்னத்திற்கு வடமொழியில் "ஹம்ஸம்" என்ருெரு பெயர் உண்டு. செந்தாமரைப் புஷ்பத்தில் ஹம்சப் பட்சிகள் வசிப்பதுபோல, முருகப்பெருமானுடைய பாதத் தாமரைகளிலும் "பரமஹம்சர்கள்" என்னும் துறவிகள் வசிக்கிருர்கள் என்பது ஆதிசங்கரரின் கருத்து. அந்தப் பாதத் தாமரைகளே அடியார் களுக்குத் துன்பவெய்யில் படாமல் நிழலைக் கொடுக்கின்றன.

''சுழலார் துயர்வெயிற் சுட்டிடும் போதடித்
தொண்டர் துன்னும் நிழலாவன''

என்பது நாவுக்கரசர் வாக்கு. ''மேடையிலே வீசுகின்ற மெல்லிய பூங்காற்றும்'' அதன் சுகமும் அங்கே கிடைக்கும்.

அன்னம் வேதப் பயிற்சியுடைய பறவையாக நைடதம் என்னும் இலக்கிய நூல் கூறுகின்றது.

''பொய்ம்மை மொழிபுகன் றறியோம் புகலமன எண்ணுகினு
மெய்ம்மை யலதுரையாநா வேதம்நவில் பயிற்சி யதால்''

எனத் தமயந்தியிடம் தூதுவந்த அன்னமே தன்னைப்பற்றிக் கூறுவதைப் பார்க்கிறோம். எனவே அன்னத்தை இறைவன் பாத நிழலில் இன்பத்தையடையும் சிறந்த பரமஹம்சராகிய துறவியாகவும், தாமரை மலரை இறைவன் பாத தாமரைகளாகவும் அடியார் சிந்தை செய்திருத்தல் இயல்பேயாகும்.

திருவீழிமழலை ஒரு சிவஸ்தலம். அங்கே நீர்வளம் மிக்க மருதநிலம் உண்டு. ஒரு தடாகத்திலுள்ள தாமரை மலரில் ஒரு அரச அன்னம் வீற்றிருக்கிறது. தாமரை இலை ஒன்று மேலே போய் அதற்கு நிழலைக் கொடுக்கிறது. மருங்கிலுள்ள நெற் கதிர்கள் காற்றினால் அசைக்கப்படுவது அன்னத்திற்குச் சாமரை வீசுவதுபோல் இருக்கிறது. இவ்வாறு இயற்கைச் சிறப்புள்ள இடத்தில் தேவர்கள் பாற்கடல் கடைய எழுந்த ஆலகால விடத்தையுண்டு அவர்கள் துயர்போக்கிய பெருமான் எழுந்தருளி யுள்ளார் என்னும் கருத்தமைந்த ஞானசம்பந்தர் பாடல் படித்துப் பயனடைதற்குரியது.

''பொறியரவம் அதுசுற்றிப் பொருப்பே மத்தாகப் புத்தேளீர்
மறிகடலைக் கடைந்திட்ட விடமுண்ட கண்டத்தோன் மன்னுங்கோயில்
செறியிதழ்த் தாமரைத்தவிசில் திகழ்தோங்கும் இலைக்குடைக்கீழ்
செய்யார்செந்நெல்
வெறிகதிர்ச் சாமரையிரட்ட இளவன்னம் வீற்றிருக்கும் மழலையாமே''.

# அண்டரும் தொண்டரும்

தேவர்கள் தாம் முற்பிறவிகளிற் செய்த நல்வினைகள் காரணமாக அந்தப் பிறவியைப் பெற்றவர்கள். அதனால் இறை தொண்டர்களைப்போலத் தெளிந்த உள்ளமுடையவர்கள் அல்ல. தாம் இன்பத்தை அனுபவிக்கவேண்டுங், தாம் மற்றவர்கள் யாருக்கும் தலைவர்களாக இருக்கவேண்டும், தம்மை மற்றவர்கள் வணங்கவேண்டும் என்ற சிந்தனையுடையவர்கள். அவர்கள் தம்முடைய இந்த நோக்கங்கள் நிறைவேறும்பொருட்டாகவே இறைவனை வணங்குவார்கள். இறைவன் பாதங்களை அடைந்து பேரின்பம் பெறவேண்டும் என அவர்கள் நினைப்பதில்லை. அது அவர்கள் நோக்கமுமில்லை.

"வாழ்த்துவதும் வானவர்கள் தாம்வாழ்வான் மனம்நின்பால்
தாழ்த்துவதும் தாம்உயர்ந்து தம்மைஎல்லாந் தொழவேண்டி"

என்னும் திருவாசகச் செய்யுளடிகள் இதனை நன்கு உணர்த்து கின்றன.

தொண்டர்கள் பூசும் நீறுபோல் உள்ளும் புனிதர்கள். அவர்கள் தலையால் இறைவனை வணங்குவார்கள். காதால் அவன் புகழைக் கேட்பார்கள். நாவால் அவன் புகழ் பாடுவார்கள். கண்களால் இறைவன் உருவத்தையே எங்கும் காண்பார்கள். மென்காற்றில் இறைவன் தன்மையை உணருவார்கள். இவ்வாறான அடியார்களின் உள்ளம் புகுந்து ஒளியாய் வீற்றிருப்பான் இறைவன், தேவர்களுக்கு அவர்கள் வழிபாட்டுக்கிரங்கி அவர்கள் வேண்டிய வரங்களைக் கொடுத்தாலும், தொண்டர்கள்போல முழுவதாக அறிந்துகொள்ளமுடியாத இருளாகவே விளங்குகிறான், இதனைத் திருக்கோவையாருள்

"பொருளாய் எனைப்புகுந் தாண்டு புரந்தரன் மாலயன்பால்
இருளா யிருக்கு ஒளிநின்ற சிற்றம் பலமெனலாம்"

என்னுஞ் செய்யுளடிகளில் மணிவாசகர் தெளிவாக விளக்கு கிறார். வழிபாட்டு நெறியிற் காணப்படும் வேற்றுமை காரண மாகத் தேவர்களுக்குத் துன்பம் ஏற்படுகிறது. அடியார் நிலையோ இதற்கு நேர்மாறானது. "இன்பமே எந்நாளும் துன்பமில்லை" என்பது அவர்கள் நிலையாகும்.

தேவர்கள் தங்கள் நல்வினை காரணமாகவோ, வழிபாடு காரணமாகவோ இன்பத்தை அனுபவிக்கும் காலங்களில் இறை வனை முற்றாக மறந்துவிடுவார்கள். கர்வம் அடைவார்கள். அதனால் அவர்களுக்குத் துன்பம் ஏற்படுகிறது.

தேவேந்திரனது குமாரன் சயந்தன். அவனுக்கு அசுரர்களால் தாங்கமுடியாத துன்பம் ஏற்படுகிறது. அவன் அப்போது என்ன நினைக்கிறான்? அண்டர் பதவி போதும் தொண்டராக வேண்டும் என நினைக்கிறான். பஞ்ச தருக்களின் நிழலிலிருந்து அனுபவிக்கும் இன்பத்தை விரும்பினேன். அதனால் பெருந் துன்பம் வந்தது. தொண்டனாக மாறிவிட்டால் இறைவன் திருவடிக்கீழ் இன்ப வாழ்க்கையைப் பெறுவேன் என நினைக்கிறான்.

"தண்டேன் துளிக்கும் தருநிழற்கீழ் வாழ்க்கைவெஃகி
கொண்டேன் பெருந்துயரம் வான்பதமும் கோதென்றே
கண்டேன் பிறர்தம் பதத்தொலைவும் கண்டனனால்
தொண்டேன் சிவனேநின் தொல்பதமே வேண்டுவனே"

கந்தபுராண நூலாசிரியர் காஞ்சிபுரத்திலுள்ள ஆலயங்களில் வழிபாடுசெய்யும் கூட்டத்தினரை நோக்கினார். அவர்களை இரு பகுதியினராகப் பிரித்தார். கண்டும், கேட்டும், உண்டும், உயிர்த்தும், உற்றும், அறிகின்ற தன்மாத்திரைகளுக்கு இருப்பிடமாகிய ஐம்புலன்களையும் இறைவனிடத்திலே பதிக்கின்ற தொண்டர் கூட்டத்தினர் ஒருவகையினர். தங்களுக்கு இப்போது உள்ள இன்பமே நிலைபெறவேண்டும் அதற்கு இடையூறு ஏற்படக் கூடாது என்பதற்காகக் கண்ணீர் சொரிய வழிபடும் தேவர் கூட்டம் மறுபக்கம்.

"கண்டு கேட்டவை யுண்டுயிர்த் துற்றறி கருவி
கொண்ட ஐம்புலன் ஒருங்குற நடாத்திய கொள்கைத்
தொண்டர் கூட்டமும் விழிவழிப் புனலுக தொழுங்கை
அண்டர் கூட்டமும் ஆலயம் தொறும்தொறும் அருவால்"

---

"பண்டு செய்த பழவினை யின்பயன்
கண்டுங் கண்டுங் களித்திகாண் நெஞ்சமே
வண்டு லாமலர் செஞ்சடை ஏகம்பன்
தொண்ட னாய்த்திரி யாய்துயர் தீரவே".

— நாவுக்கரசர்

# நாளும் கோளும்

இறைவன் விருப்பு வெறுப்பற்றவர். நாம் செய்கின்ற செயல்கள் அல்லது முன்பு செய்த செயல்கள்தாம் நமக்கு நன்மையும் தீமையும் ஏற்படக் காரணமாகின்றன.

அடியார்களோ சாதாரண மனிதரில் நின்றும் வேறுபட்டவர்கள். தாம் தமது என்ற தற்போதமற்றவர்கள். உடல், பொருள், ஆவி ஆகிய மூன்றையும் இறைவனுக்கே அர்ப்பணித்தவர்கள்.

"பாரவன்காண் பாரதனிற் பயிராஞன்காண்
பயிர் வளர்க்கும் துளியவன்காண்
துளியில் நின்ற நீரவன்காண்"

என்ற உண்மையை அறிந்து உலகுய்ய எடுத்து ஓதியவர்கள். "துய்ப்பனவும் உய்ப்பனவும்" தோற்றுவிப்பவன் இறைவனே என்ற உண்மையை வலியுறுத்தியவர்கள்.

உலகத்திலே நன்மையையும் தீமையையும் கோள்கள் உண்டாக்குவதென்பர். சூரியன் முதலாய ஒன்பது கோள்களும் ஒருவருடைய வாழ்க்கையை நிர்ணயிப்பன என்பர். சில நாட்களிலே நோயுண்டாஞல் தீமைதரும். சிலநாட்கள் விவாகம், பிரயாணம், தோட்டச்செய்கை முதலிய நற்கருமங்களுக்கு விலக்கப்பட்டவையென்பர். இவையாவும் உண்மைகள்தாம். ஆஞல் சாதர்ரண உலகவாழ்க்கையில்தான் இவற்றின் தாக்கத்தை உணரலாம். சர்தாரண மக்களின் ஊழ்வினையின்படியே கிரக நிலைகள் அமையும். அடியார்கள் வாழ்வில் இவையெல்லாம் பயனற்றுப் போகும். கொடிய கூற்றுவன்கூட அஞ்சி ஒதுங்கி விடுவான்.

"நாளென் செயும்வினை தானென் செயுமெனை நாடிவந்த
கோளென் செயும்கொடுங் கூற்றென் செயும்கும ரேசரிரு
தாளுஞ் சிலம்பும் சதங்கையுந் தண்டையும் சண்முகமும்
தோளும் கடம்பும் எனக்குமுன் னேவந்து தோன்றிடினே"

என்னும் கந்தரலங்காரச் செய்யுள் இங்கு நோக்கத்தக்கது.

திருஞானசம்பந்தர் மதுரைப் பதிக்கு எழுந்தருளத் திருவுளம் கொண்டார். திருநாவுக்கரசர் சமணரைப்பற்றி நன்கு அறிந்தவர். சமணர்களால் ஞானசம்பந்தருக்குத் தீங்கு வருமென அஞ்சினர். எனவே கோளும் நாளும் நல்லனவாகவில்லை போகவேண்டாமெனத் தடுத்தார். ஞானசம்பந்தரோ அஞ்சவில்லை.

இறைவன் தன் உள்ளமே இடமாகக்கொண்டு வீற்றிருக்கும் போது நாளும் கோளும் நல்லனவாகவே இருக்கும் என்பது அவரது உறுதியான கொள்கை அந்தக் கொள்கையுடைய கோளறு பதிகத்தைப் பாடினர்.

"வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனல்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன்
வெள்ளிசனி பாம்பிரண்டு முடனே
ஆசறு நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே"

இவ்வாறு பதினெரு பாடல்கள் பாடினர். இப் பதிகம் ஞானசம்பந்தர் உலகிற்குத் தந்த பெருஞ்செல்வம். அவர் பாடிய பதினெரு செய்யுள்களிலும் சோதிட கணிதர் கூறும் பலவித தீமை புரியும் நாட்களும் கோள்களும், கோளரி, உழுவை, கொலையானை, கேழல், கொடுநாகம், கரடி, முதலிய பிராணி களின் தீங்குபற்றியும், வாதம், பித்தம், சிலேத்துமம் ஆகிய முத்தோஷங்கள் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளன. இப்பதிகத் தின் இறுதியிற் கூறப்பட்டுள்ள திருக்கடைக் காப்புச் செய்யுள் ஆஸ்திகர் மனதிற்கு உறுதியளிப்பதாயுள்ளது.

"......... பிரம புரத்து மறைஞான முனிவன்
தானுறு கோளும் நாளும் அடியாரை வந்து நலியாத வண்ணம்
உரைசெய்
ஆனசெயல் மாலையோதும் அடியார்கள் வானில் அரசாள்வர்
ஆணை நமதே"

உலகம் நன்மையடையவேண்டுமென்ற பரந்த நோக்குடனே ஞானசம்பந்தர் இந்த மெய்ஞ்ஞானப்பதிகத்தைப் பாடியுள்ளார். இப்பதிகம் போன்று பயனடையத்தக்க பல பதிகங்களை ஞான சம்பந்தர் ஞானத்தமிழிற் காணலாம்.

## ஏரளவில்லா அளவினராகுவர்

ஒருவன் இறக்குமட்டும் தன்னால் இயன்றதைக் கற்க வேண்டும் என்பது ஆன்றோர் கருத்து. இதனைப்போலும் வரைந்து கொண்டதற்பின் தலைவனுக்கு ஓதற்பிரிவு உளதாகத் திருக்கோவையார் எடுத்துக்கூறுகிறது. இதிலே கல்விநலங் கூறல் ஒரு துறை. அத் துறைக்குரிய செய்யுளை இங்கு ஆராய்வது. பயனுடையது.

நன்மைக்கெல்லையில்லர்த கல்விக்கு, பெருமைக்கு எல்லை இல்லாததாகிய செம்பொன்மால் வரையாம் மேருமலை உவமை கூறப்பட்டுள்ளது. இந்த உவமையை மேலும் விரிவாக எடுத்து விளக்குகின்றது கல்லாடம் என்னும் இலக்கிய நூல். திருக்கோவையாரின் பெருமையை விளக்க எழுந்த நூலே கல்லாடம் என்பர். மேருமலை நிலையிற் பெயராதது. பல உலகினைத் தாங்கும் பெருமையுடையது. கல்வியோ உலகினோர் போற்றுந் திறனுடையது. நிறையும் பொறையும், மேருமலைக்கும் கல்வியுடையோர்க்கும் பொதுத்தன்மை.

> "நிலையிற் சலியா நிலைமை யானும்
> பலஉல கெடுத்த ஒருதிறத் தானும்
> நிறையும் பொறையும் பெறுந்நிலை யானும்
> தேவர் மூவர் காவ லானும்
> தமணியப் பராரைச் சயில மாகியும்"

எனக் கல்லாடம் விரித்துக் கூறுகிறது.

"சீரளவில்லாத் திகழ்தரு கல்வி" என்னும் அடிக்கு விளக்கம் கொடுப்பதுபோல கல்வியின் சிறப்பைப் பல உவமைகள் மூலம் விளக்குவது கல்லாடம். என்றும் பிறர்க்கு ஈவதால் செல்வம் போற் குறையாது மேலும் மேலும் வளரும் சிறப்புடையது. அருளை வளர்க்கும் திறனுடையது. அருள் வளரப் புண்ணியம் வளரும். எனவே புண்ணியக் கல்வி எனப் புகழப்படுகிறது.

> "அருள்வழி காட்டலின் இருவிழி யாகியும்
> கொள்ளுனர் கொள்ளக் குறையாது ஆதலின்
> நிறைஉளம் நீங்காது உறைஅருள் ஆகியும்
> இவைமுதல் ஆகி இருவினை கெடுக்கும்
> புண்ணியக் கல்வி"

எனக் கல்லாடம் எடுத்துக்கூறுகிறது.

கல்வியின் பேறு இவ்வுலக இன்பத்தை மாத்திரம் கருதுவது அல்ல. மறு உலகைப்பற்றியும் எமக்குத் துணையான இறைவனைப் பற்றியும் சிந்திக்கத் தூண்டுவதே கல்வியாகும். ''அறம் பொருள் இன்பம் வீடு அடைதல் நூற்பயனே'' என்றார் பிறரும். அந்த நோக்கிற்றான் அருள் அறம் முதலிய அரிய பண்புகள் தமிழ்க் கல்வியோடு கலந்து விளங்குகின்றன. அதனால் ''ஞானத்தமிழ்'' என்னும் உயரிய சிறப்பையும் பெறுகிறது. இவ்வித கல்வி கற்றவர்களின் சிறப்பு கூறமுடியாது. ''தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே'' என்றார் ஒளவையார். அந்தத் தொண்டர்கள் எல்லையில்லாத நன்மையை அடைந்தார்கள். அதுபோலவே புண்ணியக் கல்வியைப் பெற்ற மக்களும் எல்லையில்லா நன்மையை அடைந்தார்கள்.

''மாதவர் வழுத்தும் கூடற்கு இறைவன்
இருசரண் பெறுகுநர் போல
பெருமதி நீடுவர் சிறுமதி நுதலே''

இறைவன் அளவை அறிவினாலே கண்டறிய முடியாதவர். ஆனால் அன்பு ஒன்றினாலே கட்டுப்படுபவர். அந்த இறைவனுடைய பாதங்களை நினைத்தவர்போன்று, மேரு மலையைப்போல அளவிலாத கல்வியின் எல்லையை அடைந்தவர் அளவிலா நன்மையை அடைவர்.

''சீரளவில்லாத் திகழ்தரு கல்விச்செம் பொன்வரையின்
ஆரளவில்லா அளவுசென் றாரம் பலத்துள்நின்ற
ஓரளவில்லா ஒருவன் இருங்கழல் உன்னினர்போல்
ஏரளவில்லா அளவின ராகுவ ரேழ்திழையே''.

---

''கல்வியே கற்புடைப் பெண்டிரப் பெண்டிர்க்கு
செல்வப் புதல்வனே யீர்ங்கவியாச் — சொல்வளம்
மல்லல் வெறுக்கையா மாணவை மண்ணுறுத்தும்
செல்வமும் உண்டு சிலர்க்கு''.

— குமரகுருபரர்

# அடியார் மனதில் எய்ப்பினில் வைப்பு

வங்கியில் சேமிப்புக் கணக்கில் பணம் போடுவது தற்காலத்தில் ஒரு பெருவழக்காக உள்ளது. ஒருவருடைய பிற்காலத்தில் அவர் ஒரு தொழிலும் செய்யமுடியாத காலத்தில் அந்த நிதி உதவும். அந்த நிதியும் ஒருகாலத்திற் குறைந்துவிடும். குறையாத நிதி ஒன்று உண்டு. அந்த நிதியை வைக்கும் இடம் மனம். அந்த நிதி நமக்கொரு குறைவரின் நாம் தேடிச்செல்லவேண்டியதில்லை. தானே அறிந்து ஏற்ற சமயத்தில் உதவும் அந்த நிதியை சுந்தரமூர்த்திசுவாமிகள் தம் திருப்பாசுரத்தில் எடுத்துக் கூறுகிறார்.

"நல்லடி யார்மனத் தெய்ப்பினில் வைப்பை
நானுறு குறையறிந் தருள்புரி வானை
வல்லடி யார்மனத் திச்சை யுள்ளானை"

என்பது சுந்தரமூர்த்திசுவாமிகள் தேவார அடிகள்.

மனதே வங்கியாகப் போட்டுவைக்கத் தகுந்த நிதியை எவ்வாறு சேமிப்பது? என்ற வினாவிற்கும் சுந்தரர் வழிகாட்டுகின்றார். ஒரு வங்கியிற் பணம் போட்டுவைப்பதற்குப் பல நிபந்தனைகள் இருக்குமல்லவா? அதேபோல இங்கும் சில நிபந்தனைகள் உண்டு. அவற்றுள் ஒரு நிபந்தனையைத்தானும் உறுதியாகப் பின்பற்றினால் போதியது. வஞ்சகம் அற்ற மனத்தர்களாய், மறவாத அன்பொடும் சென்று வணங்குதல். ஒருமுறை இதனையே

"நரியார்தன் கள்ளத்தால் பக்கான பரிசொழிந்து நாளும் உள்கிப்
பிரியாத அன்பராய்ச் சென்றுமுன் அடிவிழும் சிந்தையாரை"

என எடுத்துக்காட்டுகிறார் சுந்தரர்.

பிரியாத அன்பராய் என்பதற்கு மேலும் உலகத்தோடு ஒட்டிய ஓர் உதாரணத்தை எடுத்துக்காட்டுகிறார். இறைவனிடம் சேர்க்கும் அன்பு கரையிலா அன்பு. அந்த அன்பு எலும்பினை உருக்கி ஐம்புலன்களால் அறியப்படாத இன்பத்தைத் தரவல்லது. அந்த இன்பம் மெய்யுணர்வில் சேர்ந்து வளரும் சிறப்பினை உடையது.

"காண்டலுந் தொழுது வீழ்ந்துடன் எழுந்து
கரையில் அன்பு எம்பினை உருக்க
பூண்ட ஐம்புலனில் புலப்படா இன்பம்
புணர்ந்து மெய்யுணர்வினில் பொங்க

தாண்டவம் புரியுந் தம்பிரா னுரைத்
தலைப்படக் கிடைத்தபின் சைவ
ஆண்டகை யாருக் கடுத்தவந் நிலைமை
விளைவையா ரளவறிந் துரைப்பார்''

எனப் பெரியபுராணம் கூறும். இந்த இன்பத்தை உலகினர்க்குச் சொல்லமுடியாது ''பத்தி முத்திக்குவமை பெத்தம் பேரின்பத்திற்குவமை சிற்றின்பம் எனவைத்து'' எனத் திருக்கோவையார் உரையில் காணப்படுவதுபோன்று உலக வழக்கில் கூறுகிருர். ஒரு பெண்ணிடத்தில் ஒருவனுக்கு ஆசையுண்டாகிறது. அவன் மனது அந்தப் பெண்ணையே கருதிக்கொண்டிருக்கும். பசி முதலியவற்றைக் கருதமாட்டாது. அவன் சிந்தனை முழுவதும் அவன் சிந்தனையே நிறைந்திருக்கும். அவன் வேண்டும் பொருளும் அதுதான். இந்த நிலையையே ''அருளிற் பெரியது அகிலத்து வேண்டும் பொருளில் தலையிலது போல்'' எனத் திருவருட்பயனும் சுட்டிக்காட்டுகிறது. இதனையே சுந்தரர் உவமை காட்டுகிருர். இடையருமல் காமநெறியிற் சென்ருரைப்போல் நீங்காமல் சிந்தித்து அன்பராய்ச் சென்று அடிவிழும அடியாரை, இயமன்வரும் துன்ப நெறியிற் செல்லாமற் பாதுகாக்கும் இறைவனை, சிற்றம்பலம் அமர்ந்த பெருமானைப் பெற்ரும் என்று சுந்தரர் கூறுந் தேவாரம் இறைவனைச் சிந்திக்க வழி காட்டுவதாகும்.

''பேராது காமத்திற் சென்ருர் போலன்றியே பிரியாதுள்கிச்
சீரார்ந்த அன்பராய்ச் சென்றுமுன் னடிவீழும் திருவினரை
ஓராது தருமனர் தமர்செக்கி லிடும்போது தடுத்தாட் கொள்வான்
பேராளர் புலியூர்சிற் றம்பலத்தெம் பெருமானைப் பெற்ருமன்றே''.

# தனிச்செயல்

இறைவன் அடியார்கள் யாவரும் இறைவனிடத்திலே சிறந்த அன்புடையவர்கள். ஆயினும் கண்ணப்பரின் தூய அன்பே சிறப்பான அன்பாக எடுத்துப் பேசப்படுகிறது. உள்ளத் தொடு என்பெலாம் உருகத் திருவாசகம் பாடிய மாணிக்க வாசகரும் "கண்ணப்பர் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்" எனக் கண்ணப்பரின் அன்பை விதந்து பாடுகிறார்.

கண்ணப்பர் காளத்தி மலையேறி திங்கள்சேர் சடையாரைக் கண்டவுடன் "பொருவிலன் புருவமானார்" எனச் சேக்கிழார் கூறுகிறார். அன்பின் மிகுதியினாலே கண்ணப்பர் செய்த செய்கை கள் பல. அவற்றைத் திருநாவுக்கரசர் தாம் பாடிய தேவாரம் ஒன்றில்

"காப்பதோர் வில்லும் கையதோர் இறைச்சிப் பாரம்
தோற்பெரும் செருப்புத் தொட்டுத் தூயவாய்க் கலசம் ஆட்டி
தீப்பெரும் கண்கள் செய்ய குருதிநீர் ஒழுகத் தனகண்
கோப்பதும் பற்றிக் கொண்டார் குறுக்கை வீரட்டனாரே"

எனக் கூறுகிறார்.

இவ்வாறு கண்ணப்பரின் ஒப்பற்ற செயல்கள் பலவாயினும் நாம் இங்கு எடுத்துக்கொண்ட "தனிச்செயல்" தூயவாயக் கலசம் ஆட்டிய செயலாகும். கண்ணப்பரின் உள்ளத்திலே விளைந்த அன்பு உடலெலாம் கலந்து பரவியது. பரவிய அன்பை இறைவன்மேல் உமிழ்வதுபோல் இருந்தது அவா வாய் நீர்க் கலசமாட்டல். இதனைச் சேக்கிழார் "விளைந்த வன்புமிழ்வார் போல விமலனார் முடிமேல் விட்டார்" என அழகுபெறக் கூறு கிறார்.

திருக்காளத்தியப்பரைப் பூசைசெய்த அந்தணரிடத்திலே சிவபெருமானால் கூறப்பட்டவையும் இங்கு நோக்கத்தக்கன.

"ஒருமுனிவன் செவியுமிழும் உயர்கங்கை முதற்றீரத்து
பொருபுனலின் எனக்கவன்றன் வாயுமிழும் புனலமுதம்"

என இறைவன் கூறியதாகச் சேக்கிழார் எடுத்துக்காட்டியுள்ளார்.

கருநிறம் பொருந்திய முகில்கள் காஞ்சிபுரத்திலுள்ள நந்தி மலையை நோக்கி வந்தன. கருக்கொண்ட முகில்கள் ஆன தன்மையாலே வானவில்லும் தோற்றியது. நந்தி மலையைக் சூழ்ந்த முகில்கள் அதன்மேல் மழையைச் சொரிகின்றன. இக்

காட்சியைக் கண்டார் கந்தபுராணம் பாடிய கச்சியப்பசிவாச்சாரியார். அடியார் பக்தியும் இறைபக்தியும் நிறைந்த அவரின் உள்ளத்தில் அது வேறொரு காட்சியாக உருப்பெறுகிறது.

கருநிறம் பொருந்திய முகில்கள் கரிய திருமேனி கொண்ட கண்ணப்பராக மாறிவிட்டன. வானவில் கண்ணப்பர் தோளில் தொங்கும் வில்லாக மாறிவிட்டது. மழை பெய்வது கண்ணப்பர் தன்வாயில் உள்ள நீரை இறைவன்மேல் உமிழ்வதாக மாறிவிடுகிறது. நந்திமலை திருக்காளத்தி இறைவனாக மாறிவிடுகிறது.

கண்ணப்பரின் தனிச் செயலைக் கண்டவர் ஓரிருவராக இருக்கலாம். ஆனால் நந்திமலைமீது இக் காட்சியைக் கண்டு கொண்டே இருக்கலாம். கண்ணப்பரின் நினைவு மலைமீது மழை பெய்யும்போதெல்லாம் எம்முள்ளத்தை நிரப்பும். கண்ணப்பரின் தனிச்செயலை நம்மனதில் என்றும் நிரம்பும்வண்ணம் இயற்கையிற் காட்டிய கச்சியப்பரின் புலமை போற்றுதற்குரியது.

''பூட்டு சார்முகந் தன்னொடும் தோன்றிய புயல்வாய்
ஊட்டு தண்புனல் நந்தியம் கிரிமிசை யுகுத்தல்
வேட்டு வக்குலத் திண்ணனார் மஞ்சனம் விமலற்
காட்டுகின்றதோர் தனிச்செயல் போன்றுன தன்றே''

---

''அவனுடைய வடிவெல்லா நம்பக்க லன்பென்றும்
அவனுடைய அறிவெல்லா நமையறியு மறிவென்றும்
அவனுடைய செயலெல்லா நமக்கினிய வாமென்றும்
அவனுடைய நிலையிவ் வாற்றிநீயென் றருளசெய்வார்''.

— பெரியபுராணம்.

# உழவரும் உயர்ந்தோர் உள்ளமும்

உயர்ந்தோர் ஞானிகள். அவர்கள் பஞ்சப்புலன்களின் வழிச் செல்லாதவர்கள். இறைவன் பாதத்தை சிந்தனைசெய்து அந்த உணர்வினால் பஞ்சப் புலன்களை அடக்கி ஏவல் கொண்டவர்கள் நல்லவழிச் செல்லவொட்டாத ஐம்புலவேடர்களை அடக்கி ஆழ நாவுக்கரசர் ஒரு வழி சொல்லுகிறார்.

"புள்ளுவர் ஐவர்கள்வர் புனத்திடைப் புகுந்துநின்று
துள்ளுவர் சூறைகொள்வர் தூநெறி விளையவொட்டார்
முள்ளுடை யவர்கள்தம்மை முக்கணான் பாதநீழல்
உள்ளிடை மறைந்துநின்று உணர்வினால் எய்யலாமே"

நாயகன் சேவடி தைவரும் உணர்வுகொண்டோர் நாவுக்கரசர் போன்றோர். அவர்களையே மனவலி கடந்தோர் எனக் கூறுவர். தம் எண்ணப்படி சுழன்றுதிரியும் ஐம்பொறிகள் இவர்களுக்கு அடங்கி இவர்கள் ஏவலைச்செய்யும்.

மருதநில மாந்தர்கள் உழவர். கொலை, களவு முதலிய தீய செயல்களைக் கடிந்தவர்கள். பசுவொடு பகடு ஓம்பும் கொள்கையர். புண்ணியம் பூத்த தண்ணிழல் வாழ்க்கையர் என இலக்கிய நூல்கள் இவர்கள் வாழ்க்கையைப் புகழ்ந்துரைக்கின்றன.

"கொலைக டிந்தும் களவு நீக்கியும்
அமரர்ப் பேணியும் ஆவுதி அருத்தியும்
நல்லா னொடு பகடு ஓம்பியும்
நான்ம றையோர் புகழ்ப ரப்பியும்
பண்ணியம் அட்டியும் பசும்பதம் கொடுத்தும்
புண்ணியம் முட்டாத் தண்ணிழல் வாழ்க்கைக்
கொடு மேழி நசையுழவர்......"

என்பது பட்டினப்பாலை.

இவ்வாறான தண்ணளிமிக்க மருதநில மக்கள் தமது உழவு தொழிலைச் செய்யும்போதுகூடத் தாம் ஏவல்கொள்ளும் எருது பகடு என்பவற்றை வருத்தாது அவைகள் மனம் விரும்பி மகிழ்ச்சியுடன் ஏவல்செய்யும்படியான வழியைக் கையாள்வார்கள். சிவபெருமானின் கொடியாகவும் ஊர்தியாகவும் விளங்குவது இடபம். அது தர்மதேவதையெனவும் போற்றப்படுவது. ஞான மூர்த்தியாக விளங்கும் நந்திதேவர் இடபமூர்த்தியாக விளங்குகின்றார். விருந்தோம்பும் இன்குணம் படைத்த உழவர்கள் இரக்க

சிந்தையுடையவர்கள். இறைவனை நினைவூட்டும் சின்னமாக உள்ள இடபத்தை வருத்துவார்களா?

புது ஏர்பூட்டுதல் ஒரு மங்கல வழக்கமாக அன்றும் இன்றும் தமிழ்நாட்டில் போற்றப்படுகிறது.

"கொழுங்கொடி யறுகையுங் குவளையுங் கலந்து
விளங்கு கதிர்த் தொடுத்த விரியல் சூட்டி
பாருடைப் பனர்போற் பழிச்சினர் கைதொழ
ஏரொடு நின்றோ ரேர்மங் கலமும்"

எனச் சிலப்பதிகாரம் ஏர்மங்கலத்தைப் போற்றுகிறது. மருதநில மக்கள் எருதுகளையும் எருமைக் கடாக்களையும் புது ஏரிற் பூட்டுவார்கள். அவை மகிழ்ச்சியோடும், களைப்பின்றியும், தம் வேலையைச் செய்வதற்கு ஒரு தந்திரத்தைக் கையாள்வார்கள். இனிமையான மருதப் பண்ணைப் பாடுவார்கள். பாட்டின் ஓசையைக் கேட்ட எருதும் எருமையும் அன்னையின் தாலாட்டைக் கேட்கும் சிறுவர்போல மகிழ்ச்சியடையும். அந்த மகிழ்ச்சியினால் அவை தம் தொழிலைச் செய்கின்றன.

ஏவல் செய்வதற்குக் கூறப்பட்டுள்ள உவமையே இங்கு கவனிக்கத்தக்கது. மன வலிமையைக் கடந்த ஞானிகளுக்குச் சுழலுகின்ற ஐம்பொறிகளும், அவர் பணித்த வழி நிற்றல்போல உழவர் சொல்வழி எருதும் எருமையும் நிற்கும். மருதநில மக்களை ஞானிகட்கும், எருமையையும் எருதையும் ஐம்பொறிகளுக்கும் உவமைகூறும் திருவிளையாடற்புராணச் செய்யுள் படித்து மகிழ்வதற்குரியது.

"களமர்கள் பொன்னேர் பூட்டித் தாயர்வாய்க் கனிந்தபாடற்
குளமகிழ் சிறுரினேறும் ஒருத்தலும் உவகை தூங்க
வளமலி மருதம் பாடி மனவரி கடந்தோர்வென்ற
அலமரு பொறிபோ லேவல் ஆற்றவான் வினையின்மூண்டார்"

# ஞானமும் அருளும்

எங்கே ஞானம் உண்டோ அங்கே அருளும், அன்பும் உண்டு. பண்டைய அரசர்கள் இறை வழிபாடு உடையவராகவும், அறிவு மிக்கவர்களாகவும் இருந்தார்கள். எனவே அவர்களின் ஆட்சியில் பகை இல்லை. இயல்பாகப் பகையுள்ள மிருகம், பறவைகள்கூட பகைநீங்கி வாழ்ந்தன. "மாதர் அருகூட்டும் பைங்கிளியும் ஆடற் பருந்தும் ஒருகூட்டில் வாழ" நளமகாராசன் உலகத்தை ஆண்டான் என நளவெண்பா கூறும். பாண்டியர்கள் செங்கோல் முறையைக் கூறவந்த சிலப்பதிகாரம்

"அரவுஞ் சூரும் இரைசேர் முதலையும்
உருமுஞ் சார்ந்தவர்க் குறுகண் செய்யா
செங்கோற் தென்னவர் காக்கும் நாடு"

என்று கூறுகிறது.

பண்டைய அரசர்கள் பற்றற்றான் பற்றன்றி வேறு எவ்வகைக் கொள்கையும் கொள்ளாமையும், உலகமும் எல்லா உயிர்களும் ஆண்டவன் அடிமையே என்னும் உணர்வுள்ளவர்கள்.

இதுபோலவே ஆனய நாயனார் எனப் பெயரிய ஆயர்குல அடியார் ஒருவர் இருந்தார். அவர் வேய்ங்குழல் வாசிப்பதில் வல்லவர். ஒருநாள் அவர் தனது வேய்ங்குழலில் இறைவன் நாமத்தை அமைத்து வாசித்தார். அந்த வேய்ங்குழல் ஓசை இறைவனிடத்தில் மிக்க அன்பின் காரணமாக எழுந்த ஓசை. எனவே அது ஞான இசையாக விளங்கியது. அந்த இசையைக் கேட்ட உயிர்களெல்லாம் இறை உணர்ச்சி என்ற ஒரே உணர்வைப் பெற்றன. அதாவது அவர்கள் உள்ளத்தில் ஞான உணர்வு நிறைந்தது. எனவே பகை உணர்வு வெறுப்பு உணர்வு என்பன இல்லை. எனவே அவர்களிடத்தில் நலிவாரும் இல்லை மெலிவாரும் இல்லை. மயிலின் மீது சர்ப்பம் புரண்டு விழும். யானையும் சிங்கமும் ஒருமித்து வரும். மான் முதலிய சிறு மிருகங்கள் தமது பகையாகிய புலிகளின் பக்கத்தே அச்சமில்லாமல் வரும். இதனைச் சேக்கிழார் பின்வரும் செய்யுளிலே இனிமை பொருந்த எடுத்துக் காட்டுகிறார்.

"நலிவாரு மெலிவாரு உணர்வொன்றாய் நயத்தலினால்
மலிவாய்வெள் ளெயிற்றரவம் மயின்மீது மருண்டுவிழும்
சலியாத நிலையரியுந் தடன்கரியு முடன்சாரும்
புலிவாயின் மருங்கணையும் புல்வாய புல்வாயும்"

சிவபெருமான் தம் அருளின் தன்மையை உலகம் அறிந்து உய்வதற்காகவே இயல்பாகப் பகைகொண்ட சந்திரனையும், பாம்பையும் சடாபாரத்தில் தரித்துள்ளார். சர்ப்பத்தைத் தேகத்திலும் ஆபரணமாகத் தரித்துள்ளார். இறைவனது இந்த அருள் வேடத்தை அடியார்கள் இலக்கிய நோக்கிலே எடுத்துப் பாடும் போது அது நமது மனதில் நன்ருகப் பதிகிறது. இறைவனது இடப்பாகத்திலே அருட்சக்தியாகிய மயில்போன்ற சாயலையுடைய உமையம்மையார் வீற்றிருக்கிருர். அவரைக்கண்டு இறைவன் அணிந்திருக்கும் சர்ப்பம் மயிலெனக் கலங்குகின்றது.

"தெய்வப் பிறைஇருந்த திருநுதற் பேதையை
கண்டு உகண்டு அரவம் மயிலெனக்கலங்க"

என்பது கல்லாடம். உமையம்மையாரேர் நாகத்திற்கு அஞ்சுகிருர்.

"யானையுரி போர்த்த மணவாள" ஞகிய இறைவனின் சடையிலிருக்கும் சந்திரனை மின்னலென நினைத்து இறைவன் தேகத்திலுள்ள நாகசர்ப்பம் அஞ்சுகிறது. இங்கே யானைத்தோல் முகிலாக உருவகிக்கப்படுகிறது. நாகசர்ப்பம் இறைவன் அருளால் இயற்கையான தன்குணம் அடங்கிக் கிடப்ப, அது மின்னலுக்கும் மயிலுக்கும் அஞ்சிக்கிடப்பதாகத் தற்குறிப்பேற்ற அணிபொலியக் கூறி மகிழ்ச்சியடைகிருர் நாவுக்கரசர்.

"நாகத்தை நங்கை அஞ்ச நங்கையை மஞ்ஞை என்று
வேகத்தை தவிர நாகம் வேழத்தின் உரியைப் போர்த்து
பாகத்தின் நிமிர்தல் செய்யாத் திங்களை மின்னென் றஞ்சி
ஆகத்திற் கிடந்த நாகம் அடங்கும் ஆரூர ஞர்க்கே"

## பிறவா நாளும் பட்டினி நாளும்

மானிடப் பிறவியின் மாண்பயன் இறைவனை வணங்குதல். மனித வாழ்வின் குறிக்கோள் அதுதான் என்று கூறலாம். அந்தக் குறிக்கோள் எந்த நோக்கத்திலும் எத் தொழிலைச் செய்யும் போதும் ஊடுருவி நிற்கவேண்டும். இளமையில் சமணசமயத்தில் இருந்த நாவுக்கரசர் "குறிக்கோளிலாது கெட்டேன்" என வருந்துகிருர்.

இந்தக் குறிக்கோளை அடைவதற்கு எத்தனையோ தடைகள் நம்முடன் பிறந்த புலன்களே தடையாக நிற்கின்றன.

"இவ்வரும் பிறவிப் பௌவநீர் நீந்தும் ஏழையேற்
கென்னுடன் பிறந்த ஐவரும் பகையே"

என வருந்துகின்ருர் கருவூர்த்தேவர்.

"தொக்குநின் றைவர் தொண்ணூற் றறுவரும் துயக்கமெய்த
மிக்கும் இன்றிவர்கள் செய்யும் வேதனைக் கலந்துபோனேன்"

என்று வருந்திஞர் திருநாவுக்கரசர்.

இறைவன் புகழை நாம் மறந்தாலும், இயற்கையே நமக் கெடுத்து நினைப்பூட்டிக்கொண்டிருக்கிறது. ஏழிசையின் பொலி வுற்ற மீட்டும்போது இறைவனின் சிந்தனையே எழுகின்றது. அக்கினியிலே, காற்றிலே, ஆரவாரிக்கின்ற கடலிலே, மலையின் அழகிலே இறைவன் அமைந்திருப்பதை உணர்கிருேம். அழகிய தண்ணளியுடைய அடியார் சிந்தையுள்ளும் வேதங்களின் பொருளிலும் அவரைத் தரிசிக்கலாம். தியானிப்பார் சிந்தையுள் தேனும் பாலுமாய் இனிப்பவர். ஒளிமயமாக விளங்குபவர். புலியூரின் கண்ணே எங்களுக்கு அருளும்படி உருவமாய் நின்று நடனம் செய்கிருர். அந்த இறைவன் புகழைப் பேசாத நாளெல் லாம் பிறவா நாட்களுக்குச் சமானம் என்று கூறுகிருர் அப்பர்.

"அரியானை அந்தணர்தம் சிந்தையானை
அருமறையின் அகத்தானை அணுவையார்க்கும்
தெரியாத தத்துவனைத் தேனைப்பாலைத்
திகழொளியைத் தேவர்கள்தம் கோனைமற்றைக்
கரியானை நான்முகனைக் கனலைக்காற்றைக்
கனைகடலைக் குலவரையைக் கலந்துநின்ற
பெரியானைப் பெரும்பற்றைப் புலியூரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவாநாளே"

இந்தப் பிறவியில் நாம் வாழ்ந்திருப்பதற்கு மிகவும் அவசிய மானது உணவு. தாம் அநுபவிக்கும் பொருட்களையெல்லாம் தம் இறைவனாகவே காண்பது திருமால் அடியாரது மனப்பாங்கு.

"வெற்றிலை இதழ்க்குநீ விழிக்குநீ அஞ்சனம்
கற்றினம் மேய்க்கும் கண்ணா நின்னையே
தீட்டுவேன் இதழ்க்கு மீட்டுவன் விழிக்கே
என்றன் உடலுக் கினிய சாந்துநீ
என்கழுத் துக்கோர் ஏற்ற ஆரம்நீ"

என்பது ஓர் திருமாலடியார் வாக்கு. திருநாவுக்கரசரும் "இப்பொன்நீ இம்மணிநீ இம்முத்தும்நீ இறைவன்நீ" என்று கூறியிருப்பதும் நோக்கற்பாலது.

உடலை வளர்க்க உதவும் உணவுபோல உள்ளத்தை வளர்க்க உதவுவது இறை சிந்தனை, வெறும் உடல்வளர்ச்சியால் என்ன பிரயோசனம்? உள்ளத்திலே இறைவன் இருக்கிறான் என்ற சிந்தனையாலும், இறை வழிபாட்டிற்கும் மோட்ச வழிக்கும் ஒரு சாதனம் என்ற அளவிலே உடலை வளர்த்தனர் சான்றோர். உடல் வளர்ச்சிக்கேற்ற உணவு உண்ணாத நாளை, பெரியாழ்வார் என்னும் அடியார் பட்டினி நாளாய்க் கருதவில்லை. நாராயண னைத் தோத்தரிக்காத நாளும், நாலு வேதங்களிலே சொல்லப் பட்ட தோத்திரங்களைக் கூறித் திருமாலை மலரிட்டு வணங்காத நாளும் வந்தால் அவைதான் பட்டினி நாட்கள் என்பது அவரின் கருத்து.

"கண்ணா நான்முகனைப் படைத்தானே
காரணா கரியாய் அடியேன்நான்
உண்ணுநாள் பசியாவ தொன்றில்லை
ஓவாதே நமோநா ரணாவென்றே
எண்ணுநாளும் இருக்கெசர் சாமவேத
நாண்மலர் கொண்டுன் பாதம்
நண்ணுநாள் அவைவந் துறுமாகில்
அன்றெனக் கவைபட் டினிநாளே"

# பூவும் பூசுரரும்

"பூவெனப்படுவது பொறிவாழ் பூவே" என்பது நால்வர் நான்மணிமாலை. எனவே இங்கே நாம் எடுத்துக்கொண்டது தாமரை மலராகும். இறைவன் பாதமலரைத் தம் இதயத் தாமரையில் வைத்து வணங்கும் அறவழி நிற்போரே அந்தணர் எனப்படுவர்.

வைகறைப்பொழுது கடவுள் வணக்கத்துக்குரிய நேரம். அந்தணர் வேதம்பாடும் ஓசை புலவர் மாங்குடி மருதனார் காதில் விழுந்தது. அந்த இனிய ஓசையைக் காலை வழமையாக நிகழும் மற்றோர் ஓசையுடன் அவர் கவியுள்ளம் இணைந்து மகிழ்கின்றது. அவரின் உள்ளம் தடாகத்தில் மொட்டவிழ்ந்த தாமரை மலரையும், அங்கே தும்பி முரலும் இனிய ஓசையையும் நினைத்துப் பார்க்கிறார். அவரின் சிந்தனை செய்யுளடிகளாக வெளிவருகிறது.

"போது பிணிவிட்ட கமழ்நறும் பொய்கைத்
தாதுண் தும்பி போது முரண்றுங்கு
ஓதல் அந்தனர் வேதம் பாட"

என்று பாடுகிறார். இச் செய்யுளடிகளை மதுரைக் காஞ்சியிற் காணலாம்.

வண்டு பாட முகம் மலர்ந்து தேன்சொரியும் தன்மையன குளிர்ந்த தாமரை மலர்கள். இறைவன் புகழ்பாடும் திருப்பதிகங்களைக் கேட்டவுடன் முகம் மலர்ந்து ஆனந்தக்கண்ணீர் சொரியும் தன்மையன அடியார் வதனமாகிய தாமரை மலர்கள். இந்த உவமையைச் சிறந்த ஒரு பாடல்மூலம் எடுத்துக் கூறுகிறார் பெரியபுராண நூலாசிரியர்.

"வண்டு பாடப் புணற்றடத்து மலர்ந்து கண்ணீர் அரும்புவன
கொண்ட வாசமுகை யவிழ்ந்த குளிர்பங் கயங்களே யல்ல
அண்டர் பெருமான் திருப்பாட்டின் அமுதம் பெருகச் செவிமடுக்கும்
தொண்டர் வதன பங்கயமும் துளிர்த்த கண்ணீர் அரும்புமால்"

அந்தணர் மார்பில் முந்நூல் அணிந்தவர்கள். வெண்பொடியாகிய திருநீற்றினை அணிந்தவர்கள். வேதம் பாடும் ஒழுக்கம் பூண்டவர்கள். வேதம் பாடும்பொழுது "காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கப்" பாடும் இயல்புடையவர்கள். அக்கினி

காரியம் முதலியவற்றை ஆற்றும்பொழுது, தருப்பைப் புல்லினாலாய பவித்திரத்தை அணிந்துள்ளவர்கள்.

தாமரை மலரை எடுத்துக்கொண்டால் தாமரை நாளம் என்னும் தண்டில் நூல் உள்ளது. அந்தணர் வெண்பொடி அணிந்திருப்பதுபோல தாமரை மலர் மகரந்தப் பொடியைக் கொண்டிருக்கிறது. புல்லிதழ் புறவிதழ் எனப் பொருள்படும். வண்டுகள் பாடுவது சாமகீதம் இசைப்பதுபோன்று இருக்கிறது. இதனை இக்கட்டுரை ஆரம்பத்திலே பார்த்தோம். வேதியர் சாமகீதம் பாடும்போது அவர்கள் கண்களிலிருந்து கண்ணீர் ததும்புகின்றது. தாமரை மலரிலோ வண்டுகள் கீதம்பாட கள் + நீர் (தேன்) ததும்புகின்றது.

சீர்காழிப்பதி இயற்கை அழகுமிக்க திருப்பதி. ஞானசம்பந்தப் பெருமான் தோற்றிய பதி. அவர்தாம் செல்லும் இடங்களில் எல்லாம் இறைவன் வீற்றிருக்கும் இயற்கையழகை விதந்து பாடியவர். சோலைகள், இனிய ஆறுகள், மந்தி பாயும் மரங்களை உடைய காடுகள், கோலவண்டு இசைபாடும் அழகிய அருவி பாயும் மலைச்சாரல்கள், வண்டு பாட மொட்டலரும் பூஞ்சுனைகள் இவையாவும் ஞானசம்பந்தர் பாடலில் உள்ளன. இவற்றை மனதிற்கொண்டுபோலும் ஞானசம்பந்தர் புராணத்தில் பல இயற்கைக் காட்சிகளைச் சேக்கிழார் நயம்பட எடுத்துக் காட்டியுள்ளார், அவற்றுள் ஒரு காட்சியே மேலே எடுத்து ஆராயப்பட்டது.

அழகிய சீர்காழிப்பதியில் உள்ள அந்தணர்களைப்போல மணம் வீசுகின்ற தாமரை மலர்களும் புல்லிதழையும் விளங்காநின்ற நூலையும் தாங்கி, தூய்மையாகிய நுண்ணிய துகள்களையணிந்து துளிர்க்கின்ற கண்ணீரைச் சிந்தி வண்டுகள் இனிய ஓசையினால் சாமகீதம் பாடும் என்னும் இனிய கருத்தமைந்த சேக்கிழார் தரும் பாடல் பின்வருவது.

"காமர்திருப் பதியதன்கண் வேதியர்போற் கடிகமழும்
தாமரையும் புல்லிதழும் தயங்கியநூ லுந்தாங்கி
தூமருநுண் டுகளிணிந்து துளிவருகண் ணீர்ததும்பி
தேமருமென் சுரும்பிசையாற் செழுஞ்சாமம் பாடுமால்"

# மனதில் அன்பை நிறைத்தலும் ஓர் அறமே

மனதிலே அன்பை நிறைத்தல் ஓர் அறமாகும். மன அழுக்கை நீக்கி அன்பை நிறைக்க அறிவு உதவுகிறது. அன்பு நிறைந்த உள்ளமுடையவர்கள் தருமம் செய்வார்கள். இதனாலே திருமூலர்

" அழுக்கினை யோட்டி அறிவை நிறையீர்
தழுக்கிய நாளில் தருமம் செய்வீர் "

என்று கூறினார்.

தழுக்கிய நாளில் அல்ல செழிப்பில்லா நாளிலும் தருமம் செய்யலாம். ஆனால் வேண்டியதெல்லாம் அன்புள்ளமே. இறைவனைப் பூசை செய்ய அன்புள்ளம் ஒன்றே போதியது. " நீ பரன்றனை நெஞ்சில் நினைவையே நிறைந்த பூசையால், பரம் பொருளையர்ச்சி நீயன்பு செய்யாதே " என்பது சிவஞானசித்தி. ஒரு பச்சிலைதானும் இறைவனை உள்ளன்போடு அர்ச்சித்தற்குப் போதியது.

" குடங்கை நீரும் பச்சிலையும் இடுவார்க் கிமையாக் குஞ்ரமும்
படங்கொள் பாயும் தருவாய் மதுரைப் பரமேட்டி "

என்பது பரஞ்சோதியார் திருவிளையாடற் புராணம்.

சிவபூசைக்கு உதவும் பஞ்சகவ்வியத்தைக் கொடுப்பது பசு. குழந்தைகட்கும் பெரியோர்க்கும் சத்துள்ள உணவாகிய பாலைக் கொடுப்பது பசு. " பசுக்களின் பெருமையை உணர்ந்து, அவற்றை வலஞ் செய்து துதித்து வணங்கிப் புல்லுக் கொடுத்தோர் சிவலோகத்தை அடைந்து இன்புறுவர் " என ஆறுமுக நாவலர் எழுதியுள்ளார். பசுவின் பெருமையை உணர்ந்தே சண்டேஸ்வரநாயனார் அந்தணர் குலத்தவராயிருந்தும் தாமே பசு மேய்த்தார். பசுக்களை அடித்த பசு மேய்ப்பவனிடம் அவர் எடுத்துரைத்த பசுவின் பெருமைகள் ஒவ்வொருவரும் அறிந்திருத்தல் அவசியம். பசுக்களைத் தீண்டினும் தீவினை அகலும். எனவே " பசுவிற்கு ஒரு வாயுறை " கொடுத்தல் ஒரு பெருந் தருமம் எனக் கூறப்பட்டது.

ஐயமிட்டுண் என்பது ஔவையார் வாக்கு. இறைவன் அடியார்களுள் ஒருவருக்கு அன்னமளித்த பின்பே தான் உணவு உண்ணும் வழக்கம் பல அடியார்களின் வழக்கமாக இருந்தது. விருந்தினரைப் பேணும் வழக்கம் தமிழ் நாட்டின் சிறப்பான

வழக்கங்களில் ஒன்று. பெரியபுராணத்தில் இளையான்குடிமாற நாயனுர் இதற்கு ஓர் சிறந்த உதாரணம். தமிழ் நாட்டில் பல அறம்பேணும் அன்னசத்திரங்கள் இருந்ததை காவிய வாயிலாகவும், புராணங்கள் வாயிலாகவும் அறிகின்ருேம்.

சிலர் காகத்திற்கு ஒரு பிடி அன்னம் கொடுத்தபின் உண்பர். உண்மையாகப் பசித்து வந்தவர்க்கு ஒரு பிடி அன்னம் ஈந்தால் அவர்களுக்கு உயிரைக் கொடுத்ததற்குச் சமானம். வறியவர்க் குதவும் ஒரு பிடி அன்னம் அளவிற் சிறிதாயினும் பெரும் புண் ணியத்தைத் தரவல்லது. ஆகவே "உண்ணும்போது ஒரு கைப்பிடி" என்ருர்.

பொருள், பெருமுயற்சி, களைப்பு, ஒன்றும் இல்லாமல் செய் யத்தக்க சிறந்த அறம் ஒன்று உண்டு. அதுதான் இன்சொற் பேசுதல். தருமங்களில் மிக இலேசாகச் செய்யக்கூடிய அறம் இது. இன்சொல் பிறருக்கு மகிழ்ச்சியைக் கொடுப்பது. அதனுல் பல நன்மைகள் உண்டாகும். வன்சொல் கேட்போர்க்கு வெறுப் பைக் கொடுப்பது. வன்சொற் பேசுவதால் தீமையே உண்டாகும்.

"இன்சொலாலன்றி இருநீர் வியனுலகம்
வன்சொலா லென்றும் மகிழாதே"

என்பது ஆன்ருேர் வாக்கு. ஒரு மாமரம் அதிலே காய்களும் பழங்களும் உள்ளன. பழங்கள் அதிகம் உருசியுடையன. ஆனுல் காய்ப் பருவத்திலே அவை புளிக்கும். இனிய பழங்களை விட்டு காய்களை உண்பவர்களும் உலகத்தில் உண்டு. வள்ளுவர் எடுத் தாளும் இந்த உவமை பார்த்து மகிழ்தற்குரியது.

"இனிய உளவாக இன்னுத கூறல்
கனிஇருக்கக் காய்கவர்ந் தற்று"

என்பது வள்ளுவர் கூற்று. அதிக முயற்சியில்லாமல் செய்யத் தக்க இந்த அறங்களைச் சிந்தித்து நமதுள்ளத்தைப் பண்படுத்து வோம்.

"யாவர்க்கு மாம்இறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை
யாவர்க்கு மாம்உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே"

— திருமந்திரம்

## செஞ்சூட்டுச் சேவல்

இருளை ஆணவ மலத்திற்கு ஒப்பிடுவர் சைவ சித்தாந்திகள். பொதுவாக இருள், துன்பம், அறியாமை, வஞ்சகம் ஆகியவற் றிற்கும் உவமையாக எடுத்தாளப்படுகிறது. இருட்செறிவை சேக் கிழார் பின்வரும் உவமைகள் மூலம் நன்கு விளக்கியுள்ளார்.

"பஞ்சின் மெல்லடிப் பாவையர் உள்ளமும்
வஞ்ச மாக்கள்தம் வல்வினை யுமரன்
அஞ்செ ழுத்தும் உணரா அறிவிலார்
நெஞ்சு மென்ன இருண்டது நீண்டவான்"

உலகத்திலே இரவும் பகலும் மாறி மாறி வருகின்றது. இருட்டை விரும்புபவர்கள் மிகக் குறைவு. இருள் நீங்க வரும் புலரிக்காலத்தை விரும்பும் பிராணிகளே உலகத்தில் அதிகமா யுள்ளன. புற இருள் நீக்கத்தை விரும்புவது போல அகவிருள் நீக்கத்தையும் நாம் விரும்பவேண்டும்.

இருள் நீங்கும் புலரிக்காலையில் பலவித பறவைகளின் ஓசை எழுமென்றாலும், கோழிச் சேவலின் ஓசையே குறிப்பிடத்தக்க தாக தமிழ் இலக்கியங்களில் பேசப்படுகிறது. "கூவின பூங்குயில் கூவின கோழி" என மாணிக்கவாசகர் கூறினார். "பொறிமயிர் வாரணம் குறுங்கூ விளிப்ப" என்றார் மணிமேகலை ஆசிரியர்.

நளமகாராசன் தமயந்தியைக் காரிருளிற் கைவிட்டுப் பிரிந் தான். தமயந்தி எழுந்து நளனைக் காணாது புலம்பினாள். புலரிக் காலம் வந்தது. கோழிகள் கூவின. இயல்பாக நடக்கும் இந்த நிகழ்ச்சியைத் தற்குறிப்பேற்ற அணியைச் சேர்த்துத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்துகிறார் புகழேந்திப் புலவர், தமயந்தி யின் துயரத்தைக் காணப் பொறுக்க முடியாமல் தேரேறி வெய் யோனை விரைவாக வரும்படி அழைப்பதாகக் கூறும் அழகு படித்து மகிழ்தற்குரியது.

"வாவுபரித் தேரேறி வாவென் றழைப்பனபோல்
கூவினவே கோழிக் குலம்"

என்பது புகழேந்தியார் வாக்கு.

முருகப்பெருமான் சேவற்கொடியோன் என அழைக்கப் பெறு கிறார். முருகப் பெருமானின் "அணிசேவல்" நாதசொருபமா னது. முருகப் பெருமானின் வரவையுணர்த்துவது. முருகப்பெரு மான் சூரபன்மன் முதலிய அசுரர்களோடு யுத்தம் செய்து,

யுத்தம் முடியும் காலம் சமீபித்தது, இப்போது சூரபத்மனோடு நேருக்கு நேர் நின்று யுத்தம் புரிகிறார். முருகப் பெருமானுடைய தேர்க்கொடி வெட்டுண்டு வீழ்கிறது. உடனே அக்கினிதேவன் அவர் தேரிலே சேவற்கொடியாகி நின்று கூவுகிறான். இக்கூவலை கந்தபுராண நூலாசிரியர் மிக்க அழகுபெற எடுத்துக் கூறுகிறார்.

அசுரர் தலைவனாகிய சூரபத்மன் ஆணவகுணம் மேலிட்டவன். கொடுமை நிறைந்த அசுரர்கள் அவன் துணையால் தேவர்களை வருத்தினர். அசுரர்கள் அவர்கள் அகம் போலவே இருளடைந்த தேகத்தையும் உடையவர்கள். அசுரர்களது அழிவு சமீபித்து விட்டது. எனவே தேவர்களது துயர் என்னும் இரவிற்கும் புலரிக்காலம் வந்துவிட்டது எனக் காட்டுவது போல் அக்கினி தேவனாகிய சேவல் கூவியது என்கிறார்.

"படியி லாதமர் பண்ணவன் தேர்மிசை
கொடிய தாய்நின்று குக்குடம் கூயது
கடிய தானவக் கங்குல் புலர்ந்திடும்
விடியல் வைகறை வேலையைக் காட்டல்போல்"

மற்றுமோர் முருகன் அடியார் சேவலை நோக்கிக் கூறுகிறார் "செஞ்சூட்டுச் சேவலே உன்னை நான் எப்போதும் வணங்குவேன். வாழ்த்துவேன். உன் திருவடியைச் சிந்திப்பேன். ஆணவமலம் உன்னைக் கட்டிவிடுகிறேன் பார் என்று என்னை வெருட்டுகிறது. அந்தப் பகையாகிய ஆணவம் விட்டோட தணிகைமலை முருகன் வரவேண்டும். எனக்காக ஒருமுறை அவன் வரும்படி கூவு எனக் கேட்கிறார். அச்சிறந்த பாடலைப் பார்ப்போம்.

"வந்திப்பேன் அனுதினமும் வாழ்த்திடுவேன்
உனது திருவடியை நாளும்
சிந்திப்பேன் மூப்பொழுதும் சேவிப்பேன்
செஞ்சூட்டுச் சேவலே கேள்
பந்திப்பேன் எனதுவலி பார்என்னும்
ஆணவமாம் பகைவிட்டோடக்
கொந்திற்றேன் பொழிற்சாரத் தணிகைவரை
யான்வர நீகூ வாயே.

# பைந்தமிழ் பின்சென்ற பச்சைப் பசுங்கொண்டல்

தமிழ் மொழியின் நலமுணர்ந்து, தமிழ்மாலை புனைந்து உவக்கும் குமரகுருபரர் முனிவர் தந்த தமிழ்ச் செல்வம் அளவற்றது. "பொய்மையாளரைப் பாடாதே எந்தை புகலூர் பாடுமின் புலவீர்காள்" என்று கூறும் சுந்தரமூர்த்தி சுவாமிகளைப்போல

"தேத்தமிழ் தெளிக்கும் செந்நாப புலவீர்
பாத்தொடுத் தடுத்த பரஞ்சுடரை
நாத்தழும் பிருக்க ஏத்துமின் நீரே"

என்று குமரகுருபரர் கூறுகிறார். அவர் கடவுள் யாவரையும் தமிழுடன் இணைத்துக்கூறும் நயமும், அதிலுள்ள உண்மை வரலாறும் படித்து உணரவேண்டியவை. மதுரை மீனாட்சியம்மையாரைப் பிள்ளைத்தமிழால் போற்றும்போது தமிழின் சுவையாக அம்பாளை உருவகிக்கும் திறன் உள்ளத்தைத் தொடுகிறது.

"நறை பழுத்த துறைதீந் தமிழின் ஒழுகு நறுஞ் சுவையே" என்னும் செய்யுளடி இங்கு நோக்கத் தக்கது. திருமாலைத் தமிழுடன் இணைத்துக் கூறும் பகுதியே இங்கே தலையங்கமாக எடுத்தாளப்பட்டது.

திருவெஃகா ஒரு வைணவத்தலம் அங்கே திருமழிசையாழ்வார் என்ற ஒரு திருமால் அடியார் வசித்து வந்தார். அவருடைய அடியார் கணிகண்ணர். அரசன் ஏதோ ஒரு காரணத்தால் கணிகண்ணர்மேற் கோபம் கொண்டு, அவரை நாட்டை விட்டுப் போகும்படி கட்டளையிட்டான். கணிகண்ணர் இதனைத் திருமழிசை ஆழ்வாரிடம் கூறினர் அடியார் திருவெஃகாவில் உள்ள திருமால் தலத்திற்குச் சென்றார். "பெருமானே என்னுடைய அடியான் போகிறான். எனவே நானும் போகிறேன். பின் உனக்கிங்கென்னவேலை. நீயும் உனது பாயைச் சுருட்டிக்கொண்டு என் பின்னே வாவென்று கூறுகிறார். அவருடைய இந்தக் கூற்று வெண்பாவாக வெளிவருகிறது.

"கணிகண்ணன் போகிறான் காமரு பூங்கச்சி
மணிவண்ணா நீகிடக்க வேண்டா—துணிவுடைய
செந்நாப் புலவனும் போகின்றேன் நீயுமுன்றன்
பைந்நாகப் பாய்சுருட்டிக் கொள்"

அடியார்க் கெளியவன் இறைவன் அல்லவா? அதுவும் பைந்தமிழ்ப் பாடலிற்கு இரங்காமல் விடுவாரா? உடனே சயனித்

இருந்த திருமால் எழுந்தார். ஆயிரம் படங்களையுடைய சர்ப்பமாகிய தனது பாயைச் சுருட்டிக்கொண்டார். தனது பருத்த தோள்களும் பிடரியும் வருந்தச் சுமந்து கொண்டு திருமழிசை ஆழ்வார் பின் சென்றார். குமரகுருபரர் மனதில் ஒருஐயம் எழுகின்றது. ஆழ்வார் பின் சென்றாரா? அல்லது பைந்தமிழ் பின் சென்றாரா? தமிழுக்காகத்தான் ஆழ்வார் பின் சென்றார். எனவே அவர் ஆழ்வார் பின் செல்லவில்லை. தமிழின் பின் சென்றதாகவே நினைக்கிறார். வேதங்கள் இறைவனின் பெருமைகளைக் கூறுவன. அந்த வேதங்கள் நாம் இங்கு இருக்கிறோம் எங்களைக் கவனிக்கவில்லையே என்று முறையிடவும், அவற்றைக் கவனியாமல் மைந்தமிழ் பின் சென்றார். இவ்வாறு கூறுவதால் தமிழின் பெருமையும், அத்தமிழ் மேல் குமரகுருபரர்க்கு உள்ள பற்றும் போற்றத்தக்கது.

> "பணிகொண்ட முடவுப் படப்பாய்ச் சுருட்டுப்
> பணைத்தோ ளெருத்தலைப்பப் பழமறைகள் முறையிடப்
> பைந்தமிழ்ப் பின்சென்ற பச்சைப்பசும் கொண்டலே"

என்பது மீனாட்சி பிள்ளைத்தமிழ்.

திருமால் போனால் இலக்குமியும் கூடப் போவாள். நாட்டின் சீர்சிறப்பெல்லாம் அழிந்து படும். இலக்குமிதேவியின் துணை இன்றி அரசபோகம், அரசாட்சி, இவையெல்லாம் நிலைத்து நிற்க முடியாது. எனவே, அரசன் தனது பிழையை உணர்ந்து இருவர் பாதங்களிலும் வீழ்ந்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டான். இறைவனே தமிழிற்கு இரங்கும்போது அரச பெருமை எம்மாத்திரம். அரசன் வேண்டுகோளுக்கிரங்கி ஆழ்வார் அந்த வெண்பாவையே சற்று மாற்றிப் பாடி திருமாலை திரும்பவும் திருவெஃகாவில் தங்கச் செய்தார்.

> "கணிகண்ணன் போக்கொழிந்தான் காமருபூங் கச்சி
> மணிவண்ணா நீகிடக்க வேண்டும்—துணிவுடைய
> செந்நாப் புலவனும் போக்கொழிந்தேன் நீயுமுன்றன்
> பைந்நாகப் பாய்படுத்துக் கொள்."

# ஆற்றங்கரை மரம்

ஆற்றங்கரையில் உள்ள மரம் மறு இடங்களில் உள்ள மரங்களிலும் பார்க்கச் செழிப்புற்று வளரும். ஆனல் அந்தச் செழிப்பு நிலையானதல்ல. திடீரென ஆறு பெருக்கெடுத்து அதன் வாழ்வை முடித்துவிடும். அரசர் அறியும்படி பெரிய செல்வர்களாய் வாழ்கின்றவர்களது வாழ்க்கையும் இவ்வாறு திடீரென வீழ்ச்சியடையும்.

" ஆற்றங் கரையின் மரமும் அரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே ".

என நல்வழி என்னும் நீதிநூல் எடுத்துக் கூறுகிறது.

ஒரு போர்வீரன் குதிரைமீது ஏறிப் போருக்குச் சென்றுன். போர் முடிவடைந்து அவனுடன் சென்ற பல வீரர்களும் திரும்பி விட்டார்கள். ஆனல் குறிப்பிட்ட அந்தப் போர்வீரன் திரும்பி வரவில்லை. அந்த வீரனின் மனைவி மிகவும் துன்பமடைந்தாள். ஒரு ஆறு பாயும் இடத்திலே மரம் நிலைத்து நிற்கமாட்டாது. எனது கணவனே இரண்டு பேராறுகள் பாய்ந்து கூடும் இடத்திலே நின்ற பெருமரம் அழிந்தொழிவதைப் போல, இருபெரும் படைக்கும் இடைப்பட்டு அவரை ஏற்றிச் சென்ற குதிரை அலைக்கப்பட்டு வீழ்ந்துவிட்டதோ என வருந்துகிருள்.

" இருபேர் யாற்ற ஒருபெருங் கூடல்
விலங்கிடு பெருமரம் போல
உலந்தன்று கொல்லவன் மலைந்த மாவே "

எனப் புறநானூறு என்னும் சங்க இலக்கியம் அழகுற எடுத்துக் கூறுகிறது.

மணிவாசகரும் தமது திருவாசகத்தில் ஒரு ஆற்றங்கரை மரத்தைக் காட்டுகிருர். அழகுமிகுந்த கண்களையுடைய கன்னியர்தம் ஐம்புல இன்பம் என்னும் ஆற்றங்கரையில் வளரும் மரமது. சாதாரணமாக ஆற்றங்கரையில் வளரும் மரம் குளிர்மையான மணலில் ஆழமாக வேர்விட்டுப் படர்தல்போல் உலக இன்பங்களிலே ஆழமாக ஊன்றி விடுகிறது இந்த மரம். ஆற்றங்கரையில் நிற்கும் மரம் ஆறுபெருகிவரும் காலத்தில் வேரோடும் பிடுங்கி யெறியப்பெற்று, உருண்டோடி உவர்க்கடலில் புகுந்து பயனற்றதாகி அழிந்துவிடும். இதனைப் போல உலக இன்பங்களிற் செழித்து வளரும் உடல் என்னும் இந்த மரமும்

தனக்கும் பிறர்க்கும் பிரயோசனமற்று விதியென்னும் வெள்ளப் பெருக்கில் உருண்டோடி பிறவிக்கடலில் வீழ்ந்து போவார்கள்.

இந்த உவமையில் இருந்து தெளியவேண்டிய மற்றொரு பொருளையும் சுட்டிக்காட்டினர் உட்பொருளைத் தெரிவிக்கும் உரைகாரர். ஆறல்லாத குளம் முதலிய நிலையான நீர் நிலையின் பக்கத்தே நிற்கும் மரங்களுக்கு ஆபத்து இல்லை. அவை செழித்து வளர்ந்து பிறருக்கு நிழலும் பயனும் கொடுக்கும். இறைவனை அடைந்தோர் தாமும் மோட்ச இன்பத்தைப் பெற்று, பிறர் கடைத்தேறுவதற்கும் வழிகாட்டிகளாவர் என்பது தெளிந்த பொருள்.

இறைவனே உயிர்களை யெல்லாம் வளர்ப்பவர். எனவே, இறைவனை நோக்கி தேவரீர் என்னை ஆற்றங்கரை மரமாக விடாமல் தாயும் தந்தையுமாக வளர்க்க வேண்டும். தவறான வழிகளுக்குச் செல்ல விடாமல் மைந்தரை வளர்ப்பது தாய் தந்தையரின் கடமையல்லவா? இக் கருத்துக்களை யெல்லாம் தன்னுள் அடக்கிய திருவாசகப் பாடல் ஒன்றினைப் பார்ப்போம்.

புகழார் திருவாரூரில் வீற்றிருப்பவனே! நிலைபெற்ற உத்தரகோச மங்கைக்கரசே! கச்சினைப் பொருந்திய நகிலுடைய உமைபங்கனே! என்னை வளர்ப்பவனே! அழகுமிகுந்த கண்ணை யுடைய மாதரது ஐம்புல வின்பங்களாகிய ஆற்றின் கரையிலே வளர்கின்ற மரமாகி வேரூன்றுவேனை அவற்றில் நின்றும் நீக்கி விடுதி என மணிவாசகர் வேண்டுதல் செய்யும் பாடல் இது.

"காருறு கண்ணியர் ஐம்புலன் ஆற்றங்கரை மரமாய்
வேருறு வேனை விடுதிகண்டாய் விளங்குந் திருவா
ரூருறை வாய்மன்னும் உத்தரகோச மங்கைக்கரசே
வாருறு பூண்முலை யாள்பங்க என்னை வளர்ப்பவனே"

# கங்கை பொங்கிவரு நீர்மடு

நீர் இறைவன் அருளைக்குறிப்பது ''இன்னருளே என்னப் பொழியாய் மழையே'' என்பது திருவெம்பாவை. சிவபெருமான் கங்காநதியைச் சடையில் அணிந்திருப்பதும் அருளைக்குறிப்பதே இறைவனின் சடாபாரத்தில் உள்ள மற்றொருபொருள் பிறைச் சந்திரன். இந்தப் பிறைச்சந்திரனும் அடியார் உள்ளத்தைக் கவருவதாக உள்ளது.

பிறைச்சந்திரனை தெய்வப்புலவர்கள் ஓடமாக உருவகப் படுத்தினர். கந்தப்புராணம் பாடிய கச்சியப்பசிவாசாரியர் பிறைச்சந்திரனை ஓடமாக உருவகிக்கும் அழகை இங்கு காண் போம். வானம் இங்கே பாற்கடலாக உருவகிக்கப்படுகிறது. வானத்திற்கு மற்றொரு பெயர் ககனம். பிறைச்சந்திரனில் உள்ள முயற்களங்கம் அந்த ஓடத்தைச் செலுத்தும் ஒரு மகனாக உருவகிக்கப்படுகிறது. ககனமாகிய பாற்கடலில் உள்ள பொருள் எல்லாவற்றையும் எடுத்து உலகுக்குக் கொடுக்கும்படியாக முயல் எனும் ஒருமகன் செலுத்தும் ஓடமாகும் பிறைச்சந்திரன் எனக் கூறுகிறார்.

''நிலவுலாவிய ககனமா நீடுபாற் கடலில்
குலவு கின்றதோர் பொருளெலாம் கொண்டுகொண்டேகி
உலகில் நல்குவான் முயலெனும் ஒருமகனுய்ப்பச்
செலவு கொண்டதோர் தோணிபோன்றது சிறுதிங்கள்''

இறைவன் சடாபாரத்திலே உள்ள பிறைச் சந்திரனை ஓடமாக உருவகித்தால் அது தங்குவதற்கேற்ற ஓர் நீர் நிலை வேண்டு மல்லவா? அந்தச் சடாபாரத்தில் இருக்கும் கங்கை அந்த நீர் நிலையாகியது, அது மடுவாக உருவகிக்கப்படுகிறது.

பொங்கிப் பிரவாகித்து வந்த கங்கைநதி இறைவனுடைய சடையை அடைந்தவுடன் அடங்கி ஓரிடத்தில் நிலையாக நின்று விட்டது. நிலையாக நிற்கும் நீரை மடுவாக உருவகித்தார் மணி வாசகர். களங்கமற்ற வெண்ணிறம் பொருந்திய குளிர்ச்சி மிக்க பிறைசந்திரன் கங்கை நீர் நிரம்பிய மடுவில் சிறுதோணி யாக விளங்கும் இனிய காட்சியை மனதில் நினைக்கும் மணி வாசகர் மற்றொரு நிலையையும் நினைத்துப் பார்க்கிறார்.

ஒரு நீர் நிறைந்த தடாகம். அங்கே பல மீன்கள் வசித்து வந்தன. அவை மிக மகிழ்ச்சியோடிருந்தன. காலவித்தியாசத் தால் மழை பெய்யாமல் தடாகநீர் வற்றத்தொடங்கியது. நீர்

நன்ருகக் குறைந்து விட்டது. மகிழ்ச்சியோடு வாழ்ந்த மீன்கள் எல்லாம் வாட்டமடைந்து வருந்தின.

குளிர்காய்வதற்கு வெப்பமுள்ள அக்கினியின் அருகில் சென்ருன் ஒருவன். அக்கினிக்குச் சமீபத்தில் இருப்பதால் அவன் குளிர் அகன்று விட்டது. ஏன்? குளிர் ஒன்று இருப்பதையே அவன் மறந்துவிட்டான். அந்த மன நிலையில் அவன் அக்கினியை விட்டு சற்று அப்பால் விலகிச் செல்கிருன். உடனே அவன் குளிரின் தன்மையை மீண்டும் உணருகிருன்.

இந்த நிலைதான் மாணிக்கவாசகரின் நிலையும் உண்மையாக அவரின் நிலை அதுவல்ல என்ருலும், நாம் உய்வதற்காக அவர் எடுத்துக்காட்டும் சிறந்த உருவகமும் உவமையும் ஆகிய அணிகள் அமைந்த பயனுள்ள பாடலைப் பார்ப்போம்.

மிகுதியான நீர்வற்றி வடிய குறைந்தநீரில் சிறு மீனைது வாடிக்கிடந்தாற்போல, உன்னைப் பிரிந்தயிடத்தே அச்சுற்று வாடிக்கிடக்கும் என்னைக் கைவிட்டுவிடாதே பெரிய கங்கை வெள்ளமானது பொங்கிவந்து தங்கிய மடுவில், வெள்ளை நிறம் பொருந்திய தோணியை நிகர்த்த பிறைக்கு இடமாயுள்ள சடையை உடையவரே. பரமாகாசத்தில் இயங்கும் வளம் பொர்ருந்திய மாணிக்கமே.

"பெருநீ ரறச்சிறு மீன்து வண்டாங்கு நினைப்பிரிந்த
வெருநீர் மையேனை விடுதிகண்டாய் வியன்கங்கை பொங்கி
வருநீர் மடுவுள மலைச்சிறு தோணி வடிவின் வெள்ளை
குருநீர் மதிபொதி யுஞ்சடை வானக் கொழுமணியே."

"ஈரம்பு கண்டிலம் ஏரம்பர் தங்கையில்
ஓரம்பே முப்புரம் உந்தீபற
ஒன்றும் பெருமிகை உந்தீபற"

— திருவுந்தியார்

# பல்லைத் திறந்து விட்ட பரம்பொருள்

இறைவன் முப்புரம் எரித்தகதை திருமுறைகளில் பல இடங்களில் எடுத்துக்கூறப்பட்டுள்ளது. தேவர்களுக்கும் மக்களுக்கும் துன்பம்செய்த அசுரர்கள் முன்னொருகாலத்தில் மூன்று கோட்டைகளில் வாழ்ந்தார்கள். அந்த மூன்று கோட்டைகளும் ஆகாயத்தில் பறக்கும் சக்தி வாய்ந்தன. இவற்றைச் சிவபெருமான் சிரிப்பினால் அழித்தார் என்பது வரலாறு.

இச்சம்பவத்தை மிகவும் தெளிவாகவும், அழகுபெறவும் எடுத்துக் கூறுவது திருவுந்தியார் என்னும் திருவாசகப் பகுதி. தேவர்கள் வேண்டுதலின்படி சிவபெருமான் திரிபுரசங்காரம் செய்யச் சம்மதித்தார், எல்லாம் வல்ல பரம்பொருளுக்கு திரிபுரம் எரித்தல் ஒரு கடினமான செயலல்ல. இச்செய்கையை அவர் நினைத்த மாத்திரத்திலே வேறொருவர் துணையின்றிச் செய்ய முடியும். ஆனால் தேவர்கள் திரிபுர சங்காரத்திற்கு தாம் இறைவனுக்கு உதவி செய்ய வேண்டுமென நினைத்தார்கள். பூமியே தேராகவும், மேருமலையை வில்லாகவும், அம்பின் அடிப்பாகம் அக்கினியாகவும், சந்திரனை அம்பின் இடைப்பாகமாகவும், திருமாலை அம்பின் நுனியாகவும், காற்றை இறக்கைகளாகவும் அமைத்தனர்.

இதனாலே தேவர் மனதிலே கர்வம் உண்டாகியது. தங்கள் துணையாலே தான் சிவபெருமான் முப்புரங்களை அழிக்கப் போகிறார் என்று நினைத்தார்கள். இவர்கள் எண்ணமெல்லாவற்றையும் இறைவன் அறிந்தார். அவர்கள் கொண்டுவந்த தேர்மேல் காலைத்தூக்கி வைத்தார். தேரின் அச்சு முறிந்துபோய்விட்டது. சிவபெருமானுடைய புன்னகையால் முப்புரங்களும் சாம்பலாயின. "நான்" "எனது" என்ற அகங்கார மமகாரங்கள் உள்ளவர்கள் சமய நெறியிலே முன்னேறுவது முடியாத செயல் என்பதையும் இச்சம்பவம் எடுத்துக் காட்டுகிறது.

"தச்சு விடுத்தலும் தாமடியிட்டலும்
அச்சு முறிந்ததென் றுந்திபற
அழிந்தன முப்புரம் உந்திபற"

மேலும் இருவினையொப்பு மலபரிபாகம் பொருந்திவிட இறைவன் ஆசானாகவந்து திருவடிதீக்கை செய்யவும் பிறவி யொழிந்தது. மும்மலங்களும் அழிந்தன என்னும் ஒரு பொருளும் ஈங்கு பெறப்படுகிறது. அவ்வாறு பொருள் கொள்ளுமிடத்து உடம்பு தேரெனவும், திருவடியிடுதல் தீட்சை எனவும், அச்சு ஊழ் எனவும்,

முப்புரங்கள் மும்மலங்கள் எனவும் கொள்ளப்படும். ''முப்புரம் என்பது மும்மலகாரியம்'' என்னும் திருமூலர் வாக்கும் இங்கு நோக்கத்தக்கது.

இந்தச் செயலை மற்றோர் தெய்வம் போற்றும் புலவர் இறைவனைப் பழிப்பது போன்று நிந்தாஸ்துதியாக அழகுபெற எடுத்துக் காட்டுகிறார்' பிறரிடத்தில் போய் இரந்து நிற்கும்போது ''பல்லைக்காட்டி நிற்றல்'' என உலக வழக்கில் கூறப்படுகின்றது.

''வெம்பாவம் நிற்காட்டி யொழிப்பவர் யார்நீ யருள்க எமக்
கென்று பற்காட்டி நிற்பனபோல் மலர்ந்தன மென்பனிமுல்லை''

என்பது திருவாதவூரடிகள் புராணம்.

சிவபெருமான் வில், அம்பு, தேர் யாவும் இருந்தும், முப்புரங்களுக்குமேல் தேரிலே சென்று வில்லை வளைத்து, அம்பை எய்யவில்லை. அது இறைவனால் இயலாத செயல். எனவே, ஆற்றாமல் இறுதியில் பல்லைத் திறந்து விட்டார் என்று அப்புலவர் கூறுகிறார். அத்துடன் இது தானோ உனது படைத்தொழிலின் வலிமை என்று கேட்கிறார். சிரிப்பால் எரிக்க முடியுமானால் முன்பே எரித்திருக்கலாமே ஏன் வீணாக புயங்கள் நோவ மேரு மலையை வில்லாக வளைக்கவேண்டும் என்று குமரகுருபரர் மற்றோர் செய்யுளில் கேட்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. புலவரின் செய்யுளை இங்கு பார்ப்போம்.

''சொல்லுக்கினிய கழுக்குன்றரே யுமைச் சொல்லவென்றால்
அல்லற் பிழைப்புப் பிழைத்து விட்டீர் முப்புராதியர்மேல்
வில்லைக் குனித்தெய்ய மாட்டாமல் நீரந்த வேளைதனில்
பல்லைத் திறத்து விட்டீர் இதுவோநும் படைத்தொழிலே.''

''அப்பணி செஞ்சடை ஆதி புராதனன்
முப்புரம் செற்றனர் என்பர்கள் மூடர்கள்
முப்புர மாவது மும்மல காரியம்
அப்புரம் எய்தமை யாரறி வாரே''

— திருமந்திரம்

# அருள் வெள்ளமும் கள்ளத்திறைவரும்

யானை முதலிய மிகப் பெரிய பிராணிகளும் கொக்குப் போன்ற மிகச் சிறிய பிராணிகளும், தம்முடைய உயிரைக் காத்தற்கு வேண்டிய வழியை வகுத்தருளியது யார்? சூரியன் சந்திரன், நட்சத்திரங்கள் இவை யாவும் தத்தம் நிலைகுலையாமல் ஒரே சீராக நிற்கும்படி செய்தவர் யார்? பலவித மலர்களையும், வாசனையையும் வைத்தவர் யார்? இவ்வாறு இயற்கை ஒவ்வொன்றையும் உற்று நோக்கிக் கேட்டால் கிடைக்கும் விடை ஒன்றுதான் அந்த விடை இறைவன் அருள் என்பதே.

"அமைதியாக விளங்கும் மலைகளிலும், அதன்மேற்றோன்றும் நட்சத்திரங்கள் நிறைந்த வானவெளியிலும்" "வோட்ஸ்த்வோர்த்" போன்ற ஆங்கிலப் புலவர்கள் மன நிறைவைக் கண்டதாகப் பாடியுள்ளார்கள். அவை இறைவனின் அருள் வெள்ளம் தான் என்பதை அவர்களும் சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

இந்த அருள் வெள்ளத்தை நாம் கண்டாலும், அல்லது அதன் பெருமையை பிறர் சுட்டிக்காட்டினாலும் நாம் உணர்வதில்லை. எங்கும் நல்ல நீர் வெள்ளமாக நிறைந்திருக்கும்போது நீருண் வேட்கையினால் நாவரண்டாலும், ஒருவன் அந்த நல்ல நீரைக் குடியாமல் செல்வதைப் போன்றது இந்தச் செய்கை. அது மாத்திரமல்ல பகலிலே தம் கண்களைப் பிரயோசனப் படுத்தாமல், அவற்றை மூடிக்கொண்டு எங்கும் இருளே உள்ளது என்று கூறுவதையும் போன்றது இதனை

"வெள்ளத்துள் நாவற்றி யெங்கும் விடிந்திருளாம்
கள்ளத்திறைவர் கடன்"

எனத் திருவருட்பயன் அழகுற எடுத்துக் கூறுகிறது. கள்ளத்திறைவர் என்பதற்கு "திருவருளையும் அவன் பெருமையையும் உணரமாட்டாத கள்ளத்திலே அதிகரித்த உயிர்கள்" என்பது உரைக் குறிப்பு.

"வெள்ளத்துள் நாவற்றுதல்" உலக நடைக்கு ஒவ்வாத உவமையாகும். இவ்வாறான ஒவ்வாத உவமை ஒன்றை கலித்தொகை இலக்கிய நூலில் யாம் காண்கின்றோம். ஒரு காதலன் தான் காதலித்த காதலியைக் கைவிட்டு எங்கேயோ சென்று விட்டான். ஒருநாள் அந்தப் பெண்ணும், அவள் தோழியும் தினையை உரலில் இட்டுக் குற்றுகிறார்கள். காதலியோ காதலன் தன்னைப் பிரிந்துபோன துன்பம் தாங்காது அவனைப்

பழித்துப் பாடுகிறாள். தோழியே அவனுக்காகப் பரிந்து அவனைப் புகழ்ந்து பாடுகிறாள். இவ்வாறு மாறி மாறி வள்ளைப் பாட்டுப் பாடுகிறார்கள். அந்த நேரத்தில் தோழி கூறுகிறாள், "தலைவியே அன்புள்ள அத் தலைவன் கொடுமை செய்தால் தண்ணீரிலே மலர்ந்த குவளை வெந்து சாம்பராவதைப்போன்றது.

"வாராது அமைவானோ வாராது அமைவானோ
வாராது அமைகுவான் அல்லன் — மலைநாடன்
ஈரத்துள் அன்னவை தோன்றின் நிழல்கயத்துள்
நீருள் குவளை வெந்தற்று"

நீருள் குவளை வெந்து சாம்பராகுமா? என்பது இங்கு நோக்கத் தக்கது.

அடியார் உள்ளத்தில் இறைவன் நிற்பானாயினும், அவர்கள் கூட சில சமயங்களில் முழுவதும் உணரமுடியாமல் வருந்துவதைப் பார்க்கலாம்.

"உள்ளத்தே நிற்றியேனும் உயிர்ப்புளே வருதியேனும்
கள்ளத்தே நிற்றி அம்மா எங்ஙனம் காணுமாறே"

என்பது நாவுக்கரசர் வாக்கு.

இதுபோலவே மணிவாசகரும் நீத்தல் விண்ணப்பத்தில் "உத்தரகோச மங்கைக்கரசே" நீர்ப்பெருக்கின் நடுவேயிருந்தும் நீர் பருகாது தாகத்தினால் நாவானது உலர்ந்தாற் போல நின் அருள் வெள்ளத்தைப் பெற்றும் துயரத்தில் நின்றும் நீங்கமுடியாத என்னைக் கைவிட்டு விடாதே என்று கூறுகிறார்.

"வெள்ளத்துள் நாவற்றி யாங்குன் அருள்பெற்று துன்பத்தினின்றும்
விள்ளக் கிலேனை விடுதி கண்டாய் விரும்பும் அடியார்
உள்ளத்துள் ளாய்மன்னும் உத்தரகோச மங்கைக்கரசே
கள்ளத்து ளேற்கரு ளாய்களியாத களியெனக்கே"

# விரிந்த அறிவும் விரிந்த அன்பும்

"பக்தி, காதல், பரிவு, அன்பு என்பன இச்சை மீதூர்தற் பொருள்களாதலின அது பரமுத்தியில் உளதாம்" என்பர் காசிவாசி செந்திநாதையர். "உடலை வளர்த்தற்குரியதாகிய சிறு போகமாகிய நெற்போகத்தில் வயல்களில் நீர் வேண்டற்படுமாறு போலவும், அற்ப போகமாகிய சிற்றின்பத்திற்கு அன்பாகிய ஈரம் வேண்டப்படுமாறு போலவும், உயிருக்கு சிவானந்தத்தை நீடித்து விளைவிக்கும் பரலோகமாகிய பேரின்ப சிவபோகத்திற்கும் அன்பாகிய ஈரம் இன்றியமையாதது" என்பர்.

இறைவனிடத்திலே பொருந்திய அன்பு விரிந்த அன்பு. மறவா அன்பு, அயரா அன்பு என்பதும் அது. "அயரா அன்பின் அரன்கழல் செல்லுமே" என்னும் சிவஞான போத அடிகளும் இதனையே உணர்த்தும்.

குங்கிலியக்கலய நாயனாரின் அன்பைக் கூறுமிடத்து "காலனைக் காய்ந்த செய்ய காலனார் கலயனாராம் ஆலுமன்புடைய சிந்தை அடியவ ரறியுமாற்றால்" எனக் கூறப்பட்டுள்ளது. இங்கே ஆலுமன்பு விரிந்த அன்பு.

விரிந்த அன்பினால் ஏற்படுவது ஆனந்தம். அந்த ஆனந்தம் அளவிடற்கரியது. வார்த்தைகளால் கூறமுடியாது. திருமறைக்காடு என்னுந் தலத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவனை வணங்கச் சென்றார் ஞானசம்பந்தர். தாயினு மினிய தம்பிரானைக் கண்டார். அன்பின் எல்லையைக் காணமுடியாதவராயினார். அதனால் ஆனந்த வெள்ளத்துள் அழுந்தினார். என்பும் உருகியது நிற்கவும், வணங்கவும் முடியாதவரானார். ஆனந்த மிகுதியினால் வார்த்தைகள் தடுமாறின. இந் நிலையைச் சேக்கிழார் அழகு பொருந்த எடுத்துக் கூறுகிறார்.

"அன்பினுக் களவுகாணா ரானந்த வெள்ள மூழ்கி
என்புநெக் குருக நோக்கி யிறைஞ்சி நேர்விழுந்து நம்பா
முன்புநிற் பதுவு மாற்றார் மொழிதடு மாற வேத்தி
மின்புரை சடையார் தம்மைப் பதிகங்கள் விளக்கிப் போந்தார்"

இவ்வித விரிந்த அன்பும், அதனால் ஏற்படும் விரிந்த ஆனந்தமும் விரிந்த அறிவால் ஏற்படுவது. விரிந்த அறிவை ஞானவரம்பு என்று கூறலாம். கண் முதலியன புத்தி இந்திரியம் என்று சொல்லப்படும். புத்தி விரிந்த அறிவைப் புலப்படுத்துவது. சிந்தை அன்பிற்கு இடம். குணம் செயலுக்கு இடம்.

சுந்தரமூர்த்தி நாயனுர் தில்லையில் திருநடனம் செய்யும் இறைவனை வணங்கும் நிலையை எடுத்துக்கூறும் பெரியபுராணச் செய்யுளுக்கு மேற் சுட்டிய அறிவு, செயல், அன்பு, ஆனந்தம் ஆகிய நான்கினையும் பொருத்திப் பெரியோர் உரை கூறியுள்ளனர். " ஐந்துபேரறிவும் கண்களேகொள்ள " என்பதற்கு " ஐந்து அறிவும் பேர்கண்களே கொள்ள என அந்நுவயம் செய்து " ஐம்புல அறிவையும் விரிந்த அறிவோடு சேர்ந்த கண்களே தம்முள் அடக்கி " யெனப் பொருள் கூறினர். " கரணங்கள் நான்கும் அளப்பரும் சிந்தையே யாக " என்பதற்கு " மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய அந்தக் கரணங்கள் நான்கும் விரிந்த அன்பேயாக " எனப் பொருள் கூறினர். இராசத சாத்வீக தாமதமாகிய முக்குணங்களும் சாத்வீகத்தில் அடங்கி விரிந்த செயலாக, இதனுல் மெய்யுணர்வு தலைப்பட்ட ஞானசந்திரன் வாழ்கின்ற சடையையுடைய நடேசப் பெருமான் இயற்றும் கூத்தினுல் பேரின்ப வெள்ளத்துளே திளைத்து வேறுபடாத ஆனந்தத்துள் மலர்ந்தார் என்பது பெறப்படும் உட்கருத்தாகும். இக்கருத்துள்ள செய்யுளை இங்கு நோக்குவாம்.

ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள
அளப்பருங் கரணங்கள் நான்குஞ்
சிந்தையே யாகக் குணமொரு மூன்றும்
திருந்து சாத்து வீகமேயாக;
இந்துவாழ் சடையாறுடும் ஆனந்த
எல்லையிற் தனிப்பெரும் கூத்தின்
வந்தபே ரின்ப வெள்ளத்துட் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியுட் டிளைத்தார்.

" அகர என்ன அரிய தொன் றில்லை
அரகர என்ன அறிகிலர் மாந்தர்
அரகர என்ன அமரரும் ஆவர்
அரகர என்ன அறும்பிறப் பன்றே "

— திருமூலர்

# வெண் சங்கு ஊதுமின்

கடல்படு திரவியம் ஐந்தனுள் சங்கும் ஒன்றாகும். "பவளம் முத்துச் சங்கு ஒக்கோலே உப்பு கடல்படு திரவியம் ஐந்தே" என்பது நிகண்டு. கடல்படு திரவியமாகக் கூறப்படும் சங்கு நீர்வளம் நிறைந்த மருத நிலங்களிலும் காணப்படுவதாக இலக்கிய நூல்கள் கூறும். "சங்கோல மிடும் பழனத்தடம் புடை சூழ் வாதவூர்" என்பது திருவாதவூரடிகள் புராணம்.

சங்கு முத்துப் பிறக்கும் இடங்களில் ஒன்றாகக் கூறப்பட்டுள்ளது. மங்கையரின் கழுத்திற்கும் அது உவமையாகக் கூறப்பட்டுள்ளது. சங்கை நெருப்பிலே இட்டு எரித்தாலும் அதன் வெண்மை நிறம் குன்றாது. அதனால் ஊழ்வினைப் பயனால் தன் மேன்மையின் நின்றும் குறைந்து போனாலும் தன் குணத்தை இழக்காத மேன்மக்களுக்குச் சங்கு உவமையாகின்றது.

"கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே சங்கு
சுட்டாலும் வெண்மை தரும்" என்றனர் மேலையோர்.

சங்கினிற் பலவகையுண்டு. நூல்களிற் கூறப்படும் சில சங்கு வகைகள் இப்போ கிடைப்பதில்லை. இவற்றிற் பல இறைவனைத் திருமஞ்சன மாட்டவும், ஊது சின்னமாகவும் உதவுகின்றன. போரிலே வெற்றி பெற்றவர்கள் தமது வெற்றியைச் சங்கு ஊதுவதன் மூலம் வெளிப்படுத்துவார்கள், இதனைப் பின்பற்றியே மகாகவி பாரதியாரும் "வெற்றி கூறுமின் வெண்சங்கூதுமின்" எனக் கூறினர்.

நமது சமய நெறியிலே சங்கு ஒரு மங்கல வாத்தியமாகக் கருதப்பட்டது. மேலே நோக்கிக் கிளரும் ஒளிமிக்க சுழுமுனை நாடியிலே சப்திக்கும் மங்கல ஓசையின் பிரதிநாத சின்னமே சங்கு ஓசை என்பது ஆன்றோர் கருத்து.

"பொங்கிசைச் சுழுமுனையூடு புலம்பிசைக் குறியேயான
மங்கல சங்கமல்லால் வாய்த்தபல் லியங்கள் யாவும்
இங்கெமக்காகா" என இறைவன் திருவாதவூரடிகளுக்குக் கூறியதன் கருத்தும் அதுவேயாகும்.

சங்கின் ஓசை இறைவனிடம் மனதை ஒடுக்கிவிட வல்லது. மனதைச் சாந்தப் படுத்தவல்லது. காலை நேரத்தின் ஓசைகளைப் பாடிய மாணிக்கவாசகர்.

"கூவின பூங்குயில் கூவினகோழி
குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்" எனக் கூறினர்.

ஞானசம்பந்தரது திருமண எழுகையைக் கூறவந்த சேக்கிழார் பலவித மங்கள வாத்தியங்களுடன் சங்கையே முதற்கண் கூறினர்.

"சங்கொடு தாரை சின்னந் தனிப்பெருங் காளந் தாளம்
வங்கிய மேனை மற்று மலர்துளைக் கருவி யெல்லாம்
பொங்கிய வொலியி னோங்கிப் பூசுரர் வேத நாதம்
எங்கணு மெழுந்து மல்கத் திருமண மெழுந்த தன்றே"

என்பது சேக்கிழார் வாக்கு.

மாயவன் வந்து தன்னைத் திருமணம் செய்து கொண்டதாகக் கனவுகண்ட ஆண்டாள்.

"மத்தளங் கொட்ட வரிசங்கம் நின்றூத
முத்துடைத் தாமம் நிறைபந்தற் கீழ்"

மதுசூதனன் வந்து தன்கை பற்றியதாகக் கூறுகிறார்.

பாஞ்சசன்னியம் என்னும் பெயருடைய சங்கு திருமாலின் கையிலிருப்பது. அவர்தம் செங்பவள வாய் வைத்து ஊதப் பெறுவது. அந்தச் சங்கின் ஓசையைக் கேட்டால் தீமையைச் செய்யும் அரக்கர்கள் எல்லாம் அஞ்சுவார்கள். மங்கல ஓசையைக் கேட்டால் தீமைகள் அஞ்சத்தானே செய்யும்.

"தீயவசுரர் நடலைப்பட முழங்கும்
தோற்றத்தாய் நற்சங்கே"

என்பது ஆண்டாள் வாக்கு. எனவே நன்மைகள் பெருகச் சங்கின் ஓசை முழங்கவேண்டும். "விருப்பமொடு வெண்சங்கம் ஊதா ஊரும் அவையெல்லாம் ஊரல்ல அடவிகாடே" என்றார் அப்பர் சுவாமிகளும்.

# நல்வினையே செய்வோம்

"நன்றுந் தீதும் பிறர்தர வாரா" என்பது ஆன்ேறார் கொள்கை. எங்களது அனுபவங்களுக்கும் வாழ்க்கையின் போக்கிற்கும் நாங்களே காரணம் ஆகிறோம்.

இந்த உலகம் எதனால் வாழ்கிறது என்ற கேள்விக்கு ஒரு சிறந்த விடையை புறநானூறு கொடுக்கிறது. மக்களின் சிறந்த ஒழுக்கமே உலகம் வாழ்வதற்குக் காரணம் எனக் கூறும் அந்த நூல் சில சிறந்த ஒழுக்கங்களையும் சுட்டிக்காட்டுகிறது. புகழ் எனில் உயிரும் கொடுப்போர், பழி எனில் உலகம் முழுவதும் பெறுவதாயினும் கொள்ளார், அயர்விலார், சினமிலார், அமுதமே கிடைப்பதாயினும் தனியேயுண்ணுர், தமக்கென எதுவுஞ் செய்யார். பிறர்க்கென வாழும் உண்மையான இயல்புடையர் அத்தகையோராலே வாழ்கிறது உலகம்" எனச் சுட்டிக் காட்டுகிறது.

நல்வினைகள் செய்ய முடியாவிட்டால் போகட்டும். தீவினை யாவது செய்யாமலிருக்கலாமல்லவா? பிறர்க்குத் தீவினை செய்தால் தமக்கு அதனால் துன்பம் வரும். தமக்குத் துன்பம் வருதலை விரும்பாதவர்கள் பிறர்க்குத் துன்பம் செய்யத் துணியார்கள். "தீங்கு யாவர்க்கும் செய்திடாதவர் தாங்கள் துன்புறார்" என்பது கந்தபுராணம். நரிவெருத் தலையார் என்னும் புலவர் கூறும் நல்மொழியைப் பார்ப்போம். நல்வினைகள் செய்யமாட்டீராயினும், தீவினைகளாவது செய்யாது விலக்குங்கள். உம்மை யாவரும் புகழ்வதற்கும், உம்மை நல்வழியிலே செலுத்தி உய்யுமாறு செய்வதற்கும் அதுவே ஏற்ற வழியாகும் என்று கூறுகிறார்.

"நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்
அல்லது செய்தல் ஓம்புமின் அதுதான்
எல்லாரும் உவப்பது அன்றியும்
நல்லாற்றுப் படூஉம் நெறியுமற் றதுவே"

என்பது புறநானூறு.

நம்மாலும் நல்வினை செய்ய முடியுமா? என நினைப்பவர் பலர். இவர்கள் தெளிவும் துணிவும் அற்றோர். யானை வேட்டைக்குப் போகும் உரமுடையான் யானையையே வெற்றிகொண்டு வருவான். ஆனால் குறும்பூழ் எனப் பெயரிய காடை வேட்டைக்

குச் செல்பவன் அதைக் கைவிட்டு வருதலும் கூடும். ஆதலால் உயர்ந்த குறிக்கோளுடன் கூடிய உயர்ந்தவனாக வேண்டும்.

"செய்குவம் கொல்லோ நல்வினை எனவே
ஐயம்அறுர் கசடு ஈண்டு காட்சி
நீங்கா நெஞ்சத்து துணிவு இலரே
யானையின் வேட்டுவன் யானையும் பெறுமே
குறும்பூழ் வேட்டுவன் வெறுங்கையு வருமே"

என்பர் புலவர்.

நல்வினை செய்வோர் அந்த வழியில் உறுதியுடனும் உண்மையாகவும் முயலவேண்டும். அவர்களுக்குச் சுவர்க்கபோகம் கைகூடும். அது இல்லையெனில் மாறி மாறிப் பிறக்கும் பிறப்பாவது இல்லாமற் போகும். சுவர்க்கபோகத்திலும், மாறிப் பிறப்பதிலும் நம்பிக்கை அற்றவர்களாயின் இமயம் போன்ற உயர்ந்த புகழாவது கிடைக்கும் எனக் கூறுகிறார் கோப்பெருஞ் சோழன் என்னும் புலவர்.

சுவர்க்கம் முதலியவற்றில் நம்பிக்கையில்லாதவர்களும், தாம் பிரத்தியட்சமாய்க் காணும் புகழை விரும்பியாவது நல்வினைகளைச் செய்யத் தூண்டுகிறார் புலவர். புகழ்விருப்பினாற் செய்யும் நல்வினைகளே படிப்படியாகச் சென்று சுவர்க்க இன்பத்தைக் கொடுக்க வல்லது ஆதலின். எவ்வழியில் நின்றாலும், வாழ்க்கையின் எந்த நிலையிலும், அறமும் அருளும் வலியுறுத்தப்படுவது தமிழ் இலக்கியத்தின் ஒரு சிறப்பாகும்.

"செய்வினை மருங்கில் எய்தல் உண்டெனின்
தொய்யா உலகத்து நுகர்ச்சியும் கைகூடும்
தொய்யா உலகத்து நுகர்ச்சியும் இல்லெனில்
மாறிப் பிறப்பின் இன்மையும் கூடும்
மாறிப் பிறவார் ஆயினும் இமயத்துக்
கோடு யார்ந்தன்ன தன்மிசை நட்டுத்
தீதில் யாக்கையொடு மாய்தல் தவத்தலையே!"

— புறநானூறு

# செல்வ நெடுமாடம்

தில்லையில் செல்வம் பொருந்திய நெடிய மாடங்கள் ஆகா யத்திலே உயர்ந்து மதி தோய நின்ற காட்சியை சம்பந்தர் தமது தேவாரத்தில் பாடுகிறார். அருட்செல்வம் மிகுந்த அந்த மாடங்களிலே செல்வன் கழலேத்தும் செல்வர் வாழ்ந்தார்கள். சிவபெருமானிடத்திலே மனதை வைத்து பக்குவநிலை அடைந்த அடியார்களுக்கெல்லாம் காணும் காட்சிகள் யாவும் சிவத்தோடு சம்பந்தப்பட்டதாகவே இருக்கும். இந்த உண்மையைப் பின்வரும் செல்வநெடு மாடங்களில் பார்ப்போம்.

இறைவனுடைய உண்மை அடியார்கள் அவரது சேவடிகளை வணங்கும்போது பல மெய்ப்பாடுகள் தோன்றும்.

> "என்பு நைந்துருகி நெக்கு நெக்கேங்கி
> அன்பெனும் ஆறு கரையது புரள
> நன்புலன் ஒன்றி நாதா என்றரற்றி
> உரைதடு மாறி உரோமம் சிலிர்ப்பக்
> கரமலர் மொட்டித்து இருதயம் மலரக்
> கண்கள் கூர நுண்டுளி அரும்ப"

என மாணிக்கவாசகர் கூறும் போற்றித்திருவகவலில் இந்த மெய்ப்பாடுகள் காணப்படுகின்றன. இது "சாயா" அன்பின் அதாவது நிலை தளரா அன்பின் அடையாளங்கள். நடராசப் பெருமானின் கூத்தைத் தரிசித்த நாவுக்கரசருக்கு ஏற்பட்ட மெய்ப்பாட்டைச் சேக்கிழார் பின்வருமாறு கூறுகிறார்.

> "கையுந் தலைமிசை புனையஞ் சலியன
> கண்ணும் பொழிமழை ஒழியாதே
> பெய்யுந் தகையன கரணங் களுமுடன்
> உருகும் பரிவின
> மெய்யுந் தரைமிசை வீழுமுன் பெழுதரு
> மின்றாள் சடையொடு நின்றாடும்
> ஐயன்திருநட மெதிர்கும் பிடுமவ ரார்வம்
> பெருகுதல் அளவின்றால்"

இங்கேயும், முன்பு கூறப்பட்ட திருவாசக அடிகளிலும் சிறந்த பல மெய்ப்பாடுகளைக் காண்கின்றோம். பல மெய்ப்பாடுகள் இரு பாடல்களிலும் பொதுவாகக் காணப்படுகின்றன. சிறப்பாகக் கண்ணீர் சொரிதல் என்ற மெய்ப்பாட்டினை இங்கு எடுத்துக்கொள்வோம்.

மதுரையம்பதியிலே ஒரு மாளிகை அது சந்திர காந்தக் கற்களால் ஆனது. சந்திரன் உதித்தவுடன் சந்திர காந்தக் கற்கள் ஒளியையுடைய நீரைக் கக்குகின்றன. சந்திரன் நீலநிறக் களங்கத்தைக் கொண்டது. எனவே அது நீலமணிமிடற்றண்ணலாக உருவகிக்கப்படுகிறது. அதற்கேற்ப சந்திர காந்த மாளிகை இறைவனைக் கண்டு ஆனந்தக்கண்ணீர் சொரியும் அடியரிராக உருவகிக்கப்படுகிறது.

" ஆல நின்றமா மணிமிடற் றண்ணலா னந்த
கோல நின்ற சேவடி குறுகினர் குணம்போல்
வேலை நின்றெழு மதியெதிர் வெண்ணிலாத் தெண்ணீர்
கால நின்றன சந்திர காந்தமா ளிகையே "

சைவசித்தாந்த சாத்திரப்படி ஆன்மாக்கள் இறைவனுடன் கலக்கும் நிலை பேதம், அபேதம், பேதாபேதம் என்று மூன்று நிலைகளிலும் வேறுன தொன்று. அதுவே அத்துவிதம் என்று கூறப்படுகிறது.

" அறத்தினல் விளைவதாய் உடலுயிர்க்கண் அருக்கன்
அறிவொளிபோற் பிறிவரும் அத்துவித மாகும் "

என இந்நிலையைச் சிவப்பிரகாசம் என்னும் சித்தாந்தநூல் கூறும்.

மதுரையம்பதியில் ஒரு வீதியில் பளிங்குக் கற்களாலாய மேல் வீடுகள் உண்டு. அந்த மேல் வீடுகளில் இருந்து வீசுகின்ற ஒளியில் பல நிலை இயற்பொருள்களும், இயங்கியற் பொருள்களும், அதனுடன் கலந்து விளங்குகின்றன. இக்காட்சியை நோக்கும் புலவருக்கு மற்ஞெரு காட்சி நினைவுக்கு வருகிறது. வெள்ளி மன்றிலில் நடனம் செய்யும் இறைவனின் திருவடிகளில் ஒன்றி ஒன்றும் ஆகாமல் வேறும் ஆகாமல் கலந்த உயிர்களின் நிலையை அவர் நினைத்துப் பார்க்கிருர். தமது நினைவைச் செய்யுளில் தருகிருர்.

" குன்ற நேர்பளிக் குபரிகை நிலைதொறும் குழுமி
நின்ற பல்சரா சரமும் நீழல்வாய் வெள்ளி
மன்ற கம்பொலிந் தாடிய மலரடி நிழல்புக்
கொன்றி யொன்றுறக் கலந்தபல் லுயிர்நிலை யனைய "

உதாரணப் பாடல்களாக மேற்காட்டிய பாடல்கள் இரண்டும் திருவிளையாடற் புராண நகரப்படலத்தில் உள்ளன

## கூடு நீயென்று கூடல் இழைக்கும

தலைவரைப் பிரிந்த மகளிர் அவர் வரவை எதிர்நோக்கிப் பார்க்கும் நிமித்தங்களுள் கூடற்சுழியும் ஒன்று. கடற்கரை அல்லது ஆற்றங்கரையில் உள்ள மணலில் கண்ணை மூடிக்கொண்டு வட்டமாகச் சுழிப்பார்கள் அந்தச் சுழியில் முதலும் கடையும் கூடுமானால் வருவாரென்றும் கூடாதாயின் வராரென்றும் கொள்ளுதல் மரபு.

அகப்பொருள் துறையில் சிறந்து விளங்கும் இக்கூடல் துறையை நாயன்மார்களும் ஆழ்வார்களும் ஏனைய அடியார்களும் பக்தித்துறையிலும் எடுத்தாண்டிருப்பது நோக்கத்தக்கது.

சிறுவயதிலே ஊமையாக இருந்து, திருச்செந்தூர்ப் பெருமான் அருளினால் பேசத்தொடங்கியவர் குமரகுருபரசுவாமிகள். அவர்பாடிய பல பிரபந்தங்களில் ஒன்று மதுரைக் கலம்பகம். அதிலே கூடல் என்னும் மறு பெயருடைய மதுரையில் எழுந்தருளியிருக்கும் இறைவனை நினைத்து கூடல் இழைக்கும் காட்சி ஒன்று வருகிறது. கூடற்பதியில் உள்ள சோமசுந்தரப் பெருமான் மனதை உருக்கி என்னோடு சேராராயின் நான் இழைக்கும் கூடல் பிழைத்திடும் எனக் கூறுகிறார்.

" தழைத்திடும் கூடலார்
குழைத்துடன் கூடலார்
பிழைத்திடும் கூடலே
இழைத்திடுங் கூடலே "

என்பது மதுரைக் கலம்பகம். இப்பாடலில் இறைவன் தான் தன் மனதை உருக்கி அருள் செய்ய வேண்டும் என்னும் பிரதான கருத்து இங்கே இடம்பெறுவதைக் காணலாம், "குழைத்துடன் கூடலார்" என்னும் அடியில் இது வலியுறுத்தப்படும் அழகு பார்த்து இன்புறத்தக்கது.

"மன்னாகி நின்ற மதிசூதனனை" தன் காதலனாகக் கொண்டு மகிழ்ந்தவள் சூடிக்கொடுத்த சுடர்க்கொடியாம் ஆண்டாள். அவர் கூடற்குறிப்பு என்னும் தலைப்பில் பத்துப் பாடல்கள் பாடியுள்ளார், அதனுள் ஒரு பாட்டினை இங்கு நோக்குவோம், மதிசூதனனுக்குரிய பல நாமங்களுக்குள் ஒன்று கோவலன் என்பது. அந்த நாமம் அவர்கன்று மேய்த்து விளையாடிய அந்தப் பருவத்தை நினைவூட்டும். துவாரபதிக் காவலனாகியும் சிலகாலம் வசித்தார். அவரோ தம் மனத்து அன்புடையார் மாட்டன்றி

மற்றையோர் மனதுள் சென்று சேரமாட்டார். ஆனுல் அவர் நம்மை வந்தடைய வேண்டுமென நாம் பிரார்த்திக்கிறேம், நம் பிரார்த்தனைக்கு அவர் இரங்கி நம்மை வந்து கூடுவாராயின் கூடலே நீ கூடு எனக்கூறி ஆண்டாள் கூடல் இழைக்கும் திறன் படித்து மகிழ்தற்குரியது.

"ஆவலன் புடையார் தம்மனத் தன்றி
மேவலன் விரைசூழ் துவாரபதிக்
காவலன் கன்று மேய்த்து விளையாடும்
கோவலன் வரிற்கூ டிடுகூடலே"

திருமருகல் என்பது ஒரு சிவஸ்தலம். அங்கு எழுந்தருளி யுள்ள பெருமானை ஒரு பேதைப்பெண் கண்டாள். அவளுக்கு அப்பெருமான் மீது காதலுண்டாயது. அந்த இறைவன் வீதி வலம்வரும்போது அந்த வீதியருகே போய் நிற்பாள். நெஞ்சுள் அப்பெருமான் வடிவை நினைந்து உருகுவாள். அந்த மயக்கத் தோடு ஓடிச்செல்வாள். நீண்ட மாடங்கள் வரிசையாயுள்ள அழகிய மருகற் பதியில் உள்ள பெருமான் நம்மைக்கூட வருவாரா என கூடல் இழைத்துப் பார்ப்பாள்.

இச்செயல்களை யெல்லாம் அப்பேதைப் பருவப்பெண்ணின் தாய் காண்கிருள். இறைவனே என் மகள் படும் பாட்டைப் பார். அவளுக்கு நீ கருணை காட்டவேண்டும் என இறைவனை நோக்கி இரக்கத்துடன் கூறுகிருள்.

திருநாவுக்கரசர் பாடிய இந்தக் கூடல் இழைக்கும் பாடல் அடியார்கள் இறைவனிடத்தில் கொண்ட அன்பு நிலையையே காட்டுவதாகும்.

"நீடு நெஞ்சுள் நினைந்து கண்ணீர் மல்கும்
ஓடு மாலினேடு டொண்டொடி மாதராள்
மாட நீள்மருகற்பெரு மான்வரில்
கூடு நீயென்று கூடல் இழைக்குமே."